Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 31 வியாழக்கிழமை (15-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:233

## அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான

# சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க தந்திரோபாய உத்தியில் நோர்வே தரப்பு

## சமரசத் திட்டத்தையும் முன்வைக்க முயற்சி

கொழும்பு,ஜூலை15

**அரசையும் - விடுதலைப் புலிகளையும் சமாதானப் பேச்சு மேசைக்கு இழுத்து வருவதற்கான சமரசத் திட்டம் ஒன்றைத் தாங்களே முன்வைத்து அதற்கு சம்பந்தப்பட்ட இருதரப்பையும் இணங்கவைக்கும் தந்திரோபாய முயற்சியில் நோர்வே அனுசரணையாளர்கள் தற்போது ஈடுபட்டிருக்கின்றனர் - விடயமறிந்த வட்டாரங்கள் இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றன.**

இதுவிடயமாக இலங்கை அரசுத் தரப்புடன் ஏற்கனவே நோர்வேத் தரப்பு கோடிகாட்டிப் பேசிவிட்டதாகவும் -

இந்தத் திட்டத்தின் பின்னணியுடன்தான் நேற்றுமுன்தினம் கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச சந்தித்தார் எனவும் கூறப்படுகின்றது.

இடைக்கால நிர்வாகம் குறித்து மட்டுமே முதலில் பேசப்பட வேண்டும் என புலிகள் வலியுறுத்துகின்றனர்.

ஆனால், தனது கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியை மீறி அத்தகைய பேச்சுக்குப் போகமுடியாதவராக - கையாலாகாதவராக - தவிக்கிறார் அரசுத் தலைவி ஜனாதிபதி குமாரதுங்க.

இந்த இழுபறியில் பேச்சுத் தொடங்குவது தாமதமாகிவருகிறது; சாத்தியமற்றதாகிவருகிறது.

இவ்வாறு பேச்சு ஆரம்பிக்காமல் காலம் இழுபடுவது யுத்த நிறுத்தம் நின்று நிலைத்து நீடிப்பதையும் கூட சந்தேகத்துக்கும் கேள்விக்கும் உள்ளாக்கியுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கு வழிகாட்ட கட்சிப் பிரதிநிதிகள் குழு

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்ல ஆளுங்கட்சியினர் ஏகமனதாக முடிவுசெய்துள்ளனர்.

சமாதான முயற்சிகள் தொடர்பாக உரிய ஆலோசனை வழங்குவதற்கு நடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஓர் ஆலோசனைச் சபையையும் அரசு நியமிக்கும்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சை ஆரம்பிக்க புலிகள் ஆர்வம்

கொழும்பு,ஜூலை15

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் மற்றும் யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து அமுல்படுத்துவதில் விடுதலைப் புலிகள் மிகுந்த பற்றுறுதியுடன் உள்ளனர்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம்.

ஆஸ்திரேலியா பிரதித்தூதுவர் ஹேரட் வோஹனை நேற்றுச் சந்தித்துப் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# பிரதம நீதியரசர் யாழ். வந்தார் வளாகத்துக்கு அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம்,ஜூலை15

யாழ். நீதிமன்ற வளாகத்துக்கான அடிக்கல்லை பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா நேற்று முற்பகல் 10.45 மணிக்கு சுபவேளையில் சம்பிரதாய பூர்வமாக நட்டார்.

ஒருநாள் விஜயம் மேற்கொண்டு நேற்றுக் காலை விசேட விமானம் மூலம் பலாலி வந்தடைந்த நீதியரசரை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா தலைமையில் நீதிபதிகளும் யாழ். அரச அதிபரும் பலாலியில் வைத்து வரவேற்றனர். அதன் பின் யாழ் மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜாவின் இல்லத்தில் காலை விருந்தை முடித்துக்கொண்ட பிரதம நீதியரசர், முற்பகல் 10.00 மணிக்கு மேல் நீதிமன்றத்திற்குச் சென்றார்.

அங்கு பொலீஸார் அளித்த அணிவகுப்பு மரியாதையை பிரதம நீதியரசர் ஏற்றுக்கொண்டார். அதைத் தொடர்ந்து புதிய நீதிமன்ற வளாகப்பகுதிக்குச் சென்ற பிரதம நீதியரசர் முதலாம் குறுக்குச்சந்தியில் இருந்து பாண்ட் வாத்திய இசையுடன் ஊர்வலமாக வளாகப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கு மங்கள இசை முழங்க பிரதம நீதியரசர் அடிக்கல்லை நட்டார். அவரைத் தொடர்ந்து நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பி.டபிள்யூ.டி.ஜெயதிலக, நீதியமைச்சின் செயலாளர் எஸ்.கே.ஹம்லத், சட்டம், நீதி, புனரமைப்புக்குழுவின் இயக்குநர் சுமித்திரா

(12ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் நேற்று விபத்து: ஒருவர் பலி; ஆறு பேர் காயம்!

### பிரான்ஸிலிருந்து வந்த குடும்பமும் சிக்கியது

யாழ்ப்பாணம்,ஜூலை15

பிரான்ஸிலிருந்து வருகை தந்த குடும்பத்தினர் பயணித்த முச்சக்கர வண்டியும், சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் சைக்கிளோட்டி அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். முச்சக்கர வண்டியின் சாரதி உட்பட அதில் பயணித்த 6 பேர் காயமடைந்தனர்.

நல்லூர் சட்டநாதர் சிவன் கோயிலடிக்கு அண்மையில் நேற்று பிற்பகலில் இடம்பெற்ற இந்த விபத்தில் திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஸ்ரீராமலிங்கம் (வயது-62) என்பவரே உயிரிழந்தவராவார்.

பிரான்ஸில் இருந்து வந்த உரும்பிராய் மேற்கு பகுதியைச் சேர்ந்தவர்களான இராஜரட்ணம் உதயசுதன் (வயது-36), அவர் மனைவி உதயசுதன் புஸ்பலதா (வயது-34), பிள்ளைகளான உ.சிந்துஜா (வயது-07), உ.செந்தூரன் (வயது-05) இவர்களின் உறவினர்களான பருத்தித்துறையைச் சேர்ந்த ஜனார்த்தனன் மதிவாணன் (வயது-26), முச்சக்கரவண்டிச்சாரதி, அவரின மனைவி ம.சுபாஜினி (வயது-25) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

முச்சக்கர வண்டியில் இருந்த 7 மாதக் குழந்தை ஒன்று தெய்வாதீனமாக காயம் ஏதுமினறி உயிர்தப்பிக் கொண்டது. நல்லூரில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவின் நெருங்கிய சகா புலிகளின் தாக்குதலில் பலி!

### மேலும் இருவர் காயம்; புணானையில் சம்பவம்

கருணாவுக்கு மிக நெருக்கமான சகா ஒருவர் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டார். அவரின் மற்றும் இரு சகாக்கள் படுகாயமடைநதனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் நேற்று மதியம் 2.45 மணிக்கு மட்டக்களப்பு - பொலன்னறுவை வீதியின் தெற்குப் பகுதியான புணானையில் இடம்பெற்றது. உயிரிழந்தவரின் சடலம் மற்றும் ரி.56 ரக துப்பாக்கி, 9 மி.மீ கைத்துப்பாக்கி, கைத்தொலைபேசி என்பன கைப்பறறப்பட்டுள்ளன என்று புலிகள் தெரிவித்தனர். காட்டில் தரித்திருந்து தாக்கும் புலிகளின் விஷேட படைப்பிரிவினருக்கு பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து, அப்பிரிவு பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலிலேயே கருணாவின் சகா இறந்தார் என்றும் - மேலும் இருவர் படுகாயமடைந்தனர் என்றும் - புலிகள் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஏனையவர்களைத் தேடும் பணி தொடர்கின்றது என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் அரச படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பொலன்னறுவை மாவட்டத்தின எல்லையோரப் பிரதேசத்திலேயே கருணா தரப்பினர் செயற்பட்டுவருகின்றனர் என்றும் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (எ-க-9)

# நிலக்கண்ணிவெடித் தடை ஒப்பந்தத்தில் அரசும் புலிகளும் கைச்சாத்திட வேண்டும்

### கண்ணிவெடித்தடை ஆதரவுச் சபை வலியுறுத்து

கொழும்பு,ஜூலை15

நிலக்கண்ணி வெடித்தடை தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்தில் இலங்கை அரசும், புலிகளும் கைச்சாத்திட வேண்டும் என நிலக்கணணி வெடித் தடை ஆதரவு சபை வலியுறுத்தியுள்ளது.

ஆள்களுக்கு எதிராக நிலக்கண்ணி வெடிகளைப் பயன்படுத்துதல் மற்றும் நிலக்கண்ணி வெடிகளைச் சேகரித்தல் ஆகிய இரு நடவடிக்கைகளையும் தடைசெய்யும் ஒப்பந்தத்தில் அரசும் புலிகளும் கைச்சாத்திட வேண்டும் என்பதே இந்த அமைப்பின் பிரதான நோக்கமாகும்.

இதனை முன்னிட்டு ஏற்பாடுசெய்யப்பட்டபட்டறை, நேற்றுக்காலை இலங்கை சர்வதேச தொடர்புகள் மையத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சர்வதேச வழங்குநர்கள், மனிதநேய உதவு முகவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் போன்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய கண்ணிவெடித் தடை ஆதரவு சபையின் பிரதிப பணிப்பாளர் ஜோன் குணரத்ன அமைப்பின் அறிக்கையை வாசித்தார். அதன் விவரம் வருமாறு:-

ஏனைய ஆயுதங்களைப் போல் அல்லாது சமாதான வேளைகளிலும் கூட தனி மனிதர்களுக்கும், பொதுமக்களுக்கும் பேராபத்தை ஏற்படுத்தும் நிலக் கண்ணிவெடிகளின் பாவனை நிறுத்தப்படவேண்டும்.

இதன் அடிப்படையில் ஆள்களுக்கு எதிராகக் கண்ணிவெடிகளைப் பயன்படுத்தும் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுமாறு அரசுக்கும் புலிகளுக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

இதன் மூலம் நாட்டு மக்களிடையே காணப்படும் கண்ணிவெடி அபாயம் தொடர்பான அச்சமும், பீதியும் ஒழிக்கப்படும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வாரப்பத்திரிகை தீக்கிரை

யாழ்ப்பாணம்,ஜூலை15

கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டு யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்படுகின்ற வாரப்பத்திரிகை ஒன்றின் பிரதிகள், திருநெல்வேலிப் பகுதியில் வைத்து நேற்றுமுன்இரவு வேளையில் இனந்தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி கிழக்கு, பூதவராயர் கோயில் பகுதியில் நேற்றிரவு 8 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பத்திரிகைப் பிரதிகளை மோட்டார்சைக்கிளில் எடுத்துவந்த ஒருவரை வழிமறித்த இளை

(12ஆம் பக்கம் பார்க்க)

# அழிவுகளின் சாம்பலில் இருந்து உயிர்த்தெழ ஒன்றிணைவோம்!

## பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா யாழ். நகரில் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஜுலை15

மகத்தான ஒரு நாகரிகத்தின் திருவீடாக இருந்த இந்த மண்ணில் கடந்த கால கவலைக குரிய சம்பவங்கள் அழிவுகளைக் கொண்டு வந்தன. இந்த அழிவுகள், மரணங்களின் சாம்பலில் இருந்து உயிர்த்தெழவேண்டிய ஒருமித்த கடமை இப்போது எங்களைச் சார்ந்துள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா.

யாழ்ப்பாணத்தில் புதிய நீதிமன்ற வளாகக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடுவதற்காக வந்திருந்த அவர், யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் உரையாற்றினார்.

படங்கள் III ஆம் பக்கத்தில்

அவர் தனது உரையில் கூறியதாவது:-

இந்தமண் மகத்தானதொரு நாகரிகத்தின் திருவீடாக இருந்துள்ளது. இங்கே கலாசாரப் பாரம்பரியங்களோடும், உயர்ந்த அறிவாற்றல்களோடும், அமைதியாகவும் சௌஜன்யமாகவும் மக்கள் வாழ்ந்துள்ளார்கள்.

கடந்தகால கவலைக்குரிய சம்பவங்கள் அழிவுகளைக் கொண்டுவந்துள்ளன. இந்த மண் இரத்தத்தால் தோய்ந்து போயுள்ளது.

எமது நாடு அதன் அழகிற்கும் இயற்கை வளங்களுக்கும், பல்வேறு கலாசார விழுமியங்களுக்கும் அன்புக்கும் விருந்தோம்பும் பண்புக்கும் பெருமைபெற்றிருந்தது. அவையாவும் இனச்சிக்கல்கள், வன்செயல்கள், இரத்தக்கறைகள் மரணங்கள் மற்றும் அழிவுகளால் களங்கப்பட்டுக் கிடக்கின்றன.

இந்த அழிவுகள் மரணங்களின் சாம்பலிருந்து உயிர்த்தெழவேண்டிய ஒருமித்த கடமை ஒன்று இப்பொழுது எங்களைச்சார்ந்துள்ளது. எமது காலத்தில் அழிக்கப்பட்டுவிட்டவைகளை, இழந்துவிட்டவைகளை நாம் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டியவர்களாயிருக்கின்றோம்.

இந்த வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த நிகழ்வுகளில் இந்த நாட்டின் பிரதம நீதியரசர் என்ற முறையில் கலந்துகொள்ள வந்தேன் என்று சொல்வதைவிட ஒரு நண்பனாக வந்துளளேன் என்றே கூறவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் நீதிவான்களின் நண்பனாக, சட்டத்தரணிகளின் நண்பனாக, நமது நீதிமன்றங்களில் பணிபுரிபவர்களின் நண்பனாக, எல்லாவற்றுக்கும் மேலாக யாழ்ப்பாணத்து மக்களின் நண்பனாக நான் வந்துள்ளேன்.

நீதிமன்றத்துறை அரசியல் நடவடிக்கைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. தனிப்பட்ட முறையில் ஒரு கருத்தைச் சொல்வது அவசியம் என்று கருதுகின்றேன்.

நான் ஓர் அரசியல்வாதி அல்ல. ஒருபோதும் அரசியல்வாதியாக இருந்ததில்லை; ஒருபோதும இருக்கப்போவதுமில்லை. அந்த உணர்வுடனேயே உங்கள் அழைப்பை ஏற்று இந்த அடிக்கல்லை நட்டுவைக்கின்றேன்.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் பி.டபிள்யூ.டி.சி.ஜெயதிலக, நீதியமைச்சுச் செயலர் எஸ்.கே.ஹம்லத், சட்டம், நீதி புனரமைப்புக் குழுவின் இயக்குநர் சுமித்ரா குணவர்த்தனா, யாழ். நீதிபதி இ.த.விக்னராஜா ஆகியோர் உரையாற்றினர்.

யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவர்கள் செல்வி சாந்த அபிமன்னசிங்கம் நன்றி கூறினார். (ஐ-ப-3)

# மினிபஸ்ஸால் இறக்கிவிடப்பட்ட தந்தையைத் தேடிய சிறுமி

யாழ்ப்பாணம்,ஜுலை15

மினிபஸ்ஸில் ஏறிய தந்தையை பஸ்நடத்துனர் நுணாவிலில் இறக்கிவிட்டுச் சென்றதை அறியாத சிறுமி யாழ்.நகரில் அந்தரித்த சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது.

கொடிகாமத்திலிருந்து வந்த மினிபஸ்ஸில் தந்தையும் மகளும் ஏறியதாகவும், மினிபஸ்ஸினுள் அதிகளவு பயணிகளை ஏற்றுவது பற்றி நடத்துநருக்கும் குறிப்பிட்ட சிறுமியின் தந்தைக்கும் இடையில் ஏற்பட்டதாகத் தெரிவிக்கும் வாய்த்தர்க்கத்தை அடுத்து நுணாவில் சந்தியில் வைத்து சிறுமியின் தந்தை பஸ்ஸில் இருந்து பலவந்தமாக இறக்கிவிடப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இதனை அறியாத மகள் யாழ்.பஸ்நிலையத்தில் (வைரவர் கோவிலுக்கு முன்பாக) இறங்கியதும் தந்தையைக்காணாது பஸ்நிலையத்திற்கும் - வைரவர் கோவிலுக்குமிடையில் அழுதவண்ணம் திரிந்ததாகவும் அடுத்த பஸ்ஸில் அங்கு வந்து இறங்கிய தந்தை மகளைத தேடிக்கண்டுபிடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ)

# பொது அமைப்புக்களின் ஒன்றிய நடுவப் பணிமனை நேற்றுத் திறப்பு

யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்திற்கான நடுவப்பணிமனை. யாழ் கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் நேற்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் ப.கனகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன் நாடவெட்டிப் புதிய பணிமனையைத் திறந்துவைத்தார்.

பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன், யாழ். மாவட்ட எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில் மற்றும் மாவீரர் தம்பிராசாவின் தந்தையார் உட்படப் பலர் ஏற்றிவைத்தனர். அலுவலகப் பெயர்ப்பலகையினை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம் திரைநீக்கம் செய்துவைத்தார்.

வாழ்த்துரைகளை மௌலவி சுபைதீன், வைத்தியகலாநிதி, லயன் எஸ்.எஸ்.அருளானந்தம் ஆகியோரும், சிறப்புரைகளை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவனேசன், மா.க.ஈழவேந்தன் ஆகியோரும், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வகுமார், கிராமிய உழைப்பாளர் சங்கப் பிரதிநிதி எஸ்.தங்கராசா, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.மாவட்டத் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா, வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் துரை. சத்தியசீலன் உட்பட பலர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்டத்திலுள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-5-86)




யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் நடுவப்பணியகம் கே.கே.எஸ்.வீதியில் - மனோகராச் சந்திக்கு அண்மையில் நேற்று திறந்துவைக்கப்பட்டது. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம் பணிமனையின் பெயர்ப்பலகையைத் திறந்துவைப்பதையும் மௌலவி சுபைதீன் உரைநிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம். நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவனேசன் , மா.க.ஈழவேந்தன் ஆகியோரும் படத்தில் உள்ளனர். *(படங்கள்: வசந்தன்)*

# ஜாதிக ஹெல உறுமய கட்சியில் அடக்கி வாசிக்கின்றார் திலக்!

ஜாதிக ஹெல உறுமயவின் அனைத்து அதிகாரப் பொறுப்புக்களில் இருந்தும் தாம் விலகியுள்ளார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரான திலக் கருணாரட்ண, கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கருத்து வேறுபாடு காரணமாக அனைத்து அதிகாரப் பொறுப்புக்களில் இருந்தும் தம்மை விலக்கிக்கொள்கின்றார் எனத் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பௌத்த பிக்குமாரின் நடவடிக்கைகளினால் அதிருப்தியடைந்த நிலையிலேயே திலக் கருணாரட்ண தனது பொறுப்புக்களில் இருந்து விலகியுள்ளார் என அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் தாம் இணைந்து கொள்ளவுள்ளார் என வெளியாகியுள்ள ஊடகச் செய்திகளில் எதுவித உண்மையுமில்லை எனக்கூறிய திலக் கருணாரட்ண, தொடர்ந்தும் ஜாதிக ஹெல உறுமயவின் அடிப்படை உறுப்பினராகத் தாம் இருப்பார் எனவும் தெரிவித்துள்ளார். (க)

# இலங்கை அரச பயங்கரவாதத்துக்கு கனடா அரசு ஆதரவளிக்கிறதா?

## தமிழ்ப்படைப்பாளிகள் கழகம் எழுப்பியுள்ள கேள்வி

ஒட்டாவா,ஜுலை15

நாகரிகம் படைத்த சமூகங்களில் வன்முறை என்பது வரவேற்கக்கூடியதல்ல, கண்டிக்கப்படவேண்டியதுதான். அதேசமயம், கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் போராளிகளும், பொதுமக்களும் கொலைசெய்யப்பட்டிருப்பதும் அதேவிதமாகக் கண்டிக்கப்படவேண்டியவைகளே என்று கனடாவில் இயங்கும் தமிழ்ப்படைப்பாளிகள் கழகம் அந்நாட்டு வெளிநாட்டு அமைச்சர் பில் கிரஹமுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பில் கடந்த ஏழாம் திகதி இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலை அமைச்சர் கண்டித்திருப்பது தொடர்பாக அவருக்கு மேற்படி கழகம் எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே இவ்வாறு கூறியுள்ளது.

ஸ்ரீலங்கா அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்பாட்டுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள மேற்படி கொலைகள் நாட்டின் அமைதியைக் கெடுப்பவையாக இருந்தபோதிலும் அவைகள் பற்றி அமைச்சர் எதுவும் சொல்லாமல் விட்டிருப்பது குறித்து கழகம் கவலை தெரிவித்துள்ளது.

மேலும், கிழக்கு மாகாணத்தில் கடந்த சில மாதங்களாக விடுதலைப் புலிகளின் போராளிகள் கொல்லப்பட்டுள்ள பல சம்பவங்களையும் திகதிகளையும் கழகம் தனது கடித்தில் அமைச்சருக்கு எடுத்துக்காட்டியுள்ளது. இலங்கை அரசு நடைபெறும் பயங்கரவாதத்துக்கு ஆதரவாக இருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம் என்றும் கழகம் தனது கடித்தில் தெரிவித்துள்ளது. (ப)

# கத்தோலிக்கர்கள் நேற்று மன்னாரில் கண்டனப் பேரணி

மன்னார்,ஜுலை15

இணையத்தளம் ஒன்றில் கத்தோலிக்க மதம் இழிவுபடுத்தப்பட்டதைக் கண்டித்து நேற்று மன்னாரில் கத்தோலிக்க மக்கள் கண்டனப் பேரணியொன்றை நடத்தினர்.

சூரியன் என்ற பெயரில் இயங்கும் (சூரியன் எவ்.எம்.அல்ல) இணையத்தளத்தில் கத்தோலிக்க மதத்தை இழிவுபடுத்தியும், மடுமாதா மற்றும் மதகுருக்களைக் கொச்சைப்படுத்தியும் வெளியிடப்பட்ட தகவல்கள் கத்தோலிக்கர்களின் மனதைப் புண்படுத்தியிருக்கின்றது எனக் கூறப்பட்டது.

இதனால், கத்தோலிக்க அமைப்புக்களின் ஏற்பாட்டில் இக்கண்டனப் பேரணி அமைதியான முறையில் நடத்தப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றினர்.

மன்னார் செபஸ்தியார் தேவாலயத்திலிருந்து காலை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆரம்பமான கண்டனப் பேரணி, மன்னார் கச்சேரியைச் சென்றடைந்தது. அங்கு மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கத்திடம் இதுதொடர்பான மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (க)

# காரைநகர் வைத்தியசாலையில் இடநெருக்கடி,ஆளணிப்பற்றாக்குறை

## நோயாளர்கள் வேறு இடங்களுக்கு மாற்றம்

காரைநகர் வைத்தியசாலையில் நெருப்புக் காய்ச்சல் காரணமாக சிகிச்சை பெறவரும் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதையடுத்து வைத்தியசாலையில் இடநெருக்கடி மற்றும் ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சில நாள்களாக காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானோர் இந்த வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் 46 பேர் நெருப்புக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை -

மேற்படி வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்குரிய வசதிகள் இன்மை மற்றும் ஆளணிப் பற்றாக்குறை காரணமாக நோயாளர்கள் சங்கானை மற்றும் மானிப்பாய் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் - கூறப்பட்டது.

காரைநகர் வைத்தியசாலை விடுதியில் 24 பேர் மட்டுமே தங்கிச் சிகிச்சைபெறக்கூடிய வசதியுள்ளது. ஆனால், இங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட பெருமளவு நோயாளர்கள் குடும்பமாகவே தங்கிச் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதனால், இடப்பற்றாக்குறை காரணமாக குடும்ப அங்கத்தவர்கள் பலர் ஒரே கட்டிலில் இருந்தும் மற்றும் விடுதி விறாந்தைகளிலிருந்தும் சிகிச்சை பெறுவதைக் காணமுடிகின்றது.

வைத்தியசாலையின் வளப்பற்றாக்குறை, தாதியர் பற்றாக்குறை தொடர்பாக மாவட்ட சுகாதார பணிப்பாளருக்கு அறிவித்திருப்பதாக வைத்திய அதிகாரி திருமதி எஸ்.கனகசபை தெரிவித்தார்.

காரைநகர் பகுதியில் பரவிவரும் புதுவித காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்காக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான குழுவினர் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருவதுடன், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் ஒலிபெருக்கிமூலம் பிரசாரம் செய்து வருகின்றனர். (எ-73)

# எதிர்க்கட்சிகளின் கூட்டம் இன்று

எதிர்க்கட்சிகளின் முக்கிய கூட்டமொன்று இன்று நடைபெறுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் ஐ.தே.முன்னணியில் அங்கம் வகிக்கும், கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொள்வர்.

மாகாணசபைத் தேர்தலில் பின்னடைவை சந்தித்துள்ள ஐ.தே.முன்னணி எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய அரசியல் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காகவே அவசரமாக இக்கூட்டம் கூட்டப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றக் குழு அறையில் நடைபெறும் இக்கூட்டத்தில் முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்படும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்க்கட்சியில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட சாபநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டாரவை, கௌரவமாக சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்யும்படி ஜே.வி.பியினர் பகிரங்கமாகக் கூறிவருகின்றனர். அப்படி அவர் செய்யாவிட்டால் அவரை இராஜினாமாச் செய்யவைப்போம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்படியான ஒரு சூழ்நிலைக்கு மத்தியில் எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது நாடாளுமன்றில் எதிர்க்கட்சிகள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (க)

உதயன்

## வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில்!

அரசும், அரசுப்படைகளும் எடுத்துவரும் நடவடிக்கைகளால் யுத்தநிறுத்த நிலைமை மோசமடைந்து சீர்கெட்டு வருகின்றது என்ற புலிகளின் எச்சரிக்கை நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு வருகைதந்த நோர்வே அனுசரணைக் குழுவின் பிரதிநிதியும் கொழும்புக்கான நோர்வேத் தூதுவருமான ஹான்ஸ் பிரட்ஸ்கர் மூலமாக இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அதேசமயம் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான விவகாரம் குறித்து அரசுத் தலைவி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன்தினம் மாலை தமது அரசின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களோடு விரிவாகப் பேச்சுநடத்தினார் என்று ஒரு செய்தி வெளியாகியிருக்கின்றது.

மாகாணசபைத் தேர்தலில் வெற்றியீட்டிய தமது கூட்டமைப்பின் சார்பில் மாகாண முதலமைச்சர்களாகவும், மாகாண அமைச்சர்களாகவும் பதவியேற்கப் போகின்றவர்கள், யார் யார் என்பது குறித்து ஆராய்ந்து முடிவுசெய்வதற்காக இந்தக் கூட்டத்தை ஜனாதிபதி கூட்டியிருந்தார். அதிலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வுக்காண்பது தொடர்பான சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது குறித்தும் ஆராயப்பட்டதாம். அங்கு ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பாக கசிந்துள்ள தகவல்கள் "மீண்டும் வேதாளம் முருங்கைமரத்தில் ஏறிவிட்டதோ" என்ற நிலைப்பாட்டை - எண்ணத்தை உருவாக்குவதாக அமைந்துள்ளன.

அங்கு பரிமாறிக்கொள்ளப்பட்ட விடயங்களை இரண்டு அம்சங்களாகச் சுட்டிக்காட்டுகின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

★ அமைதிப் பேச்சுக்களை ஆக்கபூர்வமாக முன்னெடுப்பது குறித்து ஏனைய கட்சிகளினதும் - தரப்புகளினதும் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக்கொள்வதற்காக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளைக்கொண்ட ஆலோசனைச் சபை ஒன்று அமைக்கப்படும். அதேவேளை, அக்கட்சிகளின் தலைவர்களை அழைத்து ஜனாதிபதி பேச்சு நடத்துவார். எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவையும், ஜனாதிபதி விரைவில் அழைத்துச் சமாதான முயற்சிகள் குறித்துக் கலந்துரையாடுவார்.

★ விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள யோசனைப்படி இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பேசுவது ஒருபுறம் நடக்க, 2000ஆம் ஆண்டில் தாம் முன்வைத்த அதிகாரப் பரவலாக்கத்திற்கான அரசமைப்புச் சீர்திருத்த நகலின் அடிப்படையில் தீர்வுக்கான பேச்சுக்களையும் மறுபுறத்தல் நடத்துவது குறித்தும் முடிவுசெய்ய வேண்டும்.

- இவையிரண்டுமே நேற்றுமுன்தினம் நடந்த அரசுத் தரப்புக் கட்சிகளின் கூட்டத்தில் ஆராயப்பட்ட அம்சங்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றை நோக்கும்போது அரசு மீண்டும் பழைய பல்லவியில் இறங்கிவிட்டது என்பது துலாம்பரம்ஆகின்றது.

அமைதிப்பேச்சுக்களை மீண்டும் விட்ட இடத்திலிருந்து புதிய அரசுடன் ஆரம்பிப்பதற்கு அடிப்படை அம்சங்களாக 4 விடயங்களைப் புலிகள் குறிப்பிட்டிருந்தனர். அந்த விடயங்கள் தொடர்பில் புலிகள் விடாப்பிடியாக - உறுதியாக இருக்கின்றார்கள் என்பதும் தெளிவு.

இடைக்கால நிர்வாகம் குறித்தே முதலில் பேசவேண்டும் என்பதும், புலிகளுக்குச் சம அந்தஸ்து வழங்கி அதேசமயம் புலிகளுடன் மட்டும் - பேசவேண்டும் என்பதும் அவற்றில் அடங்கும்.

இப்போது பல கட்சித் தலைவர்களுடனும் ஆலோசனைக் கூட்டம், சமாதானப் பேச்சுக்களை வழிநடத்த ஆலோசனைக் குழு என்றெல்லாம் புதிய 'புருடாக்கள்' பிறக்கின்றன.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்துப் பேசுவதை விடுத்து, 2000ஆம் ஆண்டில் தான் கொண்டு வந்து, அப்போதைய அற்ப ஆயுளில் செத்துப்போன, தனது அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகளுக்கு மீண்டும் உயிர்கொடுத்துத் தூக்கிப் பிடிக்கத் தயாராகின்றார் ஜனாதிபதி.

இவை, அமைதிப் பேச்சுக்கள் மீண்டும் துளிர்ப்பதற்கான வாய்ப்புகள் கருகி வருவதையே காட்டுகின்றன என்று கருதவேண்டியுள்ளது.

அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்காமலேயே காலத்தை இழுத்தடிப்பதன் மூலம் ஆட்சியைக் கொண்டிழுக்கும் அரச தந்திரோபாயத்தின் வெளிப்பாடே இவ்வாறு பல தரப்பையும் இவ்விகாரத்துக்குள் இழுத்துப்போடும் முயற்சி என்றும் எண்ண வேண்டியுள்ளது.

தென்னிலங்கை அரசியல் அதிகாரப் போட்டியில் வெற்றிபெறுவதற்காக இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணக்கிடைத்த இத்தகைய அரிய வாய்ப்பை இப்படிப் பலிகொடுக்க தெற்கு அரசயல் தலைமை தயாரானால் விளைவு, முழு நாட்டையுமே காவு கொண்டுவிடும். அதுதான் இந்த நாட்டின் துரதிர்ஷ்டம் போலும்.

# போருக்கான தயார்ப்படுத்தல்கள் அரசின் போக்கைக் கண்டிக்கின்றோம்!

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜுலை15

சமாதானத்தின் மீது தமிழ் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையைச் சீரகுலைக்கும் வகையில் அரசு போருக்கான தயார்ப்படுத்தல்களில் ஈடுபட்டு வருகிறது. அரசின் இந்தப் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம் - யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சமாதானத்தின் மீது தமிழ் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையைச் சீரழிக்கும் நோக்குடன் செயற்பட்டுக்கொண்டிருக்கும் சிங்கள ஆட்சியாளர்களின் பொறுப்பற்ற செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கின்றோம். எமது மக்களுக்கு ஒரு நிலையான, நீதியான தீர்வினைக் கொடுக்க முன்வராமல், போர் நிறுத்தம் என்ற போர்வையில் தமிழ் இனத்தின் விடுதலையை இழுத்தடித்துக்கொண்டு போகும் இந்த நிலையை மக்களாகிய நாம் இனியும் அனுமதிக்கப் போவதில்லை. போரினைத் தொடங்குவதற்காக இராணுவத்தினைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளையே சிங்கள அரசு முன்னெடுத்துச் செல்கின்றது. அந்த வகையில்தான், 12.07.2004 அன்றையதினம் முகமாலை முன்னரங்க காவல் நிலைகளைப் பாதுகாப்புப் பிரதியமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க பார்வையிட்டுச் சென்றுள்ளார். அத்துடன், யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவத்தினருக்குப் பயிற்சி அளிப்பதில் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் முனைப்பாகச் செயற்படுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் எதனை வெளிப்படுத்துகின்றன? சமாதானம், சமாதானம் என தென்னிலங்கையின் ஆட்சியில் நிற்கும் அரசியல் பீடங்கள் கூறிக்கொண்டு தமிழர் தாயகப் பகுதியில் உள்ள இராணுவ நிலைகளைப் பலப்படுத்துவதன் அர்த்தம் என்ன?

தீர்வினை எதிர்பார்த்து நிற்கும் மக்களின் சமாதானம் தொடர்பான நம்பிக்கையை தகர்த்தெறியும் நடவடிக்கையாகவே நாம் கருகின்றோம். எமது தமிழ் மக்களைத் தொடர்ந்தும் அடக்குமுறைக்குள் உள்ளாக்குவதும் எமது மக்களின் உரிமையைக் கொடுக்க மறுப்பதும் காலத்திற்குக் காலம் ஆட்சி மாறிவரும் சிங்கள ஆட்சியாளர்களின் கொள்கையாகத்தான் இருந்து வருகின்றது.

இந்தக் கொள்கையையே இன்றைய ஆட்சியாளர்களும் பின்பற்றி வருகின்றார்கள் என்பதுதான் வெளிப்படையானாலும், கசப்பானதுமான உண்மை. எமது மண்ணில் நாம் சுதந்திரமாக, சுபீட்சமாக வாழ்வதையே விருமபுகின்றோம். திட்டமிடப்பட்ட சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களின் அடக்குமுறைகள் இனியும் எம்மண்ணில் வேண்டாம். எமது மக்களுக்கு இயல்பு நிலையைத் தோற்றுவிக்க வேண்டிய அரசு சமாதானத்தின் மீதான நம்பிக்கையை நிலைகுலையவைத்து போரிற்கான ஆயத்தங்களை மேற்கொள்வதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் - இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி பிரத்தியேக வேலைத் திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜுலை15

உள்ளூராட்சி வாரம் எதிர்வரும் 19ஆம திகதிமுதல் 25ஆம் திகதிவரை யாழ். குடாநாட்டில் கொண்டாடப்படவுள்ளது.

அதனையொட்டி யாழ். மாநகர சபை உட்பட அனைத்து உள்ளூராட்சி அமைப்புகளாலும் சிரமதானம் உட்படப் பல்வேறு வேலைத் திட்டங்கள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

உள்ளூராட்சி வாரத்திலுள்ள ஒவ்வொரு தினங்களிலும் மக்களுக்குப் பயன்படக் கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன என்று யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளர் கே.இராசையா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் முதலாவது நாள் சுகாதாரமும் சுத்திகரிப்புக்கும் உரிய நாளாகப் பெயரிட்டுள்ளது. இத்தினத்தில் நகரைச் சுத்திகரித்தல், அலங்காரம் செய்தல், டெங்கு மற்றும் மலேரியா முதலிய நோய்களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சுகாதார சிகிச்சை நிலையங்கள் நடத்துதல் ஆகிய செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இரண்டாம் நாள் கல்விச் செயற்பாடுகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தினத்தில் மாநகரசபை, நகரசபை மற்றும் பிரதேச சபைகளினால் நிர்வகிக்கப்படும் முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டிகள், மாணவர்களிடையே கட்டுரை மற்றும் வரைதற் போட்டிகள், கல்விக் கண்காட்சி மற்றும் கருத்தரங்குகள் ஆகியவை நடத்தப்படவுள்ளன.

மூன்றாம் நாள் திண்ம முகாமைத்துவக் கழிவுகளை அகற்றுவதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நாளில் மரங்களை மீள் நடுகை செய்தல், சூழல் பாதுகாப்புக் கருத்தரங்குகள் நடத்துதல், சிரமதானம் என்பன முன்னெடுக்கப்படவுள்ளன.

நான்காம் நாள் அபிவிருத்திக்குரிய நாளாகப் பெயரிடப்பட்டுள்ளது. இத்தினத்தில் வீதிகளை அபிவிருத்தி செய்தல், கிராமப் புறங்களிலுள்ள மக்களின் பயன்பாட்டிலுள்ள பாதைகளைப் புனரமைத்தல், பாதுகாத்தல் போன்ற செயற்பாடுகள் இடம் பெறவுள்ளன.

5ஆம் நாள் பொது அமைப்புகள், அரச நிறுவனங்கள், சமூக அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு சிரமதானப் பணிகள் மேற்கொள்ளல், விசேடமாக நகரப் பகுதியில் பிரச்சினையாகத் திகழ்கின்ற குப்பை கூளங்களை அப்புறப்படுத்துதல், மீள் சுழற்சி, கூட்டெரு தயாரித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இறுதி நாளான 25ஆம் திகதி உள்ளூராட்சித் தினத்தையொட்டி விசேட நிகழ்வுகளும் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி அடைந்தவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-5)

## ஜேர்மன் வெளிநாட்டு அமைச்சர் வருகை

யாழ்ப்பாணம்,ஜுலை15

ஜேர்மன் நாட்டின் வெளிநாட்டு அமைச்சர் யோசிக்கா பிஷ்ஷர் உத்தியோக பூர்வமான விஜயத்தை மேற்கொண்டு நாளைமறுதினம் சனிக்கிழமை இலங்கை வரவுள்ளார்.

இலங்கையில் எதிர்வரும் 19ஆம் திகதிவரை தங்கியிருக்கும் இவர் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.(10-13)

## பட்டயக் கணக்காளர் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜுலை15

இலங்கைப் பட்டயக் கணக்காளர் பரீட்சைகள் எதிர்வரும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

## உதயவாக்கு

கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் எதற்கு.

## நாளை

ஆடி 01
வெள்ளிக்கிழமை
(16.07.2004)
திதி : சதுர்த்தசி
பகல் 03.32 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
இரவு 07.28 வரை.
சுபநேரம்: 6.00 - 7.30
ராகுகாலம்: 10.30 - 12.00
(பழைய நேரப்படி)

# பட்டப்பகலில் தங்கநகை திருட்டு

யாழ்ப்பாணம்,ஜுலை15

யாழ். கைலாச பிள்ளையார் கோவில் பகுதியில் பட்டப்பகலில் ஒருவரிடம் சுமார் 2 பவுண் எடையுடைய கைச்சங்கிலி அபகரிக்கப்பட்டது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தத் துணிகரத் திருட்டில் ஈடுபட்டனர்.

மேற்படி நபர் வெளியில் சென்றுவிட்டு முச்சக்கர வாகனமொன்றில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் வீடு திரும்பினார்.

ஒழுங்கையொன்றினுள் இருந்த தனது வீட்டுக்குச் செல்வதற்காக அவர் வீதியில் இறங்கி வாகனத்தை அனுப்பிவிட்டு ஒழுங்கைக்குள் செல்லப் புறப்பட்டார் அப்போது மோட்டர் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள், அவரை அழைத்து உரையாட முற்பட்டனர். திடீரென்று அந்த இளைஞர்களில் ஒருவர் பிரஸ்தாப நபர் கையில் அணிந்திருந்த தங்கச்சங்கிலியை அறுத்தெடுத்தார். அதனைத் தொடர்ந்து அவர்கள் மோட்டார் சைக்கிளில் ஓடித்தப்பினர். இது தொடர்பாகப் பொலீஸாரிடம் முறையிடப்பட்டது.

# நாய் பிடிக்கப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜுலை15

கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பது தொடர்பாக விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் கட்டாக்காலி நாய்களை பிடித்து அழிக்கும் நடவடிக்கைகளுக்கு 10 தொழிலாளர்களை பிரதேச சபை நிர்வாகம் நியமனம் செய்துள்ளது.

இவ்வாறு நியமிக்கப்பட்டவர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு மாநகரசபை ஊழியர்களால் பயிற்சி வழங்குவதற்கு இரு ஊழியர்களை வழங்கியுதவுமாறு கோரி சபை செயலாளர் ஆணையாளருக்குக் கடிதம் எழுதியுள்ளார். (ஒ-185)

# அதிபர் பதவியேற்க பெற்றோர்கள் எதிர்ப்பு

தென்மராட்சி,ஜுலை15

இடமாற்றம் பெற்றுச்சென்ற அதிபர் மீண்டும் தான் முன்னர் பணியாற்றிய பாடசாலையில் பதவியேற்க அப்பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் எதிர்ப்புத் தெரிவித்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிபரைப் பதவியேற்கவிடாமல் தடுத்த பெற்றோர், அவரை அப்பாடசாலைக்கு மீண்டும் அதிபராக நியமிக்க வேண்டாமென தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரிடம் மகஜர் கொடுத்துள்ளனர்.

தென்மராட்சி கிழக்கில் உள்ள மேற்படி பாடசாலையில் கடமையாற்றிய அந்த அதிபர் கடந்த முதலாம்திகதி தொடக்கம் மீசாலையில் உள்ள வித்தியாலயத்திற்கு பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டார்.

ஆனால், அவரை வித்தியாலயத்திற்கு அதிபராக நியமிக்கவேண்டாமென அந்தப் பாடசாலை மாணவர்களும் பெற்றோரும் இரு தினங்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்களின் கல்வி நிலையைக் கருத்திற்கொண்டு பதவியுயர்வு பெற்ற அதிபரின் இடமாற்றத்தினை இரண்டு மாதங்கள் ஒத்திவைக்க வலயக்கல்விப் பணிப்பாளர் தீர்மானித்தார்.

அதன் பிரகாரம் முன்னர் கடமையாற்றிய பாடசாலையிலேயே அந்த அதிபர் மீண்டும் கடந்த திங்கட்கிழமை சென்றார். அவர் வருவதாக அறிந்த பெற்றோர் அதிபருக்கு எதிர்ப்புத் தெரிவித்து மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் சாவகச்சேரிக்கு வருகை தந்து வலயக் கல்விப்பணிப்பாளரிடம் மகஜர் கொடுத்தனர். (ஒ-117)

# அகற்றிவிட்டால் ஆபத்து இல்லை!

உலகில் எயிட்ஸ் நோய் பரவுவதை கட்டுப் படுத்தும் நோக்குடன் தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் சர்வதேச மாநாடு ஒன்று ஜூலை 12 ஆம் திகதிமுதல் ஜூலை 19 ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

இந்த மாநாட்டில் எயிட்ஸ் நோய் தொடர்பான பல்வேறு முக்கிய விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்று, எயிட்ஸ்நோய், 'சுண்ணத்' அறுவைச் சிகிச்சை செய்துகொண்டவர்களுக்கு பரவும் வாய்ப்பு குறைகிறது என்பதே!

அதாவது இந்த அறுவைச்சிகிச்சை செய்து கொள்ளாத ஆண்கள் அறுபேரை எச்.ஐ.வி கிருமிகள் தாக்கும் எனில் இந்த அறுவைச் சிகிச்சை செய்துகொண்டவர் ஒருவர் மட்டுமே எயிட்ஸ் நோயால் தாக்கப்படுவர். இந்தஆய்வு இந்தியாவில் வசிக்கும் ஆண்களிடையே மேற்கொள்ளப் பட்டுள்ளது. இந்த ஆய்வினை ஆஸ்திரேலியாவின் மெல்போர்ண் பல்கலைக்கழக விஞ்ஞானி ரோஜஸ்சார்த் மேற்கொண்டார். இதற்குக் காரணம் என்ன? விஞ்ஞானி ரோஜஸ்சார்த் விளக்குகிறார்.

"நம்முடைய உடலில் தோல் எதற்கு இருக்கிறது? கிருமிகள் தாக்காமல் பாதுகாப்பு அளிப்பதற்காகவே! அப்படி வருகின்ற கிருமிகளை உடலானது தோலுக்கு வெளியாகவே வைத்திருக்கமுயல்கிறது. ஆண்குறியும் கூட இப்படித்தான் செயற்படுகிறது. எயிட்ஸ் கிருமி, பாலுறவின்மூலம் பரவுகிறது. அது ஆண்குறியின் முனை அல்லது சிறுநீர் குழாயின் முனை வழியாக உள்ளே செல்கிறது என்று இது வரை கருதிவந்தோம் ஆனால், ஆண்குறி விறைப்பதை அடுத்து அதன் மூலம்தான் எயிட்ஸ் கிருமி தொற்றுகிறது என்பதை இப்போது கண்டிருக்கிறோம்" - என்றார்.

"எனவே, சுண்ணத் அறுவைச் சிகிச்சையின் மூலம் ஆண்குறியின் மேற்றோல் முழுதாக அகற்றப்படுவதால் எச்.ஐ.வி. கிருமி தொற்றும் அபாயம் பெருமளவில் குறைய வாய்ப்பிருக்கிறது" என்றும் அவர் கூறுகிறார். இதற்கு எடுத்துக் காட்டாக எகிப்து, பாகிஸ்தான், இந்தோனேசியா போன்ற நாடுகளைக் கூறுகிறார்கள். அங்கு எச்.ஐ.வி கிருமிதாக்கிய ஆண்களின் எண்ணிக்கை கணிசமாக குறைந்தே காணப்படுவதற்கு அங்குள்ள முஸ்லிம்கள் 'சுண்ணத்' அறுவைச் சிகிச்சையை ஒருவழக்கமாகக் கொண்டிருப்பதே காரணம் என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

## புதி[illegible] 'ஏயர் பஸ்'

காலத்திற்குக் காலம் புதியரக விமானங்கள் வானில் பறப்பது வழமை. இப்போது விமானப் பயணிகளின் கனவுகளை நிறைவேற்ற வந்திருக்கிறது. ஏயாபஸ் சுப்பர் ஜம்போ ஜெட் ஏ -380 ரக விமானங்கள். தற்போது பறந்து கொண்டிருக்கும் நெருக்கடியான இருக்கைகள் கொண்ட விமானங்களில் இருந்து வேறுபட்டு இந்த விமானங்கள் மிகவும் ஆடம்பரமான தோற்றத்துடன் வந்துள்ளன. இப்போதே பல விமான நிறுவனங்களும் இதை வாங்குவதற்கு முண்டியடித்துக்கொண்டு நிற்கின்றன.

மொத்தம் 555 இருக்கைகளும் 8ஆயிரம் மைல்கள் தரிக்காது நேரடியாக பறக்கவும் கூடியது இந்த விமானம். எதிர்வரும் 2006 ஆம் ஆண்டு சாதாரண பயணிகளின் பாவனைக்கு வருகிறது.

# கண்டறியப்பட்டுவிட்டது முதுமைக்கான மரபணு

மயோ கிளினிக் (Mayo Clinic) ஆராய்ச்சியாளர்கள் வயதாவதற்குக் காரணமான மரபணுவை கண்டறிந்துள்ளதாக அறிவித்திருக்கிறார்கள். இனவிருத்தி தொடர்பான பிரச்சினைகள் மற்றும் 'கட்ராக்ட்' நோய் (Cataract) போன்றவற்றுக்கும் இந்த மரபணுவே காரணம் என அவர்கள் கூறுகிறார்கள்.

மரபணு மாற்றப்பட்ட எலிகளில் இந்தப் பரிசோதனை நடத்தப்பட்டது. இதன்படி இது தொடர்பான நோய்களை மனிதர்களில் கண்டறியவும், அவற்றைத் தீர்ப்பதற்கும் இந்த ஆய்வுகள் உதவும் எனக் கருதப்படுகின்றது.

இந்த ஆய்வின்படி BubR1 எனப்படுகின்ற பிரத்தியேகமான ஒரு 'ஜீன்', குறிப்பிட்ட ஒரு வகைப் புரதத்தின் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதன் மூலமாக வயதாதலை ஏற்படுத்துகின்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

BubR1 புரதத்தை சாதாரண அளவை விட ஐந்து மடங்கு குறைவாக உற்பத்தி செய்யுமாறு மாற்றப்பட்ட எலியை டாரேன் பேக்கர் (Darren Baker) என்ற விஞ்ஞானி உருவாக்கினார்.

"இந்த எலிகள், வெகு இளமையிலேயே மிக முதிர்ந்த எலிகள் அடையும் அத்தனை நோய்களுக்கும் உள்ளாகின" - என்று மயோ கிளினிக்கின் குழந்தைகள் மருத்துவம் மற்றும் மூலக்கூற்று உயிரியல் துறையைச் சேர்ந்த ஜான் வான் டியூர்ஸன் (Jan Van Deursen) கூறினார்.

"BubR1 புரதத்தின் அளவானது ஒரு சாதாரண எலி வயதாகும் போது உண்மையிலேயே குறைகின்றதா என்று கண்டறிவதற்கு இந்தக் கண்டுபிடிப்பு எங்களைத் தூண்டியது. அதைத்தான் நாங்கள் கண்டறிந்தோம். அதன்படி, குறிப்பிட்ட புரதம் உடலில் குறைவதால், வயதாவதால் ஏற்படும் சில நோய்கள் பீடிக்கின்றன" - என்றும் ஜான் கூறினார்.

இன்னொரு மயோ ஆராய்ச்சியாளரான கார்த்திக் ஜெகநாதன், இந்த BubR1 புரதம் எலிகளில் குறைந்து செல்கையில், அவை இனப்பெருக்கும் திறமையை இழந்துவிடுகின்றன எனக் கண்டுபிடித்தார்.

இவ்வாறான எலிகளில் ஜேம் கலங்கள் (Germ Cells) பிரியும் போது அந்தக் கலங்களில் நிறமூர்த்தங்கள் (Chromosomes) சீராக விநியோகம் செய்யப்படாமல் இருந்ததையும் அவர் அறிந்தார். ஜேம் கலங்களின் அசாதாரணமான எண்ணிக்கையில் நிறமூர்த்தங்கள் காணப்படுவது, மனித இனப்பெருக்கத்தைப் பொறுத்தவரை வயதாவது எனக் கருதப்படுகின்றது.

## சுடரும் விஞ்ஞானம்

ராஜபுத்திரன்

"வயதாதல் காரணமாக எலிகளில் குறைவடையும் BubR1 புரதம்தான் மனிதர்களிலும் பிறப்புக் குறைபாடுகளுக்குக் காரணம் என்று நாம் கருதலாம்" என டாக்டர் ஜான் வான் டியூர்ஸன் கூறுகிறார்.

BubR1 வகைப்புரதம் குறைந்த அளவில் இருந்த எலியில் உருவாகிய 'கட்ராக்ட்' (Cataract) நோயானது மனிதனில் வயதான பின்னர் உருவாகும் 'கட்ராக்ட்' நோயை பெரும்பாலும் ஒத்திருந்தது என்பது மயோ கண் மருத்துவரான டக்ளஸ் கமரொனுடன் (Douglas Cameron) இணைந்து நடத்தப் பட்ட ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

# சூழல் மாசடைவதால் மீன்களின் பால் மாற்றம்

பிரிட்டிஷ் ஆறுகளிலுள்ள மொத்த ஆண் மீன்களில் மூன்றில் ஒரு பகுதி பால் மாற்றம் அடைந்து வருவதாக சூழலியல் அமைப்புக்கள் எச்சரித்துள்ளன.


சாக்கடைக் கழிவுகள் ஆற்று நீருடன் கலந்து அவற்றை அசுத்தப்படுத்தியதன் விளைவாகவே இந்தப் பால் மாற்றம் நிகழ்ந்தது என்று சூழலியல் அமைப்புக்கள் கூறுகின்றன.

ஐம்பது நீர் நிலைகளில் சுமார் ஆயிரத்து 500மீன்களில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் மூன்றில் ஒரு பங்கிற்கு அதிகமான ஆண் மீன்கள், பெண்மீன்களைப் போன்று நடத்தைகளை வெளிப் படுத்தியுள்ளன.

பெண்கள் பயன்படுத்தும் கருத்தடை மாத்திரைகள் மற்றும் பிற ஓமோன்கள் அடங்கிய சாக்கடைக் கழிவுகள் ஆற்றில் கலந்து இந்த மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம். என கருதப்படுகிறது.

இந்தச் சாக்கடைக் கழிவுகளால் மீன்களின் இனப்பெருக்கத்திறன் பாதிக்கப்படும். அதனால் மீன்களின் குடித்தொகையில் பெரும் வீழ்ச்சி ஏற்படக்கூடும் எனவும் சூழலியல் அமைப்புக்கள் எச்சரித்துள்ளன.

தண்ணீர் முகாமைத்துவ அமைப்புக்கள்



புதிய திட்டங்களை வகுக்க வேண்டியதன் அவசியத்தை இந்த நிலைமை வலியுறுத்துகிறது எனவும் சூழலியல் அமைப்பு கூறுகிறது.

மீன்களின் அகஞ்சுரக்கும் சுரப்பிகளை பாதிப்படையச் செய்யும் இரசாயனப் பதார்த்தங்கள் இந்த பால்நிலை மாற்றத்துடன் தொடர்பு பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## செவ்வாயில் மழை!

செவ்வாய் கிரகத்தில் நீர்நிலைகள் தற்போது இல்லை. எனினும் அங்கு தண்ணீர் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. 30 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு செவ்வாய்க் கிரகத்தில் மழை பெய்துள்ளதாகவும் - கிரகத்தின் பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்கியிருந்ததாகவும் - அறியவருகிறது.

துருவப் பகுதிகளில் 'பெர்மா பிராஸ்ட்' என்கிற உறைந்த நிலையில் மண்ணோடு மண்ணாக பனிக்கட்டி மூலமாக தண்ணீர் இருக்க வாய்ப்பிருக்கிறது. கோடை காலத்தில் அவை உருகி மண்ணும் நீரும் கலந்த சக்தியாக ஒழுகி ஓடுவது தெரிகிறது. சில இடங்களில் ஒரு காலத்தில் நீர்நிலைகளாக இருந்து வறண்டு போயிருப்பதாகவும் தெரிகிறது.

36 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு சூழ் நிலை மாறி, அங்கிருந்த நீர்நிலைகள் உறையத் தொடங்கியுள்ளன எனக் கூறப்படுகிறது. தற்போதுள்ள அரைகுறை ஈரத்தில் உயிரினங்கள் ஏதாவது வசிக்கின்றனவா என்பதனை அறிய விஞ்ஞானிகள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.


## கண்ணீர் அஞ்சலி

எங்கள் அன்புக்கும்
மதிப்பிற்குமுரிய
**அமரர் பொன்னையா யோகலிங்கம்**



(இளைப்பாறிய வைத்திய அதிகாரியும், சமாதான நீதிவானும் கொக்குவில் கிழக்கு, கோணாவளை வைரவர் சுவாமி கோயில் பரிபாலன சபைத் தலைவரும்)

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆத்மா சாந்தியடைய கோணாவளை வைரவப்பெருமானை வேண்டிநிற்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் வருந்தி நிற்கும்:
**கோணாவளை வைரவர் சுவாமி கோயில் பரிபாலன சபையினர்.**

(34125)(34-14-17)



## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 - 04 - 1927



மறைவு 10 - 07 - 1999

அமரர் **சின்னத்தம்பி இராஜரட்ணம்**

திதி: 15.07.2004

*ஆண்டுகள் ஐந்து ஆனதுவோ! உமைப் பிரிந்து*
*காண்பதெல்லாம் நீங்களாகக் கலங்குகின்றோம்*
*நெஞ்சோடு உம் நினைவலைகள் எந்நாளும் நிறைந்திருக்கும்!*

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

என்றும் உங்கள் நினைவுடன்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரர்.**

(34127)(24-34-17-14)


## அபராதம்

தென்மராட்சி,ஜூலை15

வீடுகளில் கள் விற்பனைக்கு வைத்திருந்த 13 பேரை தென்மராட்சி மதுவரித் திணைக்களத்தினர் அண்மையில் கண்டுபிடித்தனர்.

இந்தப் 13 பேருக்கும் எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிபதி, நீதிமன்றுக்குச் சமுகமளித்த 12 பேருக்கும 13 ஆயிரத்து 750 ரூபாவினை அபராதமாக விதித்தார்.

(10-117)

## கருத்தரங்கு

சம்பூர்,ஜூலை15

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சம்பூர் காவல் பணிமனையில் மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு ஒன்று நேற்று நடத்தப்பட்டது.

இக்கருத்தரங்கில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் பிரதிநிதி வில்டன், பரப்புரைப் பொறுப்பாளர் வி.ரி.ஆர்.மோகன், திருகோணமலை மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் க.சீரஞ்சீவி, சம்பூர் காவல்பணிமனைப் பொறுப்பாளர் வி.தேவதாஸ் உட்படக் காவல்துறை உறுப்பினர்களும் போராளிகளும் கலந்துகொண்டனர். (10)


## ஆசிரியர் சேவைப் போட்டிப் பரீட்சை

T.திருமுருகன், பொன்.சந்துரு

சனி, ஞாயிறு 8-2 மணி, வாரநாள்கள் 3-6 மணி பொதுஅறிவு, IQ மாதிரி வினாத்தாள் கிடைக்கும்.புதியபிரிவு ஆரம்பம் 16.07.2004 4p.m.
**நியூட்டன் - ஆரியகுளம் சந்தி - யாழ்.நகர்.**

(34124)



## தவறிவிட்டது

முருகபாஸ்கரன் சுதாகரனின் கடவுச்சீட்டு 13.07.2004 அன்று ஓமந்தைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 79, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தொ.பே.இலக்கம் 0777-241865, 0776-080981 சன்மானம் வழங்கப்படும்.

(34123)



# கராத்தே பயிற்சிப் பாசறை

# KARATE COACHING CAMP

எமது கராத்தே மாணவர்களது திறமைகளைத் தேசிய, சர்வதேச மட்டத்தில் வெளிக்கொண்டுவரும் முயற்சியாக, கராத்தே சண்டையின் (KUMITE) நுட்பங்களையும் சர்வதேச சட்ட ஒழுங்கு விதிகள்ளையும் கற்றுத்தருவதோடு, உலக கராத்தே சம்மேளனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட (World Karate do Fedaration) நடுவர்களுக்கான சட்ட ஒழுங்கு விதிகளைப் பிரதம ஆசிரியர்களுக்குக் கற்றுத்தரவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கராத்தே மாணவர்கள் தங்களது பிரதம ஆசிரியர்களுடன் 17.07.2004 காலை 8.30 மணிக்கு யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்திற்கு ஆயத்தங்களோடு சமுகமளிக்கும் வண்ணம் வேண்டப்படுகிறீர்கள்.



பயிற்சி நடைபெறும் இடம்:
**யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயம்**
**(Stanley College)**

திகதிகள்:
**17.07.2004, 18.07.2004**
ஆகிய இரு நாள்களும்.

பயிற்சி அளிப்பவர்:
SENSEI R.J.ALEXANDER,
BLACK BELT 4th DAN (JAPAN)
CHIEF INSTRUCTOR OF JAPAN KARATE DO ITOSUKAI
SRI LANKA BRANCH
NATIONAL 'A' GRADE REFEREE
VICE PRESIDENT OF SRI LANKA KARATE DO
FEDERATION (UNDER THE MINISTRY OF SPORTS)

யாழ். மாவட்ட கராத்தே சங்கம்

சி-36187) (24-34-14-17)

# தொடரைக் கைப்பற்றியது ஆஸி.அணி; இரண்டாவது போட்டி சமநிலையில்



கெயின்ஸ், ஜூலை15

ஆஸ்திரேலிய - இலங்கை அணிகளுக்கிடையே ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டியில் 7விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதன் மூலம் ஆஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரனின் 527 விக்கெட்டுக்கள் சாதனையைச் சமப்படுத்தியுள்ளார்.

இரண்டாவது போட்டியின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் உப்புல் சந்தனவின் விக்கெட்டைக் கைப்பற்றியதன் மூலம் வோர்ன் இந்தச் சாதனையைச் சமப்படுத்தினார். இதன்படி, டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிகூடிய விக்கெட்டுக்களைக் கைப்பற்றியோர் வரிசையில் முரளிதரன், ஷேன்வோர்ன் ஆகிய இருவரும் முதலிடத்தில் உள்ளனர். முரளிதரன் 90 போட்டிகளில் கைப்பற்றிய 527 விக்கெட்டுக்களை ஷேன்வோர்ன் 112 போட்டிகளில் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

ஆஸ்திரேலிய - இலங்கை அணிகளுக்கிடையே நடைபெற்ற 2போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1:0 என்ற ரீதியில் ஆஸ்திரேலிய அணி கைப்பற்றியுள்ளது. கடந்த 9ஆம் திகதி ஆரம்பமான போட்டியில் ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 517 ஓட்டங்களைப் பெற்றது. ஜஸ்ரின் லாங்கர் 162 ஓட்டங்களையும் மத்தியூ ஹைடன் 117ஓட்டங்களையும் டேமியன் மாட்டின் 97 ஓட்டங்களையும் டெரன் லீமன் 50 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் உப்புல் சந்தன 5விக்கெட்டுக்களையும் எல்.மலிங்க 4விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, 455 ஓட்டங்களைப்பெற்றது. அணித் தலைவர் மார்வன் அத்தப்பத்து 133 ஓட்டங்களையும் சங்ககார 74 ஓட்டங்களையும் சமரவீர 70ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜிலெஸ்பி, ஷேர்வோர்ன் ஆகியோர் தலா 3விக்கெட்டுக்களையும் கிளென் மெக்ராத் 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணி 9விக்கெட்டுக்களை இழந்து 292 ஓட்டங்களைப் பெற்றவுடன் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. மத்தியூ ஹைடன் 132 ஓட்டங்களையும், டேமியன் மாட்டின் 52 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் உப்புல் சந்தன 5விக்கெட்டுக்களையும் நுவன் சொய்ஸா, டில்சான் ஆகியோர் தலா 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பின்னர் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 8விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டம் நிறைவுபெற்றது. சங்ககார 66ஓட்டங்களைப பெற்றார். பந்துவீச்சில் ஷேன்வோர்ன் 4விக்கெட்டுக்களையும் கிலெஸபி 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்டம் சமநிலையில் முடிவுற்றதையடுத்து 1:0 ரீதியில் ஆஸ்திரேலிய அணி தொடரில் வெற்றியீட்டியுள்ளது. (10)

# சமாதான உதைபந்தாட்டம் இம்முறை யாழ். மாவட்டத்தில்

கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரியினால் அறிமுகம் செய்யப்பட்ட சமாதானத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி, இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரி, மன்னார் சென்.சேவியர் கல்லூரி ஆகியன கலந்துகொள்ளவுள்ளன.

போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மேற்கொண்டு வருகிறது.

கடந்த வருடம் நடைபெற்ற இப்போட்டியில முதலாவது இடத்தினை மன்னார் சென்.சேவியர் கல்லூரியும், இரண்டாம் இடத்தினை யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. போட்டிகள் யாவும் செப்ரெம்பர் மாதம் முதலாம், இரண்டாம், மூன்றாம் திகதிகளில் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (10-190)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை15

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கம் மற்றும் தமிழீழ விளையாட்டுத்துறை ஆகியவற்றின் ஆதரவுடன் நவிண்டில் கலைமதி விளைாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியுள்ளது.

சென்.அன்ரனிஸ் அணிக்கும் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக அணிக்கும் இடையே அண்மையில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் 4:0 என்ற கணக்கில் சென்.அன்ரனிஸ் அணி வெற்றியீட்டியது. (10-190)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை15

பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட பூப்பந்தாட்டப் போட்டியில் முதலாவது இடத்தினை கல்முனை ஆசா் முஸ்லிம் பாடசாலையும் இரண்டாவது இடத்தினை வசாவிளான் மத்திய கல்லூரியும் மூன்றாவது இடத்தினை யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. இந்த மூன்று அணிகளும் தேசிய மட்டப் போட்டியில் கலந்துகொள்ள உள்ளன. (10-190)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை15

காரைநகர் பாலாவோடை இந்துத் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ஆர்.சந்திரகுமார் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆர்.சிவபாதம் கலந்து கொள்வார். (10-190)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை15

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட மேசைப்பந்தாட்டப் போட்டியில் யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியினர் சம்பியன் பட்டத்தினை வென்றுள்ளனர்.

இந்த அணியினர் தேசிய மட்ட மேசைப் பந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளனர். (10-190)

★ ★ ★

வலி.வடக்கு,ஜூலை15

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் அமரர் தம்பிராசா ஞாபகார்த்தமாக நடத்திவரும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை மாலை 4மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

ஏழாலை ஸ்ரீமுருகன் வி.க எதிர் அளவெட்டி கலைவாணி வி.க.

அராலி திருமகள் வி.க. எதிர் தையிட்டி ஸ்ரார் வி.க. (10-86)

★ ★ ★

வரணி,ஜூலை15

குடத்தனை தென்னிந்தியத்திருச் சபையின் ஆதரவில் இயங்கும் பகல் பராமரிப்பு நிலைய மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை குடத்தனை திருச்சபைக் கல்வி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பி. ஆன்வற்சன் கலந்துகொள்வார். விசேட விருந்தினராக ஆசிரியர் ஆர்.அகிலன் கலந்துகொள்வார். (10-170-190)

★ ★ ★

தென்மராட்சி,ஜூலை15

கெற்பேலி சிவசக்தி முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் சு.வசந்தி தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் கலந்து கொள்வார். (10-117)

★ ★ ★

## விளையாட்டு

யாழ்ப்பாணம்,ஜூலை15

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இப்போட்டிகளில் இன்று பிற்பகல் 3மணிக்கு ஏழாலை மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கரபந்தாட்ட போட்டிகள் நடைபெறவுள்ளன. (10)

★ ★ ★

மண்டைதீவு,ஜூலை15

தமபாட்டி அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் க.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பாடசாலை மைதானத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வேலணை சரஸ்வதி வித்தியாலய அதிபர் ச.பாஸ்கரன் கலந்துகொள்ளவுள்ளார். (10-88)


# பங்குச்சந்தை கருத்தரங்கு

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை, யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றத்தின் இணை அனுசரணையுடன் 2004 ஜூலை 19ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் நடத்த இருக்கும் கருத்தரங்கிற்கு உங்களை அன்புடன் அழைக்கின்றது.

## நிகழ்ச்சிநிரல்

வரவேற்புரை
திரு.இரஜீவ பண்டாரநாயக்க
சிரேஷ்ட முகாமையாளர், சந்தைப்படுத்தல்.
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை

"பங்குச்சந்தையில் முதலீடு செய்தல்"
திரு.கோர்டன் நடேசன்
பணிப்பாளர், சி.ரி.ஸ்மித் ஸ்டொக்புரோக்கர்ஸ் பிரைவெட் லிமிடெட்

"டெக்ஸ்" - அறிமுகம் (அரசாங்க திறைசேரி உண்டியல் மற்றும் முறிகள்)
திரு.வி.தேவதாஸ்,
சிரேஷ்ட முகாமையாளர், நிதிநிர்வாகம். கொழும்பு பங்குப்பரிவர்த்தனை

நேரம் மாலை 3.30 மணி

தேநீர்வேளை

"பிணைகளுக்கான சந்தை விதிமுறைகள்"
செல்வி ஷிவானி திருஞானசம்பந்தன்,
நிறைவேற்றுநர், கொழும்பு பங்குப்பரிவர்த்தனை.

"யுனிற் ட்ரஸ்டடும் பங்குச்சந்தையும் – ஒரு பார்வை
திரு.எஸ்.ஜெயவர்மன்,
பொது முகாமையாளர், நஷனல் அசற் மனேஜ்மென்ட் லிமிடெட்

நன்றியுரை
திரு.வி.நிரஞ்சன்,
முகாமையாளர் - நிதி
யுரோவில் இன்வேஸ்ட்மன்ட் பிரைவெட் லிமிடெட்.

மொழிமூலம் : தமிழ்
அனுமதி : இலவசம்

## அரியதொரு வாய்ப்பு!

பங்குத்தரகர்களுடன் கலந்துரையாடி பங்குக்கணக்கொன்றை உடனடியாக ஆரம்பியுங்கள் (கட்டணமெதுவுமில்லை உங்கள் அடையாள அட்டைப் பிரதியைச் சமர்ப்பியுங்கள்) பங்குச்சந்தை தொடர்பான தகவல்களையும் மேலதிக விவரங்களையும் நேரடியாகப் பெற்றுக் கொள்ளுங்கள். கருத்தரங்கின் முடிவில் இடம்பெறும் வினாவிடைக் கூட்டத்தொடரிலும் கலந்துகொள்ளுங்கள்.

மேலதிக விவரங்களுக்கு கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்தை அழையுங்கள் (011) 5522444 (Hotline)

# மத்திய மாகாணத்தில் அரசு தரப்புக்கு மலையக மக்கள் முன்னணி ஆதரவு?

ஆளும் தரப்புக்கும் எதிர்த்தரப்புக்கும் அறுதிப் பெரும்பான்மை கிட்டாமல் சரிசமனான நிலைமை காணப்படும் மத்திய மாகாணசபையில் ஆளும் தரப்புக்கு ஆதரவளிபது குறித்து எதிர்த்தரப்பிலுள்ள மலையக மக்கள் முன்னணி ஆலோசனை செய்துவருகின்றது எனத் தெரிகின்றது.

மத்திய மாகாணசபையில் ஐ.ம.சு. கூட்டமைப்பு 28 ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஐ.தே. முன்னணி 26 இடங்களையும் மலையக மக்கள் முன்னணி இரு இடங்களையும் பெற்றுள்ளன.

மலையகத் தமிழர்களுக்கு சேவையாற்றக்கூடிய வகையில் மாகாண அமைச்சுப் பொறுப்பு ஒன்று வழங்கப்பட்டால் ஆளும் கட்சியுடன் மலையக மக்கள் முன்னணி கைகோர்க்கும். மத்திய மாகாணசபையில் வெறும் உறுப்பினர்களாக மட்டும் இருந்துகொண்டு மலையகத் தமிழர்களுக்காக எதையும் சாதிக்க முடியாது என மலையக மக்கள் முன்னணி சார்பாக நுவரெலியா மாவட்டத்தில வெற்றியீட்டி மாகாணசபைக்குத் தெரிவாகியுள்ள எஸ்.அருள்சாமி தெரிவித்தார்.

மலையக மக்கள முன்னணியின் தலைவா பெ.சந்திரசேகரன், இந்தியாவில் நிற்பதால் இது விடயத்தில் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. இன்று அவர் நாடு திரும்பியதும் இறுதி முடிவு எடுக்கப்படும் எனத் தெரிகின்றது.

மத்திய மாகாணசபையில் மலையக மக்கள முன்னணியின் சார்பாக மூன்று உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். நுவரெலியா மாவட்டத்திலிருந்து எஸ்.அருள்சாமி, பி.திகாம்பரம் ஆகியோர் கட்சியின் சார்பிலும் கண்டி மாவட்டத்தில் ஐ.தே.க. பட்டியலில் யானைச் சின்னத்தில் போட்டியிட்ட எஸ்.ராஜரட்ணமும் வெற்றியீட்டியுள்ளனர்.

இதேவேளை -

மத்திய மாகாணசபையில் இ.தொ.கா. சார்பில் யானைச் சின்னத்தில் போட்டியிட்டு, 7பேர் தெரிவாகியுள்ளனர் என்பதும குறிப்பிடத்தக்கது.

(க)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழக உறுப்பினர்

**திரு. சிங்கபாகு சிவகுமார்**

அவர்கள் 2004 ஆம் ஆண்டுக்கான பொலிகை ஒற்றுமை விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட குத்துச்சண்டைப் போட்டியில் 69Kg - 75Kg பிரிவில் வெற்றியீட்டியதுடன் பல இடங்களில் சாதனை படைத்தவர்களையும் முறியடித்து வெற்றிவாகை சூடியமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பல சாதனைகள் படைக்கவேண்டும் எனவும் வாழ்த்துகின்றோம்.

உதயதாரகை விளையாட்டுக்கழக உறுப்பினர்கள்.

கற்கோவளம்,
பருத்தித்துறை. (சி-36178)(37-13-14-26)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

**இராசம்மா சிதம்பரப்பிள்ளை**

உதிர்வாய் மண்ணில்: 30-03-1938 | உதிர்வாய் விண்ணில்: 08-07-2002

திதி: சதுர்த்தசி

*அன்பின் திருவுருவே! அமைதியின் உறைவிடமே!!*
*பண்பின் சிகரமே! பலர் போற்றும் ஆசானே!!*
*சிறுவர்க்குக் கல்வி சித்திரமாய் பயில்வித்து*
*பண்பாக அறிவூட்டி பற்றுடனே கடமைகள் செய்து*
*அன்பு வார்த்தைபேசி அழகாக எழுதுவித்து*
*இன்புறவே வாழ்ந்து ஈசன் பதம் அடைந்தனையோ!!*

த.சிதம்பரப்பிள்ளை *(கணவர்)*,
உறவினர்.

சங்கத்தானை,
சாவகச்சேரி. (34055)(34-13-14-26)

## பொலீஸார் கொலை; சந்தேகநபர்கள் விடுதலை

மட்டக்களப்பு,ஜூலை15

கடந்த மே மாதம் 19 ஆம் திகதி மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அருகில் விசேட புலனாய்வுத்துறைப் பொலீஸார் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப் பட்டிருந்த மூவர் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

(ஒ- 4-9)


**யாழ். மக்களே! இதோ உங்களுக்காக!**

- ★ தச்சுவேலை உபகரணங்கள் 10", 12",14",16" சைனா மிசின்கள்
- ★ எலக்ரிக் டிசைன் ரவுட்டர்கள்
- ★ றில்லர்கள் ★ கிரைண்டர்கள்
- ★ வளைவு வெட்டும் வான்சோ

☞ ஏனைய தச்சுவேலைக்கான உபகரணங்களும் உதிரிப்பாகங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.


விவரங்களுக்கு: சுதா றேடேர்ஸ்

*உரிமையாளர்:* கி.சுதாகரன

(34076)(37) அரசடி வீதி, நல்லூர், யாழ்.


## 13 ஆம் ஆண்டு நினைவலைகள்

15-07-2004



**நெல்லை க.பேரன் குடும்பத்தினர்**

மறைவு: 15.07.1991

வருடங்கள் பதின்மூன்று உருண்டோடியதோ?
ஈரவிழிகள் இன்னும் காயவில்லையே!

*பொன்கந்தையா வீதி,*
*நெல்லியடி.* (34083)

தகவல்:
க.சிவசுப்பிரமணியம் *(குட்டி)*

(37-13-14-26)

## மரண அறிவித்தல்

**திருமதி பத்மாவதி மோகனதாஸ்**

நெடுந்தீவு மேற்கைப பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி மோகனதாஸ் அவர்கள் 11.07.2004 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தில்லாத்தைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற மோகனதாஸ் அவர்களின் பாசமிகு மனைவியும் பிரசன்னாவின் அன்புத் தாயாரும் கனகரத்தினம் (ஓய்வுபெற்ற பட்டதாரி மொழிபெயர்ப்பாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), கமலாதேவி, பரநிருபசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி), விநாயகமூர்த்தி (ஓய்வுபெற்ற விரிவுரையாளர், பீட்டர்ஸ்பேர்க் பல்கலைக்கழகம், தென்னாபிரிக்கா), தனலட்சுமி (ஆசிரியை, இந்துக்கல்லூரி - இரத்மலானை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காந்தமலர் கனகரத்தினம் (ஓய்வுபெற்ற உதவித் திட்டமிடல் பணிப்பாளர்), கோபாலபிள்ளை (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்), சாரதாம்பாள் (கனடா), டாக்டர் தேவயானி மூர்த்தி (கனடா), மரியசீலன் (இரத்மலானை), சற்குணமாலினி (மட்டக்களப்பு), வசந்தமாலினி (ஜேர்மனி), பூபாலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பலாலி வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (34102)(37-13-14-26)

தகவல்:
கனகரத்தினம்
(சகோதரன்).







## வண் - கிழக்கு கலட்டி எச்சாட்டி மஹாமாரி அம்மன் ஆலய

# மஞ்சத் திருவிழா

### மஞ்சத் திருப்பதிக அரங்கேற்றமும் வெள்ளோட்டமும்

*அம்மன் அடியார்களே!*

வண் - கிழக்கு கலட்டி எச்சாட்டி மஹாமாரி அம்மன், சித்திரத் திருமஞ்சத்தில் அமர்ந்து வீதி வலம்வரும் திருக்காட்சி உற்சவம் 16.07.2004 வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெற அருள்பாலித்திருக்கிறது. அதற்கு முன்னோடியாக மஞ்சத்திருப்பதிக அரங்கேற்றமும் திருமஞ்ச வெள்ளோட்டமும் இன்று (15.07.2004) வியாழக்கிழமை மாலை 7மணிக்கு நடைபெறவுள்ளன. நிகழும் ஒன்பதாம் திருவிழாவின் வசந்த மண்டபப் பூசையின் பின்னர் மஞ்சத்திருப்பதிகங்கள் அரங்கேற்றப்படவுள்ளன.

**நிகழ்ச்சி நிரல்**



**இன்று (15-07-2004) வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.**

பதிகம் இயற்றும் புலவர்: கவிஞர் **சோ.பத்மநாதன்**

சான்றோர்:
1. வணக்கத்துக்குரிய நல்லை ஆதீன சுவாமிகள் **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
2. கலாநிதி மூதறிஞர் **க.சொக்கலிங்கம்**
3. செஞ்சொற் செல்வர் **ஆறு.திருமுருகன்**
4. கலாநிதி திருமதி **ச.மனோன்மணி**

இசையாளர்: சங்கீதபூஷணம் **செ.குமாரசாமி**

அணிசேர் கலைஞர் மிருதங்கம்: *வித்துவான் சதா.வேல்மாறன்*

வயலின்: இசைஞானசுரபி **அ.ஜெயராமன்**

ஆலய மங்கள வாத்தியம்: **ஜெகன் குழுவினர்**
**விஷேட மேளக் கச்சேரி**
**தாவடி குகன் குழுவினர்.**

அரங்கேற்றத்தின்போது அள்ளுக்காசு வழங்கும் மஞ்ச உபயகாரர்:
**திரு.க.இராசேந்திரம் *(வைரமுத்து)***

மஞ்சஸ்தபதியைக் கௌரவித்தல்: **மஞ்சஸ்தபதி திரு. ஜீவரட்ணம் ஜெயப்பிரகாசம்** அவர்களுக்கு மஹோற்சவப் பிரதம குரு **சிவஸ்ரீ க.பாஸ்கரக்குருக்கள்** ஆசீர்வதித்துத் தலைப்பாகை அணிவிக்க, **சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்** பொன்னாடை போர்த்து ஆசீர்வதித்து ஊர்வலமாக வெள்ளோட்ட மஞ்சத்திற்கு அழைத்துவருவார்.

*மஹாமாரி அம்மன், ஒன்பதாம் நாள் **உற்சவ இரவு உற்சவத்திற்குரிய வாகனத்தில் ஆரோகணித்துவர** மஞ்ச வெள்ளோட்டம் நிகழும்.*

நாளை 16-07-2004 வெள்ளிக்கிழமை மாலை 7மணிக்கு ஸ்ரீமஹாமாரி அம்பாள் புதிய மஞ்சத்தில் ஆரோகணித்து வீதிவலம்வரும் அலங்காரக் காட்சி இடம்பெறும்.

*விசேட மேளக் கச்சேரி:*

☆ கானமூர்த்தி குழுவினர் ☆ கோவிந்தசாமி புதல்வர்கள் ☆ குகன் குழுவினர் ☆ நிமலன் குழுவினர்

**இன்னிசை விருந்து: ராகம்ஸ் இசைக் குழுவினர்**

இரண்டு நாள்களும் அம்பிகை அடியார்கள் அனைவரும் ஆலயத்துக்கு சமுகந்தந்து அம்மனின் அருட்கடாட்சத்திற்குள்ளாகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(34053) (26-14-13)

- க.இராசேந்திரம் *(வைரமுத்து)* மஞ்ச உபயகாரா.

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி 30 ஆயிரம் ரூபா செலவிடலாம்

## பிரதேச சபைகளுக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூலை15

உள்ளூராட்சி வாரத்தையொட்டிப் பிரதேச சபைகள் தலா 30 ஆயிரம் ரூபா வரை செல விடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 12 பிரதேச சபைகளுக்குத் தலா 30 ஆயிரம் ரூபாவும் நகர சபைகளுக்கு 40 ஆயிரம் ரூபா வரையும் - மாநகரசபைக்கு 50 ஆயிரம் ரூபா வரையிலும் - செலவுசெய்வதற்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது சபையின் கடந்தகால, நிகழ் கால, எதிர்கால நடவடிக்கைகளின் வளர்ச்சி - அபிவிருத்தி தொடர்பாகப் பத்திரிகை விளம்பரம் செய்வதற்கும் அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி வாரம் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமைமுதல் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை இடம்பெறவுள்ளது.

இந்த ஏழு நாள்களிலும் 32 வகையான திட்டங்கள் சபைகளின் வளர்ச்சி நோக்கம் கருதிச் செயற்படுத்தப்படவுள்ளன.

இந்தத் திட்டங்களைத் திறமையாகச் செயற்படுத்தும் அமைப்புகளுக்குக் கேடயங் களும், பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப் படவுள்ளன. (ஒ-185)



புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதியுதவியுடன் தொண்டைமானாறு நற்பணிமன்றம் நடத்தும் இலவசப் பாடசாலையில் கற்கும் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை நற்பணி மன்றத்தின் தலைவர் வி.ஆர்.சண்முகலிங்கம் வழங்குவதைப் படத்தில் காணலாம். ஆசிரியைகள் மற்றும் பெற்றோரில் சிலரும் படத்தில் உள்ளனர். *(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*

### இரு மாவீரர்களின் நினைவுநாள்

தென்மராட்சி,ஜூலை15

மீசாலை அல்லாரைப் பகுதியில் 1983ஆம் ஆண்டு வீரமரணமடைந்த விடுதலைப் புலிப் போராளிகள் லெப்டினண்ட் சீலன், வீரவேங்கை ஆனந் ஆகியோரின் 21ஆவது ஆண்டு நினைவு நாள் நாளை தென்மராட்சிப் பிரதேசத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் அந்தந்தக் கோட்டப் பொது அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.(ஒ-117)

### விவசாய வீதிகள் புனரமைப்பு

கொடிகாமம்,ஜூலை15

சமுர்த்தி அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டில் தென்மராட்சிப் பிரதேசத்தில் விவசாய வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், வரணி ஆகிய 4 சமுர்த்தி வலயங்களில் இருந்து தலா ஒரு வீதி என்ற அடிப்படையில் 4 விவசாய வீதிகள் ஒவ்வொன்றும் 2 லட்சம் ரூபா செல வில் அமைக்கப்படவுள்ளன.

இதில் மூன்றிலொரு பங்கு சமுர்த்திப் பய னாளிகளின் பங்களிப்பாக வழங்கப்படவேண் டும் என சமுர்த்தி அதிகார சபையால் மாவட் டச் செயலகம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-74)

# மீளாய்வு ஓய்வூதியம் ஓகஸ்டில் விநியோகம்

தென்மராட்சி,ஜூலை15

தென்மராட்சி பிரதேச ஓய்வூதியர்களுக்கு மீளாய்வு செய்யப்பட்ட ஓய்வூதியம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வழங்கப்படவுள்ளது.

ஓய்வூதிய மீளாய்வுக்குத் தகுதியான ஆயிரத்து 200பேரில் 400 குடிசார் (சிவில்) ஓய்வூதியர்களுக்கு ஓகஸ்ட் மாதமும் -

அதிபர்கள், ஆசிரியர்களுக்கு செப்ரெம்பர் மாதமும், ஏனையோருக்கு ஒக்ரோபர் மாதமும் -

அதிகரித்த ஓய்வூதியம் நிலுவைகளுடன் வழங்கப்படவுள்ளது எனப் பிரதேசச் செயலக ஓய்வூதியப் பிரிவினர் தெரிவித்தனர்.

1996 டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்றவர்களுக்கு ஓய்வூதிய முரண்பாடு தொடர்பாக மீளாய்வு செய்யப் பொதுநிர்வாக அமைச்சினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வூதியம் மீளாய்வு செய்யப்படு கின்றது.

இந்த ஓய்வூதிய அதிகரிப்பு 2004 ஜனவரி தொடக்கம் வழங்கப்படவுள்ளதால் நிலுவை யுடன் இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதேவேளை -

இக்காலப்பகுதிக்குரிய விதவைகள் ஓய்வூதியம் பெறுவோருக்கு இக்கொடுப்பனவு வழங்குவது பற்றிச் சுற்றறிக்கையில் குறிப்பிடாததால் இவர்களுக்கு இக்கொடுப்பனவு தொடர்பாக மீளாய்வு செய்யப்படவில்லை எனத தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# சிறுவர் மேம்பாட்டு அலுவலர்களின் சேவைக்காலம் ஒரு வருடம் நீடிப்பு

கொக்குவில்,ஜூலை15

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் ஒருவருடம் நீடிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலத் துறைத் திணைக்கள ஆணையாளர் என்.ஆர். ரஞ்சினி பிரதேச செயலர்களுக்கூடாக அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சேவை நீடிப்பு இவ்வாண்டு மே மாதம் 7 ஆம் திகதிமுதல் அடுத்த வருடம் மே மாதம் முதலாம் திகதிவரை நீடிக கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் நல்லூர், யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலகங்களுக்கு நான்கு சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்த னர்.

இவர்கள் ஏனைய பிரதேச செயலகங்களி லும் பதிற்கடமை புரிகின்றனர்.

சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாகப் பிரதேச ரீதியாக ஆலோசனைக் குழுக்களை அமைத்தல், பிரச்சினைகளுக்கு ஆளாகியிருக்கும் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், துஷ் பிரயோகங்களின்போதும் தவறான குற்றச்செயல புரிகின்றபோதும் சிறுவர்களைக் கையாளல், வேலைக்கு அடிமையாக்கப்படுதலைத் தடுத்தல், பிள்ளைகளை மேம்படுத்துதல், பிள்ளைகளின் சுகாதார விருத்திக்கு உதவுதல், சிறுவர்களின் கல்விக்கான உரிமைகளைப் பேணுதல் என்பன சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் கடமைகளாகும். (ஒ-76)

### ஆண்டுவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை15

பண்டத்தரிப்பு சென். மேரிஸ் சனசமூக நிலையத்தின் 49ஆவது ஆண்டுவிழா நாளைமறு தினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் சேவியர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்துகொள்வார்.

விழாவினை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகளும், இரவு கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (ஒ-15)

### மீன் பிடிக்கும் நேரம் அதிகரிப்பு

தென்மராட்சி,ஜூலை15

கச்சாய் கடலேரியில் கடற்றொழில் மேற் கொள்வதற்கான நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை வள்ளங் களில் சென்று மீன்பிடிக்க அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

முன்னர் காலை 6 மணி தொடக்கம் பகல் 11 மணிவரையும், பின்னர் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 6 மணிவரையும் கடலுக் குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

### விலைநிர்ணயக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

இந்த வருடத்தின் இரண்டாவது அரை யாண்டுக்கான மாவட்ட விலை நிர்ணயக் குழுக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட் கிழமை யாழ். செயலகத்தில் நடைபெற வுள்ளது.

யாழ். அரச அதிபர் தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில் பிரதேச செயலர்கள், தொழில்நுட்பத்துறை சார்ந்த உத்தியோகத் தர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.(ஒ-202-203)

# உள்ளூராட்சி உதவியாளர் சங்கம் மீள்நியமனங்களுக்கு ஆட்சேபம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

60 வயதைத் தாண்டியவர்களால் அரசுப் பணிகளில் வினைத்திறனான சேவையை முழு மையாக ஆற்றமுடியாது.

- இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவியாளர் சங்கம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:-

மாகாணசபை நிர்வாகத்தில் தற்போது 60 வயதைத் தாண்டியவர்களே பெரும்பாலும் உயரதிகாரிகளாகக் கடமையாற்றி வருகின்றனர்.

இவர்களால் பொதுச்சேவையைத் திறனாக வழங்கமுடியாதுள்ளது.

எனவே, ஓய்வுபெற்றவர்களை மீள்நியம னம் செய்வதற்கு அமைச்சுச் செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் சிபார்சு செய்வதனைத் தவிர்க்கவேண்டும்.

புதிய வேலைவாய்ப்புகளைப் பட்டதாரி களுக்கு வழங்குவதற்கு அரசு முயற்சி செய்து வருகின்றது. இந்நிலையிலும், 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் மேலதிகாரிகளின் சிபார்சி னால் அத்தியாவசியச் சேவைகள் தவிர்ந்த பணிகளிலும் - தங்களது வேலைகளைத் தக்க வைத்துள்ளனர்.

இவர்கள் வேதனத்தை மட்டும் குறிக்கோளா கக் கொண்டுள்ளனரே தவிர, பொதுச்சேவையில் ஈடுபட அவர்களது வயது பொருத்தமான தாகவில்லை. அத்துடன், இளைஞர், யுவதிகளின் முன்னேற்றத்துக்கு இவர்கள் தடையாக உள் ளனர்.

எனவே, 60 வயதிற்கு மேற்பட்டவர்களது சேவையை முடிவுக்குக் கொண்டுவந்து புதிய இளம் அலுவலர்களுக்கு அரச சேவையில் இடம்வழங்கப்படவேண்டும் - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-185)

# சாவகச்சேரிப் பகுதியில் நாய்களுக்குத் தடுப்பூசி

தென்மராட்சி,ஜூலை15

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள மீசாலைப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பு மருந்து ஏற்றப்படும் இடங்களும், திகதிகளும் வருமாறு:-

நாளை காலை 9 மணிக்கு மீசாலை வீனஸ சனசமூக நிலையத்திலும், 11 மணிக்கு மீசாலை மேற்கு மகளிர் கிராமிய அபிவிருத் திச் சங்க மண்டபத்திலும், பகல் ஒரு மணிககு மீசாலை உப அஞ்சல் அலுவலகத்திற்கு அரு கிலும் -

ஜூலை 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு அருகிலும், 11 மணிக்கு மீசாலை மேற்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும், பகல் ஒரு மணிக்கு மருதடிவீதி ஐங்கரன் பாலர் பாட சாலையிலும் -

ஜூலை22ஆம் திகதி காலை 9 மணிக்கு பெரிய அரசடி சனசமூக நிலையத்திலும், 11 மணிக்கு மடத்தடிச்சந்தி மண்டபத்திலும் -

ஜூலை 23ஆம் திகதி காலை 9 மணிக்கு மீசாலை கிழக்கு ஸ்ரீமுருகன் சனசமூக நிலை யத்திலும், 11 மணிக்கு காட்டுவளவு கந்த சுவாமி கோயில் அருகிலும், 12 மணிக்கு அல்லாரை நிதி சனசமூக நிலையத்திலும் -

தடுப்பூசி மருந்து வளர்ப்புநாய்களுக்கு ஏற் றப்படுமென இப்பகுதிப் பொதுச்சுகாதாரப் பரி சோதகர் ம.கர்ணன் அறிவித்துள்ளார்.(ஒ-31-117)



சூழல் பாதுகாப்பு வாரத்தையொட்டி உடுவில் கமநல சேவைப் பகுதியினரால் மேற் கொள்ளப்பட்ட சிரமதான நிகழ்வின்போது உடுவில் கமநல சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் செ.சோதிநாதன் தலைமையில் விவசாய போதனாசிரியர் ச.சிவனேசன், கமநல சேவைத்தலைவர் எஸ்.இலகுநாதன் உட்பட விவசாய சம்மேளனங்களின் பிரதி நிதிகள், தலைவர்கள், விவசாயிகள் ஆகியோர் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: வலி. தெற்குச் செய்தியாளர்)*

# காற்றிலிருந்து குடிதண்ணீர்; தமிழகத்தில் தயாரிக்கத் திட்டம்

சென்னை,ஜூலை15

பருவமழை சரியாகப் பெய்யாததால் தமிழகத்தில் கடும் குடி தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வாகனங்கள் மூலம் தண்ணீர் எடுத்து வந்து தமிழக அரசு தண்ணீர் பிரச்சினையைச் சமாளிக்கிறது.



இதனால், கடல் தண்ணீரை குடி தண்ணீராக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சியில் தமிழக அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.


இந்த நிலையில் குடிதண்ணீர் பிரச்சினைக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்கக் காற்றில் இருந்து தண்ணீர் தயாரிக்கலாம் என்ற யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை நடைமுறைப்படுத்த 'கல்ப் ஹோல்டிங்ஸ்' என்ற அரேபிய நிறுவனம், அமெரிக்க நிறுவனத்துடன் சேர்ந்து முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. காற்றில் இருந்து தண்ணீர் தயாரிப்பதற்கு என்றே சீனா ஒரு நவீன கருவியைக் கண்டு பிடித்துள்ளது. காற்றில் உள்ள ஈரப்பதனை உறிஞ்சி எடுத்து, அதை அந்தக் கருவி தண்ணீராக மாற்றிக்கொடுக்கும்.

இந்த நவீன கருவியின் விலை இந்திய மதிப்பில் 25 ஆயிரம் ரூபாவாகும். ஒரு நாளைக்கு சுமா 25 லீற்றர்கள் தண்ணீரை அந்தக் கருவி மூலம் பெறமுடியும்.

காற்றில் இருந்து தயாரிக்கப்படும் தண்ணீர் என்பதால், அது மிகவும் சுத்தமாக இருக்கும் என்று 'கல்ப் ஹோல்டிங்ஸ்' நிறுவனம் கூறி உள்ளது. சென்னையில் இதை இன்னும் 2 மாதங்களில் நடைமுறைப்படுத்த அந்த நிறுவனம் தீவிரமாக உள்ளது.

சென்னை நகரைப் பொறுத்தவரை 70 முதல் 80 சதவீதம் வரை ஈரப்பதன் உள்ள காற்று எப்போதும் வீசுகிறது. பருவநிலை மாறினாலும் கடல் காற்று நல்ல ஈரப்பதத்துடன் வீசுகிறது. (ஒ)

தமிழகத்தின் புராதன ஆலயங்களில் ஒன்றான ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் ஆடித்தேரோட்டத்தையொட்டி நேற்றுமுன்தினம் கோயிலில் கொடியேற்றப்பட்டது. (உள்படம்) மலர் அலங்காரத்தில் ஆண்டாள் - ரெங்கமன்னார் சுவாமி.



# இந்தியாவின் வடகிழக்கில் வெள்ளம்; இருநூறு பேருக்கும் மேல் உயிரிழப்பு!

பாட்னா,ஜூலை15

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் கடந்த சில நாள்களாகக் கடும்மழை பெய்து வருகிறது. இதனால், பீகார், அசாம், மேகாலயா, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்கள் பாதிக்கப்பட்டு உள்ளன.

இதில் பீகார், அசாம் மாநிலங்கள்தான் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பீகார் மாநிலத்தில் 14 மாவட்டங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டு உள்ளன. மற்றப் பகுதிகளுடன் அவை துண்டிக்கப்பட்டுள்ளன.

இமயமலையில் உற்பத்தியாகும் நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதில் மிகப் பெரிய நதியான பிரம்மபுத்ராவில் வெள்ளம் அபாயக் கட்டத்தைத் தாண்டிச் செல்கிறது.

பூட்டானையும், அசாமையும் இணைக்கும் கலாநதியின் பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. பீகாரில் பல மாவட்டங்களில் வெள்ளம் காரணமாக தலைநகர் பாட்னாவுடன் தகவல்தொடர்பு துண்டிக்கப்பட்டு உள்ளது.

தர்பங்காவில் அகில இந்திய வானொலி தனது ஒலிபரப்பை நிறுத்திவிட்டது. அங்குள்ள ஒலிப்பதிவு கூடத்துக்குள் வெள்ளம் புகுந்து கருவிகள் சேதம் அடைந்தன.

இதேபோல் வீதிகளில் அரிப்பு ஏற்பட்டு சாலைப் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டு உள்ளது.

பீகார், அசாம் உட்பட வடமாநிலங்களில் மழைக்குப் பலியானோர் எண்ணிக்கை 200 ஐ தாண்டி விட்டது. பீகாரில் 100 பேர் வரையும் அசாமில் 100 இற்கும் மேற்பட்டவர்களும் மழைக்குப் பலியாகிவிட்டார்கள்.

50 லட்சம் மக்கள் வீடு இழந்து தவிக்கிறார்கள். அவர்கள் பாடசாலைகள் மற்றும் அரச கட்டடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அசாம், பீகாரில் தொடர்ந்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு இருப்பதால் அங்கு மீட்புப் பணியில் இராணுவம் முழுவீச்சில் ஈடுபட்டு உள்ளது. (ஒ)



வெள்ளத்தால் இடம்பெயர்வோர்...

## ரயிலில் குண்டு வெடிப்பு; தலை சிதறி ஒருவர் பலி!

குல்பர்கா,ஜூலை15

கர்நாடகாவில் ரயிலில் வெடிகுண்டு வெடித்து ஒருவர் உடல் சிதறிப் பலியானார்; இரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

கர்நாடக மாநிலம் குல்பர்கா மாவட்டத்தில் சித்தாபூர் ரயில் நிலையம் உள்ளது. சித்தாபூர் ஐதராபாத் இடையே இயக்கப்படும் பயணிகள் ரயில் நேற்றுமுன்தினம் இங்கு வந்தது. அதில் இருந்து இறங்கிய மூன்று பேர் சித்தாப்பூரில் உள்ள பழைமை வாய்ந்த நாகதேவி கோயில் பற்றி விசாரித்தனர். மூவரும் அதிக மது போதையில் இருந்தனர்.

பிறகு மீண்டும் ரயிலின் ஒரு பெட்டியில் ஏறினர். சிறிது நேரத்தில் அப்பெட்டியில் பயங்கரச் சத்தத்துடன் வெடிகுண்டு வெடித்தது. அதில் மூன்று பேரில் ஒருவர் தலை சிதறி இறந்தார். அவருடைய வலது தோள்பட்டை பிரிந்து கொண்டு வெளியே சென்று விழுந்தது. மற்ற இரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

விசாரணையில் அவர்கள் ஆந்திராவில் இருந்து வந்தவர்கள் என்று தெரியவந்தது. பலியானவர் பெயர் நரசிம்மாச்சாரி (40) படுகாயமடைந்த இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ)

## புதுடில்லியில் ஆர்மிரேஜ்



புதுடில்லி,ஜூலை15

அமெரிக்க வெளியுறவு இணை அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் இரண்டு நாள் அரசு முறை பயணமாக நேற்றுமுன்தினம் மாலை டில்லி வந்தார். விமான நிலையத்தில் அவரை இந்திய வெளியுறவுத் துறை மூத்த அதிகாரிகள் வரவேற்றனர். மத்திய வெளியுறவுத் துறைச் செயலாளர் ஷஷாங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.தீக்சித் ஆகியோரை நேற்று அவர் சந்தித்தார். இன்று பிரதமர் மன்மோகன் சிங், வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங், பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோரைச் சந்தித்துப் பேசுவார்.

இந்தியா, பாகிஸ்தான் அமைதிப் பேச்சு நிலைவரம், ஈராக் புதிய அரசு குறித்து இந்தியாவின் அணுகுமுறை ஆகியவை அவரது பேச்சில் முக்கியமாக இடம்பெறும். புதிய அரசு பதவியேற்ற பிறகு முதலில் இந்தியாவுக்கு வரும் அமெரிக்காவின் முக்கிய அமைச்சர் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## பிரதமர் அலுவலகத்துக்கு நிகராக சோனியாவுக்கு அலுவலகம்

புதுடில்லி,ஜூலை15

சோனியா தலைமை வகிக்கும் தேசிய ஆலோசனைக் குழுவிற்கு மத்திய அரசு அதிகாரபூர்வ அந்தஸ்தை வழங்கியுள்ளது. சோனியாவுக்கு உதவ செயலகம் ஒன்றை உருவாக்கவும் மன்மோகன்சிங் அரசு திட்டமிட்டுள்ளது. பிரதமர் அலுவலகத்துக்கு நிகராக இந்த அலுவலகம் செயற்படவுள்ளது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் குறைந்தபட்ச பொதுச்செயல் திட்டத்தை நிறைவேற்றத் தேசிய ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக்குழுவின் தலைவராக காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், சோனியா தலைமையேற்றுள்ள அந்தக்குழுவிற்கு அதிகாரபூர்வ அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. அவருக்கு உதவிசெய்யும் வகையில் செயலகம் ஒன்றை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமையன்று மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இதில் தேசிய ஆலோசனைக்குழுவின் செயலகத்திற்காக செயலாளர் மற்றும் இணைச் செயலாளர் ஆகிய இரு பதவிகள் உருவாக்க முடிவு எடுகக்கப்பட்டது. மேலும், இந்தப் பதவிகளுக்கு ஒபபந்த அடிப்படையில் வெளியில் இருந்து அதிகாரிகளை நியமித்துக்கொள்ளவோ அல்லது அரசுப் பணியில் இருப்பவர்களை இங்கு 'பணிபுரிய அழைத்துக்கொள்ளவோ சோனியாவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தேசிய ஆலோசனைக் கவுன்சிலின் செயற்பாடுகளுக்கான செலவுகளைப் பிரதமர் அலுவலகம் மூலமாக மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்.

தேசிய ஆலோசனைக்குழுவின் தலைவரான சோனியாவுக்கு அரசு அமைப்பில் எப்படிப்பட்ட அந்தஸ்து அளிக்கப்படும் என்பது குறித்து எதிர்க்கட்சிகள் சர்ச்சையைக் கிளப்பியதை அடுத்து, மத்திய அமைச்சரவைக் கூடத்தில் இந்தமுடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

தேசிய ஆலோசனைக் குழு உருவாக்கப்பட்டிருப்பதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்புத தெரிவித்துள்ளன.




## வீதியோர உணவகங்களுக்கு காக இறைச்சி விற்றவர் கைது

சேலம்,ஜூலை15

தமிழகத்தின் சேலத்தில் உள்ள வீதியோர உணவகங்களுக்கு காகங்களின் இறைச்சி விநியோகித்தவர் கைது செய்யப்பட்டார்.

சேலம் பஞ்சந்தாங்கி ஏரிப்பகுதியைச் சேர்ந்தவர் ஆறுமுகம் (வயது 60) மயக்க மருந்து மூலம் காகங்களை வேட்டையாடுவதைத் தொழிலாகச் செய்துவந்தார்.

அம்மாப்பேட்டை அருகேயுள்ள பாவடி மாநகராட்சிப் பாடசாலைக்கு சென்ற ஆறுமுகம், மயக்க மருந்து கலந்த உணவைத் தூவினார். மதிய வேளை என்பதால் ஏராளமான காகங்கள், அவற்றைத் தின்று மயங்கி விழுந்தன. உடனே அவற்றைப் பையில் போட்டுக்கொண்டு, அங்கிருந்து செல்ல முயன்றார்.

இதைப் பார்த்த மாணவர்கள் சிலர் ஆறுமுகத்தை பிடித்து அம்மாப்பேட்டை பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். நகரில் உள்ள தெருவோர உணவகங்களுக்கு காகங்களின் இறைச்சியை விநியோகம் செய்தார் என்று ஆறுமுகம் தெரிவித்தார். புறா, காடை இறைச்சி என்ற பெயரில் காகங்களின் இறைச்சியை உணவகங்களுக்கு விற்பனை செய்வதாக விசாரணையில் அவர் தெரிவித்துள்ளரர். (ஒ)

## தமிழக அரசைக் கண்டித்து மணி அடிக்கும் போராட்டம்

சென்னை,ஜூலை15

தொழிற்கல்வி மாணவர் சேர்க்கை உள்பட பல விடயங்களில் தமிழக அரசு செயலற்று இருப்பதாகவும், அதன் தூக்கத்தைக் கலைப்பதாகவும் கூறி மணி அடிக்கும் போராட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சியினர் ஈடுபட்டனர்.

சென்னை வள்ளுவர்கோட்டம் எதிரே நேற்றுமுன்தினம் நடந்த போராட்டத்துக்கு கட்சித் தலைவர் ஜி.கே.மணி தலைமை வகித்தார்.

போராட்டத்தில் ஜி.கே.மணி பேசியதாவது:-

தமிழக அரசின் கல்வித்துறை செயலிழந்து இருக்கிறது. இதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவ, பொறியியல் படிப்புக்கான நுழைவுத்தேர்வு முறையிலும் வரலாறு காணாத குளறுபடி நடந்துள்ளது.

பிற மாநிலங்களில் கல்விக் கட்டணங்கள் குறைக்கப்படுகின்றன. தமிழகத்திலோ அதிகரிக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைத் தமிழக அரசு கண்டுகொள்ளாமல், ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறது. அதைக் கண்டித்து இந்தப போராட்டத்தை நடத்துகிறோம். அரசு உடனடியாக நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்றார் மணி. (ஒ)

## உயிருடன் புதைத்த குழந்தை மீட்பு!

கூடலூர்,ஜூலை15

பிறந்து சில மணி நேரமே ஆன பச்சிளங் குழந்தை புதைக்கப்பட்டது. பின்னர் அக் குழந்தை உயிருடன் மீட்கப்பட்டுவிட்டது.

தமிழகத்தில் கூடலூரை அடுத்துள்ள சீதா மணலைப் பகுதியில் புற்கள் நிறைந்த மறைவிடத்தில் குழந்தையின் மீது புல்லிட்டு மண்ணால் திங்கட்கிழமை மூடியுள்ளனர். அப்போது புல் அறுக்கச் சென்ற பெண்கள், குழந்தையின் அழுகுரல் கேட்டனர். உடனடியாகப் பொலீஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. பொலீஸ் உதவியுடன் குழந்தை உயிருடன் மீட்கப்பட்டது. குழந்தையின் உடலில் ஏற்பட்ட காயங்களுக்கு அரச மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

தவறான உறவால் பிறந்ததாலோ அல்லது பெண் குழந்தை என்பதாலோ பெற்ற தாயே இதனைப் புதைத்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

# பக்தாத்தின் மையப் பகுதியில் நேற்றுப் பயங்கரத் தாக்குதல்!

பக்தாத்,ஜூலை15

ஈராக் தலைநகர் பக்தாத்தின் மையப்பகுதியில் நேற்றுப்பகல் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் 10பேர் கொல்லப்பட்டனர்; 40 பேர் படுகாயமடைந்தனர்.


குண்டு வெடித்த வேளையில்...


அமெரிக்க, பிரிட்டிஷ் தூதரகங்கள், அரச அலுவலகங்கள் ஆகியவை அமைந்துள்ள பகுதியில் உள்ளூர் நேரப்படி நேற்றுமுற்பகல் 9.15 மணியளவில் இத்தாக்குதல் இடம்பெற்றது.

தாக்குதல் இடம்பெற்ற இடம் 'பச்சைப் பிரதேசம்' என்று முன்னர் அழைக்கப்பட்ட அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியாக இருந்தது. அங்கு வெளி நாட்டுப் பத்திரிகையாளர்கள், அதிகாரிகள் உட்படப் பலரும் தமது அன்றாடப் பணிகளை மேற்கொள்ளப் புறப்பட்டுக் கொண்டிருந்தவேளையிலேயே இச் சம்பவம் நடந்துள்ளது.

இதுபெரும்பாலும் தற்கொலைத் தாக்குதலாகவே கருதப்படுகிறது. ஈராக்கில் இடைக்கால அரசு பதவியேற்றபின் இடம்பெற்ற மிக மோசமான தாக்குதல் இதுவெனக் கூறப்படுகிறது.

இடைக்கால அரசு பதவியேற்க முன்னர், இப்பகுதியில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையின் தலைமை நிர்வாக அலுவலகம் இயங்கிவந்தது.

1958 ஆம் ஆண்டு ஈராக்கில் மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டுவந்த புரட்சியின் ஆண்டு தினத்தன்று இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)


இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள குஷிங்கர் நகரில் 150 மீற்றர்கள் உயரமான பித்தளையாலான புத்தர்சிலை நிறுவப்படவுள்ளது. ஜப்பானிய மத நிறுவனம் ஒன்றுடன் இணைந்து உத்தரப் பிரதேச அரசு இந்தச் சிலையை அமைக்கவுள்ளது. கணனியில் வடிவமைக்கப்பட்ட சிலையின் மாதிரி வடிவமே இது. 25 நூற்றாண்டுகளுக்கு முன்னர் புத்தர் குஷிங்கர் நகரிலேயே பரிநிர்வாணம் (முக்தி) அடைந்தார் என்று கருதப்படுகிறது.

# தடுப்புச் சுவர் விவகாரத்தில் தலையிட ஐ.நா.தீர்மானம்

நியூயோர்க்,ஜூலை15

பலஸ்தீனத்தின் மேற்குக்கரையில் இஸ்ரேல் கட்டியுள்ள தடுப்புச் சுவரை இடிக்க இஸ்ரேலை இணங்கவைக்க ஐ.நா.சபை தீர்மானம் இயற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் கட்டியுள்ள தடுப்புச்சுவரை இடிக்கவேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

ஆனால், அதை இடிக்கமுடியாது என்று இஸ்ரேல் மறுத்துவிட்டது. எனவே, இஸ்ரேலை நிர்ப்பந்திக்கும் பொருட்டு ஐ.நா.சபை தீர்மானம் இயற்றும் என்றுதெரிகிறது.

191 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட இச்சபையில் உள்ள அரபுநாடுகள் அனைத்தும் இத்தீர்மானத்தை வரவேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேசமயம் - இந்தத்தீர்மானம் மூலம் இஸ்ரேலைக் கட்டுப்படுத்தமுடியாது. இஸ்ரேலைக் கட்டுப்படுத்தப் பாதுகாப்புச்சபை தீர்மானம் நிறைவேற்றவேண்டும். அதிலும் இஸ்ரேலின் கூட்டாளியான அமெரிக்கா தனது 'வீட்டோ' அதிகாரத்தின் மூலம் தீர்மானத்தை இரத்துச்செய்யலாம். (ஒ)

# பல்கேரியப் பணயக் கைதியை ஈராக் கிளர்ச்சியாளர் கொன்றனர்

லண்டன்,ஜூலை15

ஈராக்கில் கிளர்ச்சியாளர்களால் கடத்திச் செல்லப்பட்டவரான பல்கேரிய லொறிச் சாரதி கொல்லப்பட்டார். இதனை பல்கேரிய அரசு உறுதிப்படுத்தியது. இதேசமயம், இவருடன் கடத்தப்பட்ட மற்றொரு பல்கேரியரையும் கொன்றுவிடப்போகிறோம் என்று கிளர்ச்சியாளர்கள் மிரட்டியுள்ளனர்.

இதனை அல் ஜஸீரா தொலைக்காட்சி தெரிவித்தது.

ஈராக்கில் உள்ள சுமார் 500 பல்கேரியப் படையினரை அந்தநாடு திருப்பியழைககவேண்டும் என்றும் - இல்லாவிட்டால் தாம் கடத்திய இருபல்கேரியர்களையும் கொன்றுவிடுவார்கள் என்றும் - கிளர்ச்சியாளர்கள் முன்னர் எச்சரித்தனர்.

இந்தநிலையிலேயே, அல் ஜெஸீரா தொலைக்காட்சியில் பல்கேரிய பணயக்கைதி கொல்லப்பட்டவிடயம் ஒளிபரப்பானது.

அல் தாஹித் என்ற போர்க் குழுவே இந்த ஒளிநாடாவை அனுப்பியது என்று அல் ஜஸீரா தொலைக்காட்சி தெரிவித்தது. அந்த ஒளிநாடாவில் உள்ள காட்சிகளில் -

கடத்தப்பட்ட பல்கேரியர் ஒருவர் முன்னர் கொல்லப்பட்ட பணயக்கைதிகள் அணிந்திருந்ததைப் போலவே செம்மஞ்சள் உடையணிந்திருந்தார். அவர் முழுந்தாளில் இருக்க அவர் முன்பாகக் கறுப்பு உடையில் முகமூடி அணிந்த கிளர்ச்சியாளர்கள் மூவர் நின்றிருந்தனர்.

அந்த ஒளிநாடாவில் பிரஸ்தாப பல்கேரியர் சிரச்சேதம் செய்யப்படும் காட்சியும் உள்ளதாகவும் -

ஆனால், அதிலுள்ள கொடூரம் கருதித் தாம் அந்தக் காட்சியை ஒளிபரப்பவில்லை என்றும் அல்-ஜஸீரா அறிவிப்பாளர் கூறினார்.

ஆனாலும், ஈராக்கிலிருந்து தமது படையைத் திருப்பி அழைக்கப்போவதில்லை என பல்கேரியா அறிவித்துள்ளது.


அல் ஜசீரா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட காட்சியில் பணயக் கைதியும் கிளர்ச்சியாளர்களும்...

இதேவேளை -

ஈராக்கில் பணியாற்றும் சவூதி அரேபிய நிறுவனம் அங்கிருந்து வெளியேறாவிட்டால் தம்வசமுள்ள அந்த நிறுவனத்தின் பணியாளரான எகிப்தியரைக் கொன்றுவிடப்போவதாகக் கிளர்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

ஈராக்கில் பிலிப்பைன்ஸ் நாட்டவர் ஒருவர் கடத்தப்பட்டதையடுத்து அந்தநாடு ஈராக்கில் உள்ள தனது படையை விலக்கிக்கொள்ளத் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# அமெ. கோடீஸ்வரர் ரொக்பெல்லர் காலமானார்

நியூயோர்க்,ஜூலை15

அமெரிக்காவின் கொடையாளர் லோரென்ஸ் ரொக்பெல்லர் (வயது-94) தூக்கத்திலேயே ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்தார்.

கோடீஸ்வரரான ரொக்பெல்லரின் சொத்து மதிப்பு ரூபா 300 கோடியாகும்.

அமெரிக்க நாட்டின் பொருளாதார, சமூக, பாதுகாப்பு வளர்ச்சிக்கான பல திட்டங்களுக்கும் உதவியவர் ரொக்பெல்லர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## பெண்களைச் சிறை வைத்த அமெரிக்கர்கள் கைது!

காபூல்,ஜூலை15

ஆப்கானியப் பெண்கள் சிலரைத் தனியாக அடைத்துவைத்திருந்தார்களென்று கூறப்படும் மூன்று அமெரிக்கர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உலக அரங்கில்

மூன்று அமெரிக்கர்களையும் நான்கு ஆப்கானியர்களையும் தாங்கள் கைதுசெய்துள்ளதாகவும் -

இவர்கள் ஏழு ஆப்கானியப் பெண்களை சிறைவைத்திருந்தார்கள் என்றும் ஆப்கான் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ப)

# ஆடைச் சுதந்திரம் இல்லாமல் அவதிப்படும் ஈரான் பெண்கள்

டெக்ரான்,ஜூலை15

ஈரானில் பெண்கள் நாகரிக உடை அணிந்தால் கடும் அபராதம் விதிக்கப்படுகிறது.

இஸ்லாமிய பழைமைவாத நாடான ஈரானில் பெண்கள் உச்சி முதல் உள்ளங்கால்வரை கறுப்பு ஆடையால் (பர்தா) மூடியபடி நடக்க வேண்டும். அவர்கள் அணிந்துள்ள காதணியோ, காலணியோ வெளியே தெரியக்கூடாது. பழைமைவாதிகள் நிறைந்துள்ள இந்நாட்டில் மிதவாதப் போக்குடைய முகமது கடாமி அதிபராக உள்ளார். இதைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் நாகரிக ஆர்வமுள்ள பெண்கள் கறுப்பு பர்தாவுக்கு பதில் கலர் பர்தாவை அணிவது சமீப காலமாக அதிகரித்து வருகின்றது. இன்னும் ஒருபடி மேலே போய், இங்கு ஆடை அலங்கார அணிவகுப்புக்களும் நடக்க ஆரம்பித்துள்ளன. இதையெல்லாம் கண்டு பழைமைவாதிகள் கொதித்தெழுந்துள்ளனர்.

சமீபத்தில் நடந்த நாடாளுமன்ற மேலவைத் தேர்தலில் பழைமைவாதிகளே அதிக இடங்களைக் கைப்பற்றியுள்ளனர். பெண்களின் நாகரிக உடைமோகத்தினால் வல்லுறவுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக இவர்கள் குறை கூறியுள்ளனர். இதைத் தொடர்ந்து உடை விவகாரத்தில் எல்லை மீறும் பெண்களுக்கு கடும் அபராதம் விதிக்கப்படுகின்றது. இன்னும் பலர் பிரம்படிகள் வாங்குகின்றனர்.

சமீபத்தில் தலைநகர் டெக்ரானில், கார் செலுத்திச் சென்ற பெண்ணின் தலைத்துணி காற்றில் பறந்துவிட்டது. உடனடியாக அந்த பெண்ணின் காரை ஓரம் கட்டச் சொன்ன பொலீஸார், பெரிய தொகையை அபராதம் கட்டச் சொன்னார்கள். அது மட்டுமல்லாது, இந்தக் குற்றத்துக்காக அந்தப் பெண்ணுக்கு கசையடி தண்டனையும் காத்திருக்கிறதாம். பெண்கள் என்ன உடையணியவேண்டும், என்ன உடை அணியக் கூடாது என்ற அறிக்கையை வெளியிட வேண்டும் என இங்குள்ள மிதவாத போக்குடைய பத்திரிகைகள் அரசை வற்புறுத்தி வருகின்றன. (ஒ)

# அமெரிக்காவில் இனத்துவேஷம்

நியூயோர்க்,ஜூலை15

தாடியும், தலைப்பாகையும் அணிந்திருந்த சீக்கியரை முஸ்லிம் என நினைத்து குடிபோதையில் இருந்த இளைஞர்கள் தாக்கினர்.

ராஜிந்தர் சிங் கல்சா (வயது 54) நியூயோர்க் நகரில் வாகனச்சாரதியாகப் பணிபுரிகிறார். அவர் தனது உறவினர் குருசரண்சிங்குடன் ரிச்மோண்ட் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்துசென்றுகொண்டிருந்தார்.

அப்போது அவ்வழியே வந்த மூன்று அமெரிக்க இளைஞர்கள், அவர்களைக் கேலி செய்து தலைப்பாகையைக் கழற்றுமாறு கூறி ஏசினர்.

நாங்கள் இஸ்லாமியா அல்ல; மத விதிப்படி தலைப்பாகை அணிந்துள்ளோம் என்று குரு சரண்சிங் கூறியுள்ளார்.

இதனிடையே வாக்குவாதம் முற்றி, கல்சா பயங்கரமாகத் தாக்கப்பட்டார். அவருக்கு வெட்டுக்காயங்களும் மூக்கில் எலும்பு முறிவும் ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவரைப் பொலீஸார் கைதுசெய்தனர். மற்றைய இருவர் தலைமறைவாகிவிட்டனர். (ஒ)

# முன்னாள் அதிபரின் சொத்தை மக்களுக்குத் தர உத்தரவு

ஹோனலுலு,ஜூலை15

முன்னாள் பிலிப்பைன்ஸ் அதிபர் பெர்டினன்ட் மார்கோஸுக்குச் சொந்தமான 400 கோடி ரூபாவை வழக்குத் தொடர்ந்தவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என அமெரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் அதிபராக இருந்த மார்கோஸ், மக்கள் புரட்சியையடுத்து ஹவாய்க்குத் தப்பிச் சென்றார். அவர் ஊழல் செய்து சேர்த்த சொத்துக்களை அமெரிக்கா மற்றும் சுவிற்சர்லாந்தில் பல்வேறு வங்கிகளில் முதலீடு செய்திருந்தார்.

இதுதொடர்பாக பிலிப்பைன்ஸ் நாட்டவர் பலர் வழக்குத் தொடர்ந்திருந்தனர். வழக்கைத் தொடுத்தவர்களுக்கு ரூபா 400 கோடியை ஒப்படைக்கவேண்டும் என கடந்த 1995 இல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதை எதிர்த்து மார்கோஸ் முதலீடு செய்திருந்த வங்கி வழக்குத் தொடர்ந்தது. இது குறித்த இறுதித் தீர்ப்பில் 1995 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்பின்படி ரூ.400 கோடியை வழக்கைத் தொடர்ந்தவர்களுக்கே உடனடியாக வழங்கவேண்டும் என நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## போக்குவரத்துப் பொலீஸாரின் கண்காணிப்பு நடவடிக்கை தீவிரம்

வீதி ஒழுங்குகளை மீறிச் செயற்படும் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிளின் சாரதிகளுக்கெதிராக உடனடி நடவடிக்கை மேற்கொள்வதற்காக சுன்னாகம், தெல்லிப்பழை பொலீஸ் பிரிவுகளில் போக்குவரத்துப் பொலீஸாரால் விசேட நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வீதி ஒழுங்குகளை மீறிச் செயற்படும் சாரதிகளைக் கையும் களவுமாகப் பிடிக்கும் பொருட்டு வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலீஸார் தற்போது சைக்கிள், மோட்டார் சைக்கிள் ரோந்துகளை தீவிரப்படுத்தியுள்ளனர். சைக்கிளில் வரும் பொலீஸார் பாதைகளில் சாரதிகள் எதிர்பார்க்காத இடங்களில் அவர்கள் வீதி ஒழுங்குகளை மீறும்போது பிடித்து விடுகின்றனர். மேலும், குறுக்கு வீதிகள், வீதி வளைவுகளில் வாகனங்களைத் தடுத்து ஆவணங்களைப் பரிசோதித்தும் வருகின்றனர். ஆவணங்கள் அற்றோரிடம் உடனடித் தண்டமும் அறவிடப்படுகிறது. இந்நடவடிக்கைகளைத் தொடர்ந்து வலிகாமம் பகுதிகளில் உரிய ஆவணங்களின்றி வாகனங்களைச் செலுத்தும் பலர் வீதிக்கு வரமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

(ஓ-150)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை15

நல்லூர் ஸ்ரீசட்டநாதர் ஆலயத்தின் வருடாந்த அம்மன் மகோற்சவம் கடந்த 12ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றவருகிறது.

எதிர்வரும் 20ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

உற்சவ நாள்களில் தினமும் மாலை 7 மணிக்கு சித்தவைத்தியர் முத்துவேலு குமாரசாமியின் சமயச் சொற்பொழிவு இடம்பெற்று வருகிறது. (ஐ)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை15

கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்தப் பெருவிழா கடந்த 9ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும் நற்கருணைப் பவனியும், மறுநாள் காலை 7.30 மணிக்குத் திருவிழா திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (ஐ-201)

★ ★ ★ ★

தென்மராட்சி,ஜூலை15

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீபழநி ஆண்டவர் ஆலய அலங்கார உற்சவம் நாளைமறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 31ஆம் திகதி வேல் பவனியும் மறுநாள் முதலாம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஐ-117-31)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை15

அல்லைப்பிட்டி புனித உத்தரிய அன்னை ஆலயத்தின் வருடாந்த திருவிழாவில் இன்று மாலை 6 மணிக்கு திருச்செபமாலையும் நற்கருணை ஆராதனையும் நடைபெறும்.

நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசிரும் இடம்பெறும். (10)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை15

சண்டிலிப்பாய் வடக்கு - இரட்டையர் புலஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து எட்டுத்தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 24ஆம் திகதி பொங்கல் உற்சவமும் நடைபெறவுள்ளது. (10-13)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை15

சண்டிலிப்பாய், கல்வளை வீதி ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து எட்டுத்தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி பொங்கல் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (10-13)

## வெளிவாரி பரீட்சை

பொதுக்கலைமாணி தேர்வுப் பகுதி 1 2001 வெளிவாரி பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழக பரீட்சை நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது. இதற்கான நேர அட்டவணைகள், பரீட்சை அனுமதி அட்டைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் யாழ்பல்கலைக்கழக வெளிவாரி பதிவுகள் பரீட்சை அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் மேலதிக விவரங்களுக்கு 021 2223612 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம் எனவும் துணைவேந்தர் அறிவித்துள்ளர்.

(ஓ-201)

# விதைநெல் தேவைப்படுவோரை தொடர்புகொள்ளக் கோரிக்கை

வலி.தென்மேற்கு,ஜூலை15

மாகியப்பிட்டியில் இயங்கிவரும் கீரிமலை கமநல கேந்திர நிலையப்பிரிவிலுள்ள விவசாயிகள், சம்மேளனங்கள் எதிர்வரும் பெரும்போக நெற்செய்கைக்குத் தேவையான விதை நெல் தேவை பற்றிய விவரத்தை நிலையத்துக்கு அறிவிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் சம்மேளனங்கள் தமது பகுதியிலுள்ள விவசாயிகளிடமிருந்து தமக்குத் தேவைப்படும் விதை நெல் இனம், விதை நெல்லின் அளவு ஆகிய விவரங்களை சேகரித்துக் கொள்ளவேண்டும்.

பின்னர் சம்மேளனப் பிரிவுக்கான முழுத் தேவை பற்றி மதிப்பீடு செய்து கமநல கேந் திர நிலையத்திற்கு அதனை விரைவில் சமர்ப் பிக்க வேண்டும் என்று கமநல கேந்திரநிலைய பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித் துள்ளார்.

(எ-135)

## திருத்தம்

நேற்றைய உதயனில், 4ஆம் பக்கத்தில் - 'இன்று உடுப்பிட்டியில் ஆரம்பம்' என்னும் தலைப்பில் வெளியாகிய, அழகுக்கலையில் புதிய டிப்ளோமா வகுப்புகளும், பயிற்சிகளும் தொடர்பான விளம்பரத்தில் -

பயிற்சிகளை வழங்கும் ஆசிரியையின் பெயர் **திருமதி B.அகிலா** என்று இருக்க வேண்டும். தவறுதலாக **B.சுசீலா** என்று பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகின்றோம்.


ஆசிரியர் சேவைப் போட்டிப் பரீட்சை

சனி, ஞாயிறு: 3 - 6p.m. & 6 - 9 p.m.
வாரநாள்கள்: 3 - 6p.m. & 6 - 9 p.m.
பொதுஅறிவு IQ மாதிரி வினாத்தாள் கிடைக்கும்
(34122)(42) புதிய பிரிவு - 16-07-04 5 p.m.
திகழ் கல்வி நிறுவனம், K.K.S வீதி, இணுவில்.


## 2004 – மாபெரும் சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டி விண்ணப்பம்

வலி.தென் மேற்கு - மானிப்பாய் பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட மட்டத்தில் மாபெரும் சைக்கிள், மரதன் ஒட்டப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

✷ ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம் :- 35 மைல் ஓட்டம் (வயதெல்லை கிடையாது)

✷ ஆண்களுக்கான மரதன் ஓட்டம் :- 7மைல் ஓட்டம் (வயதெல்லை கிடையாது)

போட்டிகளில் கலந்துகொள்ளும் விண்ணப்பதாரர்கள் படிவங்களை

திரு.செ.ரமேஷ்(ச.நீ) உள்ளூராட்சி உதவியாளர்,
பிரதேச சபை மானிப்பாய்.

என்னும் முகவரியில் தொடர்பு கொண்டு பெறவும்.
விண்ணப்ப முடிவு திகதி : 21.07.2004
படிவம் இலவசம்.
போட்டி நேரம், திகதி படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பி.விக்டர்
செயலாளர்,
வலி.தென்மேற்கு
பிரதேச சபை
மானிப்பாய்.

(C/36193) (43-11-17-32)

## கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் பரிபாலன சபை உறுப்பினராக இருந்து திருப்பணிகளும் மகா கும்பாபிஷேகமும் சிறப்புற நிகழ ஒத்துழைப்புகள் வழங்கியவரான

### டாக்டர் கதிர்காமு இராஜேந்திரம்

அவர்கள் 12.07.2004 திங்கட்கிழமை இயற்கையெய்தியமையிட்டு நாம் மிகவும் துயருறுகின்றோம். அன்னாரின் இழப்பு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

அவரது மறைவால் துயரிலாழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கும் ஏனையவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல பர்வதவர்த்தனி அம்பாளின் பாதகமலங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

- ஆலய பரிபாலன சபையினர்.

(36192) (11-17-32)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 594 |
| திகதி | 13-07-2004 |

டிக்கட்டின் நிறம் - நீலம்

செல்லுபடியாகும் தொடர் இல. 47 98190-4813278

வெற்றி இலக்கங்கள்: 11 18 35 40

லக்கினம் மிதுனம்

ஜக்பொட் பரிசு ரூபா.16,93,050/- வெல்லப்படவில்லை.
இந்த வெள்ளிக்கிழமை ஜக்பொட் ரூபா. 24,45,450/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,36,967 | 10/- | 33,69,670/- |
| 2.இலக்கங்கள் | 30,938 | 20/- | 6,18,760/- |
| 1.இல + லக்கினம் | 30,621 | 30/- | 9,18,630/- |
| 2.இல + லக்கினம் | 2,800 | 100/- | 2,80,000/- |
| 3.இலக்கங்கள் | 834 | 500/- | 4,17,000/- |
| 3.இல + லக்கினம் | 78 | 5,000/- | 3,90,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 16,93,050/- | - |
| மொத்தம் | 4,02,242 | - | 63,94,060/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 63,94,060/-

தொடர் இல. 5775222 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 ஜுலை 16ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4812273-6-74
4808835-4-51
4799428-3-54
4804886-6-91
4799826-2-11


"சந்ததி சந்ததியாக தொடர்ந்து நாங்கள் போராடுவோம். அனைத்து ஓநாய்களும் கொல்லப்படும்வரை களத்தை விட்டு ஒருபோதும் அகலமாட்டோம்"

யாழ். பல்கலைக்கழக

வெறுவெளி அரங்க குழுவின் அரங்க ஆற்றுகைகள்



✪ சிவப்பு விளக்கு (சீன பீஜிங் ஓபேரா)
தமிழில் எழுத்துருவாக்கம்: குழந்தை ம.சண்முகலிங்கம்
நெறியாள்கை திரு.க.ரதிதரன்
✪ காலனை வென்ற காரிகை (இசைநாடகம்)
நெறியாள்கை திரு.நா. விமலநாதன்



இடம் :யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம்
காலம்: 17-07-2004 சனிக்கிழமை



நேரம்: காலை 10.30 மணி, மாலை 3.00 மணி
பிரவேசம்: மாணவர்களுக்கு 30/=
ஏனையோரிற்கு 50/=

குறிப்பு: 13-07-2003 இல் திட்டமிட்டபடி தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறாத இவ்வாற்றுகையின் அனுமதிச் சீட்டுக்கள் அன்றையதினம் செல்லுபடியாகும்.

விளம்பர அனுசரணை: நலன்விரும்பி


## புனித ஹென்றியரசர் கல்லூரியின் முன்னாள் அதிபர் வண.பிதா அன்ரன் இராசநாயகம்

### அடிகளாரின் அஞ்சலி நிகழ்வு

இறைபதம் அடைந்த அடிகளாரின் புகழுடல் எமது பாடசாலை சதுக்கத்தில், இன்று (15-07-2004) வியாழக்கிழமை முற்பகல் 11 மணி முதல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். மாலை 3.30 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து இரங்கல் உரைகளும் இடம்பெறும். இறுதியாக அடிகளாரின் புகழுடல் மாலை 6 மணிக்கு யாழ். ஆயர் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்படும். பின்பு நாளை (16.07.2004) வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு யாழ்.பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்க நிகழ்வுகள் இடம்பெறும். இந்த நிகழ்வில் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்துக் கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி குடும்பம்.

(34125)(29-17-32-11)

# மரண அறிவித்தல்கள்

## அன்ரன் இராஜநாயகம் அடிகள்



யாழ்.மறை மாவட்டத்தைச் சேர்ந்த ரி.அன்ரன் இராஜநாயகம் அடிகளார் 12.07.2004 அன்று கொழும்பில் காலமானார். 14.07.2004 புதன்கிழமை கொழும்பு சென். லோறன்ஸ் தேவாலயத்தில் 4.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் யாழ்.நகருக்கு அவரின் பூதவுடல் எடுத்து வரப்பட்டு, இன்று (15.07.2004) வியாழக்கிழமை மதியம் நேரடியாக புனித ஹென்றியரசர் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்படும். இன்று மாலை ஆயர் இல்ல சிற்றாலயத்தில் வைக்கப்படும்.

இவரின் பூதவுடல் நாளை (16.07.2004) வெள்ளிக்கிழமை காலை மரியன்னை பேராலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 4 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித மரியன்னை பேராலய சேமக்காலையில் இறுதிச் சடங்குகளின் பின்னர் நல்லடக்கம் செய்யப்படும். இவரின் பிரிவால் துயருறும் அவரின் சகோதரர் மகேந்திரன் அடிகளார் மற்றும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஜே.நீக்கிலஸ் அடிகளார்,
மறைமாவட்டகுருமுதல்வர்.

(C/36196)(29-17-32-11)

## டாக்டர் கதிர்காமு இராஜேந்திரம்

(பொறுப்பதிகாரி, அரச வைத்தியசாலை, புன்னாலைக்கட்டுவன்)



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கு, பலாலி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் கதிர்காமு இராஜேந்திரம் 12.07.2004 திங்கட்கிழமை இறையடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் திலகவதியின் பாசமிகு கணவரும் சத்தியதர்சினியின் அருமைத் தந்தையாரும் பாக்கியலிங்கத்தின் அன்பு மாமனாரும் பிருந்தன், பிதுரன் ஆகியோரின் அன்புப் பேரனும் சித்திரம் (இளைப்பாறிய ஆசிரியை - பிரான்ஸ்), சற்குணம், அன்னலட்சுமி (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற சின்னையா மற்றும் நல்லதம்பி காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி, நவரட்ணம், பஞ்சரட்ணம், யோகரட்ணம், துரைரட்ணம், பாலரட்ணம், திரவியம் மற்றும் சோதிரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற மகேந்திரனின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-07-2004) வியாழக்கிழமை பிற்பகல் 5.00மணிக்கு (பு.நே.) அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"தர்சினிகால்",
பலாலி வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(C/36189)(42-17-32-11)

தகவல்:
திருமதி திலகவதி (மனைவி).

# அமைச்சின் முன் அனுமதி பெற்றே இனிமேல் உலர் உணவு நிவாரணம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

நிவாரணப் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் முன்னனுமதி பெற்ற பின்னரே இடம் பெயர்ந்தோருக்கான இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

யாழ்குடாநாட்டிற்கு மீள்குடியமர ஏ-9 பாதையூடாகவும், இந்தியாவில் இருந்தும் அகதிகளாக வருபவர்களின் விவரங்கள் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சுக்கு அனுப்பப்பட்டு அனுமதி கிடைத்த பின்னரே அவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இது சம்பந்தமான சுற்றறிக்கை யாழ்செயலக புனர்வாழ்வுப் பகுதியினால் யாழ்.மாவட்ட பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரச அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மீள்குடியமர்ந்தவர்களுக்கான இலவச நிவாரண வழங்கல் என தலையங்கமிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:-

மீளக்குடியமர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அமைச்சின் முன் அனுமதிபெறப்படல் வேண்டும். இதற்கு ஏதுவாக மீளக்குடியமர்ந்தவர்களில் உலர் உணவு பெறத் தகுதியானவர்களின் விவரங்களை ஒவ்வொரு மாதமும் 2ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.செயலக புனர்வாழ்வு கிளைக்கு பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் காரியாலயங்கள் அனுப்பிவைக்க வேண்டும்.

மீளக்குடியமர்வோர் இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசித்த இடங்களில் நிவாரணம் பெற்று இருக்க வேண்டும். நிவாரணம் பெற்றதைத் தற்காலிக இருப்பிடத்தைச் சேர்ந்த பிரதேச செயலாளர் அல்லது உதவி அரச அதிபர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

கடைசியாக வழங்கப்பட்ட நிவாரணம்பற்றிய விவரமும் உரிய படிவம் மூலம் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

இந்தியாவில் இருந்து நாடு திரும்புவோர் இந்திய அரசினால் தமக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்திக்காட்டும் ஆவணத்தைக் காண்பிக்க வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர் இலவச நிவாரணம் பெறத் தகுதி உடையவர் என உறுதிப்படுத்தல வேண்டும் இவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது

(ஒ-68)

## நினைவுதின நிகழ்வுகள்

தென்மராட்சி,ஜூலை15

மீசாலை அல்லாரைப் பகுதியில் வீரமரணமடைந்த லெப்.சீலன், வீரவேங்கை ஆனன் ஆகியோரின் 21 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் இன்று மாலை 5.30 மணிக்கு அலலாரை சீலன் பூங்கா சிறப்பு அரங்கில் நடைபெறும்.

தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் க.சந்திரசேகரா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.இளம்பருதி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், தென் மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன் உட்பட பலர் கலந்துகொள்வர். (எ-117)

## வெங்காயச் செய்கை மழையால் பாதிப்பு

அரியாலை,ஜூலை15

கடந்தவார இறுதியில் பெய்த மழையினால் வலி.கிழக்கு பிரதேசத்தில் விவசாயிகள் மேற்கொண்ட வெங்காயச் செய்கையை பாதிகப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெங்காய அறுவடையை மேற்கொள்ள இருந்தவேளையில் மழை பெய்ததால் விளைந்த வெங்காயம் மழை வெள்ளத்தில் அழுகி பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நீர்வேலி, கோப்பாய், அச்செழு, சிறுப்பிட்டி போன்ற பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன என்றும் -கூறப்பட்டது. இதனால் அப்பகுதி விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர் (எ-17)

# கையெழுத்திடத் தெரியாதவர்கள் குடாநாட்டில் அதிகரிக்கும் அபாயம்

## பிரதேச செயலர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை15

யாழ்.குடாநாட்டில் கையெழுத்துக்கூட இடத் தெரியாதவர்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் அதிகரிக்கும் அபாயம் தோன்றியுள்ளது.

இவ்வாறு எச்சரித்தார் வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா.

வலி.தென்மேற்கு பிரதேச செயலகத்தில் அரச அதிகாரிகள், பொது அமைப்புக்களுக்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்றது.

இதில் பிரதேச செயலர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் யாழ்ப்பாணச் சமூகம் கல்வியில் முதன்மைபெற்று முன்னின்றதாக வரலாறுகளும், புள்ளிவிவரங்களும் கூறுகின்றன.

ஆனால், எமது பிரதேசத்தில் இன்று இலவசக்கல்வி வழங்கியபோதிலும் இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது.

இதனால் எதிர்காலத்தில் எழுத வாசிக்கத் தெரியாதவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே கல்வியதிகாரிகள், நன்னடத்தை அலுவலர்கள் திணைக்கள தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் பாடசாலையை விட்டு இடைவிலகிச் செல்லும் மாணவர்களை எமக்கு அறியத்தாருங்கள்.

நாம் உடன் நடவடிக்கை எடுக்கின்றோம் -என்றார் அவர்.

மேற்படி ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் விலங்கு விசர் நோய் குறித்த பாது காப்பும் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை வீதிகள், மதகுகள் புனரமைப்பு, டெங்கு நோய்த் தாக்கம் ஆகியவை குறித்து ஆராயப்பட்டது.

மேற்படி கூட்டத்திற்கு வலி.தென் மேற்கு உதவிபிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோக நாயகம், பிரதேசசபைச் செயலாளர் பி.விக்டர், அபிவிருத்திக் கூட்டிணைப்பாளர் திருமதி சி.பொன்மதி சம்மேளனத் தலைவர் சி.பொ.வ. மா.க முதலியார் ஆகியோருடன்கிராம அலுவலர்கள், அரச அலுவலர்கள், பொது அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டு அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் தெரிவித்தனர்.

(ஒ-185)

## கற்கள் பறிக்கப்பட்டும் வீதிபுனரமைப்புத் தாமதம்

ஏழாலை,ஜூலை15

வலி. தெற்குப் பிரதேச சபையினால் கற்கள பறிக்கப்பட்டு ஒருவருடம் கடந்த நிலையிலும் இலங்கையர்கோன் மேற்கு வீதியே இன்னும் திருத்தப்படவில்லை.

வீதியோரம் குவிக்கப்பட்ட கற்கள் வீதி எங்கும சிதறி இருப்பதால், பொதுமக்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்நோக்குகின்றனர்.

(ஒ-45-204)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா பாலசிங்கம்



பூநகரியைப் பிறப்பிடமாகவும், தலையாழியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசிங்கம் அவர்கள் நேற்று 14.07.2004 புதன்கிழமை காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

*அச்சக ஒழுங்கை,*
*தலையாழி.*
(34132)(40-11-12-36)
தகவல்: பா.தாசன் (மகன்).

## செல்வி செல்லத்துரை ஜெயரூபி (பட்டு)



நீர்வேலி வடக்கு, நீர்வேலி, பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஜெயரூபி 14.07.2004 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் செல்லத்துரை மகேஸ்வரி தம்பதிகளின செல்வப் புதல்வியும் திருச்செல்வம் (மலேசியா), ஜெயராசா, ஜெயராணி, ஜெசிந்தன் (மலேசியா), ஜெயமதி, ஜெயதரன் (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுமதி (மலேசியா), இந்திராணி, அமிர்தலிங்கம் (நல்லூர்), ஜெகதீஸ்வரன் (ஏழாலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நீர்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (15.07.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சீயாக் காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி(பன்னாலை).*
(34133)(40-11-12)
தகவல்: - செல்லத்துரை (தகப்பன்).

## சுப்பிரமணியம் சிறீஇராமலிங்கம் (பிரபு) B.Sc.

**(விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியர்)**
**திருநெல்வேலி கிழக்கு, வாலையம்மன் கோவில் தர்மகர்த்தா - பகுதி நேர விரிவுரையாளர், யாழ்.தொழிநுட்பக் கல்லூரி)**



திருநெல்வேலி கிழக்கு, இராமலிங்கம் வீதி வாலையம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிறீராமலிங்கம் (பிரபு - பகுதிநேர ஆங்கில ஆசிரியர் - திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவிததியாலயம்) 14.07.2004 புதன்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியகலாநிதி சுப்பிரமணியம், காலஞ்சென்ற சுப்பிரமணியம் செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும் சந்தானலட்சுமி (பொம்மி)யின சகோதரரும் வெங்கடேஸ்வரக்குருக்களின் மைத்துனரும் விஜயபாரதி (ஆசிரியை யாழ்.அத்தியார் இந்துக் கல்லூரி), ஸ்ரீகரன் (யாழ்பல்கலைக் கழக பரீட்சைக்கிளை), மேருகீஸ்வரன் (M.ஆட்ஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2004) வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அவரின் இல்லத்தில் (இராமலிங்கம் வீதி) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*51, இராமலிங்கம் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு.* (34137)(36-11-12)
தகவல்: சகோதரி, மருமக்கள்.


### வேலையாள்கள் தேவை

எமது கைத்தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு:
★ கணக்காளர்
★ விற்பனையாளர்
(ஆண்/பெண் இருபாலாரும்) தேவை நேரில் வரவும்
தொடர்புகளுக்கு: யாழ்.போன் சொப்
இல.10, நவீன சந்தை மேல்மாடி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### வேலையாள்கள் தேவை

எமது ஹோட்டலுக்கு
★ பில் கிளார்க் ★ சப்ளையர்
★ மேற்பார்வையாளர் ★ ரொட்டி மேக்கர்
ஆகியோர் தேவை
தொடர்புகளுக்கு: திறீ ஸ்டார் ஹோட்டல்
162, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி.36199)(40)

### முக்கிய அறிவித்தல்

**New Science College இல் புதிய கலைப்பிரிவு**

HI.CUL:- அதி முன்னணி ஆசிரியர்
TAMIL:- நாக.தமிழிந்திரன்
LOGIC:- S.R.J. சுதன்

ஆரம்பம்: தமிழ் - சனி, ஞாயிறு

2006 பிரிவு I - 7- 8
பிரிவு II - 10- 11
2005 : 8.00 - 9.00, 4.00 - 5.00
Note: முன்னைய மாணவர்களுக்கு அனுமதிக்கட்டணம் இல்லை
(34126)(40)

### நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜுன், அபிராமி, பிரகாஸ்ராஜ் நடித்த
**வானவில்**
காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C/35739)(36)

### நிரஞ்சனாஸ் சங்கானை

சில தினங்கள் மட்டும்
விஜய், திரிஷா நடித்த
**கில்லி** (ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு
THE GURU [இரவு 8.45]
(C-36291)(36)

### ராஜா யாழ்ப்பாணம்

சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார் நடித்த



**மாணஸ்தன்** (ரீல்ஸ்)
புதியநேரம்: 10.30,2.30,6.30,9.30. மட்டும்


# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை மார்க்கண்டேயப்பிள்ளை

**(ஓய்வு பெற்ற மின் அத்தியட்சகர் - இலங்கை மின்சாரசபை)**

சாளம்பை, புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மார்க்கண்டேயப்பிள்ளை அவர்கள் 14.07.2004 அன்று மதியம் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு.திருமதி வேலுப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் இரஞ்சன் (லண்டன்), சுகந்தன் (லண்டன்), சிவகௌரி, செந்தூரன், இராகுலன், சுபாநந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் மா.தேவகாந்தன் அவர்களின் அன்பு மாமனாரும் அமரர் தி.சீதேவிப்பிள்ளை, வே.கார்த்திகேசு, வே.முருகேசு ஆகியோரினதும் வே.ஏகாம்பரநாதன்(மட்டக்களப்பு), வே.தியாகராசா (கிராம உத்தியோகத்தர்) ஆகியோரினதும் அன்புச் சகோதரரும் அமரர் க.ஆழ்வார்ப்பிள்ளை (ஆசிரியர்), திருமதி ஆ.இராசம்மா அவர்களின் மருமகனும் திருமதி இ.விஜிதா(லண்டன்) அவர்களின் மாமனாரும் செல்வன் இ.சங்கீத் (லண்டன்), இ.உதேஷ் (லண்டன்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.07.2004 வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புலோலி மேற்கு பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாளம்பை,*
*புலோலிமேற்கு,*
*பருத்துறை.*
(சி-36200)(36-11-12)
தகவல்: மா.இராஜேஸ்வரி(மனைவி) பிள்ளைகள்.

## சுப்பிரமணியம் சோமசுந்தரம்

யாழ்ப்பாணம், கரணவாய் வடக்கு, கொற்றாவத்த, சட்டம்பியார் வளவைச் சேர்ந்தவரும், களுகண்ணாவை ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளருமான சுப்பிரமணியம் சோமசுந்தரம் 12.07.2004 கொழும்பில் காலமானார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும் தியாகராஜாவின் அன்புச் சகோதரரும் சுப்பிரமணிய சின்னம்மாவின் மூத்த மகனும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை தெய்வானையின் மூத்த மருமகனும் விஜயலட்சுமி (யாழ்ப்பாணம்), விஜேந்திரன் (கனடா), விஜயமாலினி (கனடா), விஜயஜாமினி (நியூஸிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் பரராஜசிங்கம் (யாழ்ப்பாணம்), பவானி(கனடா), கிருபானந்தவேல் (கனடா), ரமணி (நியூஸிலாந்து) ஆகியோரின் மாமனாரும் நிலானி, லாவண்யா, கஜனியா, துஷாரா, ரதீஸன், தனுஷன், ஷனன், பிருந்தன்(நியூஸிலாந்து) ஆகியோரின் பாட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக கொழும்பு ஜெயரட்ண மலர்ச்சாலையில் (எல்பிட்டிகல மாவத்தை) வியாழன், வெள்ளி (15/16.07.2004) ஆகிய இரு தினங்கள் வைக்கப்பட்டு யாழ்ப்பாணம் கரணவாய் வடக்கு கொற்றாவத்தை மயானத்தில் ஞாயிற்றுக்கிழமை (18.07.2004) காலை 10.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-36194)(36-11-12)
தகவல்: விஜயலக்ஷ்மி(மகள்) ரி.கௌரி(பெறாமகள்) T.P.2505178/2360140 021-2223044 (யாழ்.).

## திருமதி உமாதேவி ஜெயக்குமார்

திருமலையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்டவரான திருமதி உமாதேவி ஜெயக்குமார் 02.07.2004 வியாழக்கிழமை பிரான்ஸில் அகாலமரணமானார்.

அன்னார் அளவெட்டி வடக்கைச் சேர்ந்த ஜெயக்குமாரின் அருமை மனைவியும் காலஞ்சென்ற உருத்திரமூர்த்தி குருக்கள் நாகேஸ்வரி தம்பதிகளின் அருமை மருமகளும், திருமலையைச் சேர்ந்த சோமாஸ்கந்தக்குருக்கள், தியாகேஸ்வரி தம்பதிகளின் அருமை மகளும் தனுஜாவின் அன்புத் தாயாரும் சிவரஞ்சனா, சத்தியநாதன், சிவகுமார் ஆகியோரின் சகோதரியும் அருந்தவக்குமாரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2004) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறுமென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம.

*அம்பாள் கோயிலடி*
*அளவெட்டி வடக்கு*
*அளவெட்டி.*
(34134)(36-11-12)
தகவல்: திருமதி உ.நாகேஸ்வரி (மாமியார்).

## பிரதம நீதியரசர் யாழ். ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குணவர்த்தனா, வவுனியா ... மன்ற நீதிவான் எஸ்.விஸ்வநாதன் ... மாவட்ட நீதிபதிகளும், அரச அதிபர், துணைவேந்தர் ஆகியோரும் அடிக்கல்லை நட்டனர்.

இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ... சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம், யாழ். பள்ளிவாசல் மௌலவி பாசீர், யாழ். விகாராதிபதி காலிக்தேரர் ஆகியோர் கலந்துகொண்டு ஆசிவழங்கினர்.

அடிக்கல் நடப்பட்டதைத் தொடர்ந்து பிரதம நீதியரசர் மதத்தலைவர்களின் ஆசிகளைப் பெற்றார். தொடர்ந்து அத்திபார ஞாபகார்த்த நினைவுக்கல்லை திரைநீக்கம் செய்தார்.

அதன் பின் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் விசேட கூட்டம் இடம்பெற்றது.

யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் ம.சிவசூரிய, துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, யாழ். சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் எஸ்வானகுரு உட்பட ..., அரச சார்பற்ற அமைப்புக்களின் அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், நீதிச்சேவை அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

அதையடுத்து யாழ். நீதிமன்றம், மல்லாகம் நீதிமன்றம் ஆகியவற்றிற்கும் பிரதம நீதியரசர் சென்று அங்கு நீதிவான்கள், சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலிருந்து உலங்கு வானூர்தியில் புறப்பட்டு பிரதம நீதியரசரும் குழுவினரும் நயினாதீவு சென்றடைந்தனர்.

அங்கு நாக விகாரையிலும், நாகபூசணி அம்மன் ஆலயத்திலும் வழிபட்ட பின்னர் மாலை 5.30 மணியளவில் பலாலியில் இருந்து கொழும்புக்குப்புறப்பட்டனர்.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுடன், நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பி.டபிள்யூ.டி.ஜெயதிலகா, நீதி அமைச்சின் செயலாளர் எஸ்.கே.ஹம்லத், சட்டம், நீதி புனரமைப்புக்குழுவின் இயக்குநர் சுமித்ரா குணவர்த்தனா, யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா, யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா, சாவகச்சேரி நீதிபதி பா.சுப்பிரமணியம் ஆகியோரும் நயினாதீவுக்குக் கூடச்சென்றனர்.

(ஐ-3-150)

## பேச்சுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக அனைத்துக்கட்சிகளினதும் ஆதரவைப் பெறும் முகமாக எதிர்க்கட்சிகளின் தலைவர்களை அழைத்து பேசுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். இன்னும் சில தினங்களில் எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதி இது பற்றிக் கலந்துரையாடுவார்.

ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் தலைவர்கள் ஜனாதிபதியின் முடிவுக்கு தமது ஒத்துழைப்பை நல்குவார்கள் என உறுதியளித்துள்ளனர்.

அனைத்து அரசியல் கட்சிகளினதும் ஆதரவைப்பெற்றே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதில் அரசு உறுதியாகவிருக்கின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆதரித்து மக்கள் வழங்கிய ஆணையை அரசு நிறைவேற்றுவதில் உறுதியாகவிருக்கிறது - என்று அவர் தெரிவித்தார்.

(க)

## பேச்சை ஆரம்பிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜோசப் எம்.பி மேலும் தெரிவித்ததாவது:-

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையிலும், கருணா விவகாரத்திற்கும் முற்றுப்புள்ளி வைப்பதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கையைப் பொறுத்தே அரசுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு புலிகள் தயாராகவுள்ளனர்.

சமாதானப் பேச்சுக்கள், யுத்த நிறுத்தம் ஆகியவற்றில் விடுதலைப் புலிகள் மிகவும் பற்றுறுதியுடன் உள்ளனர். புலிகளின் இத்தகைய நிலைப்பாட்டை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கின்றது. கருணாவைப் பயன்படுத்தி புலிகளைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளைத் தமிழத் தேசியக் கூட்டமைப்பு கண்டிக்கின்றது. பேச்சுக்களை மண்டும் ஆரம்பிக்க வசதியாக ஆஸதிரேலியாவும், சர்வதேச சமூகமும் ஜனாதிபதிக்கும் அரசுதரப்பினருக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-13)

## சமாதானப் பேச்சுக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயன்றவிரைவில் அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாவிட்டால் யுத்தநிறுத்தம் முறிந்து போகும் ஆபத்தை உணர்ந்துள்ள நோர்வே அனுசரணையாளர்கள், இரு தரப்பையும் பேச்சு மேசைக்கு இழுத்து வருவதற்கான தந்திரோபாய உத்தி ஒன்றைத் தாங்களே வகுத்து முன்வைக்க முயன்று வருகிறார்கள் எனக் கூறப்படுகின்றது.

1994இல் ஜனாதிபதி குமாரதுங்கவின் முன்னைய அரசு பதவியேற்ற காலத்திலேயே அவர் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் குறிதது பிரஸ்தாபித்துள்ளார். 2000ஆம் ஆண்டில் அவரது அரசு உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்த முயன்ற சமயத்திலும் இடைக்கால நிர்வாகம் குறித்து முன்மொழியப்பட்டது.

எனவே, இவ்விடயத்தை புலிகள் புதிதாக முன்வைத்துள்ள யோசனையின் அடிப்படையில்லன்றி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்வைத்த பழைய திட்டமே என்ற முலாம்பூசி அதன் அடிப்படையில் - ஜே.வி.பியின் எதிர்ப்பின்றி - பேச்சைத் தொடங்குவதற்கு வாய்ப்புண்டா என்று நோர்வேத் தரப்பு பரிசீலித்து வருவதாகக் கொழும்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இவ்விவகாரம் தொடர்பாக நோர்வேயின் கொழும்புத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் மிக விரைவில் மீண்டும் ஒரு தடவை வன்னிக்குச் சென்று புலிகளின் தலைமையைச் சந்தித்துப் பேசுவார் - என்றும் அந்த வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

(க)

## நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள உறவினர்களின் வீட்டுக்குச் சென்றுவிட்டு அங்கிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் போதே இந்த விபத்து நேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைநதவர்கள் யாழ். போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சடலம் யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(எ-9-15)

## நிலக்கண்ணிவெடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணிவெடிகளைப் பயன்படுத்தி யுத்தங்களில் ஈடுபடும்போது எதிரிகளுக்கு உண்டாகும் சேதங்களை விடப் பொதுமக்களுக்கு ஏற்படும் இழப்புக்களே அதிகம் எனக் கணிப்பிடப்படுள்ளது.

மீள்குடியமர்வின் போதும், மீள் நிர்மாணத்தின் போதும் பெரும் குந்தகங்களை விளைவிக்கும் இந்நிலக்கண்ணி வெடிகளின பாவனை ஒழிக்கப்படுவதில் எமது அமைப்பு சிரத்தை காண்பிக்கிறது.

1995ஆம் ஆண்டு முதல் இலங்கையில் குறைந்தது 152 குடிமக்கள் நிலக்கண்ணி வெடிகளினால் பாதிக்கப்பட்டுள்ளார். எனினும், 2002ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து பொதுமக்கள் மத்தியில் கண்ணிவெடி தொடர்பான விழிப்புணர்வு அதிகரிக்கப்பட்டுள்ளது. எது எவ்வாறாயினும் கண்ணிவெடிகளை அகற்றுவது மாத்திரமே இப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைந்துவிடாது.

இலங்கை அரசும் புலிகளும் கண்ணிவெடிகளைப் புதைப்பதில்லை என்ற முடிவுக்கு வரும் போதே இப்பிரச்சினை உண்மையான தீர்வை எட்டியுள்ளது எனக்கருதலாம்.

தற்போது இரு அமைப்புகளுமே ஜெனீவா அமைப்பு ஆவணத்தில் கைச்சாத்திடவில்லை.

ஒட்டாவா மரபொழுங்கில் கைச்சாத்திடுவது பற்றி அரசின் உசார் நிலை அவதானிக்கப்பட்ட போதும்இது எப்போது இடம்பெறும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இந்த நிலைமை தொடர்ந்து நிடிக்குமானால் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு உதவியளிக்கும் நிதி நிறுவனங்கள் தமது செயற்பாடுகளில் இருந்து பின் வாங்கக் கூடும். ஏற்கனவே சில நாடுகள் தமது நிதி உதவியை மீள எடுத்துள்ளன என்று இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாரப்பத்திரிகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரியாத சில நபர்கள் பத்திரிகைப் பிரதிகளை வீதியில் போட்டுக் கொளுத்தியதுடன் பிரஸ்தாப நபரையும் விரட்டி விட்டனர். மோட்டார் சைக்கிள் அந்த இடத்திலேயே அநாதரவாகக் கிடந்தது.


தரம் 1 முதல் G.C.E.(O/L) வரை
இரண்டாம் தவணைப் பயிற்சிப்பரீட்சை
வினாப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும்
சுந்தர் வெளியீடு
844,ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம் ☎ 021 222 7086
(கோயில் வீதிச்சந்திக்கருகாமை)



NEW SCIENCE COLLEGE JAFFNA
புலங்கள்
By கருணாநிதி
Sat., Sun. 9.00 - 10.00
ஆரம்பம்: 17.07.2004
(34135(40))




"ஏர்கின்ஸ் பென்ஸ் ஓவர்சீஸ் ரவல்"
24மணி நேர சேவை
0777 915824/ 270452
★ உள்நாட்டு வெளிநாட்டு
விமானப் பயணச்சீட்டுக்கள் - குறைந்த செலவில்
(ஸ்ரீலங்கன், சிங்கப்பூர் ,இந்தியன், எமிரேற்ஸ் எயர்லைன்ஸ் கட்டார் எயர்வேஸ் போன்ற சகல விமானச் சீட்டுக்களும் பெறலாம்)
★ திகதி மாற்றம், விமானச்சீட்டு உறுதிப்படுத்துதல்
★ பாஸ்போட்/HOTEL BOOKING போன்ற சேவைகளுடன்,
★ சர்வதேச விமானப் பயணம் சம்பந்தமான சகல ஆலோசனைகளும் (வீசா உட்பட) வழங்கப்படும்
விவரங்களுக்கு : 56/15 ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம். (யாழ்.பெரிய தபால் கந்தோர்) ☎ : 021 222 3771
(36191)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சேதுநாதன் வசந்தாதேவி



உடுப்பிட்டி சந்தை வீதியைச் சேர்ந்த சேதுநாதன் வசந்தாதேவி காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து சேதுநாதனின் (செம்மணி வீதி, நல்லூர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற குமாரசாமி - மீனாட்சிப்பிள்ளையின் அன்பு மகளும் தங்கவேலாயுதம் (ஹொலண்ட்), ஆனந்தராஜா, விஜயராஜா (திருகோணமலை), ராஜரட்ணம் (திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுதர்சன், சுகந்தினி, சாந்தினி(பிரான்ஸ்), காலஞ்சென்ற காண்டீபன் (செந்தூரன்), ஜெயந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவானந்தி (ஆனைப்பந்தி - நயினாதீவு), விஜயகுமாரி, உதயகுமார், ஜெகசோதி (பிரான்ஸ்), காண்டீபன் ஆகியோரின் மாமியாரும் துஷ்யந்தினி, பிரியந்தினி (யாழ். இந்துமகளிர் கல்லூரி), விதுசன், துசாந்தன் (யாழ்.மத்திய கல்லூரி) சயந்தினி, பிரதாயினி, விஜித், கோவர்த், பிரசன்னா, கிருசாந், பிரியலக்சன் (மத்தியகல்லூரி), தர்மிகன், தர்சனா( O.L.R.) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 4.30 மணியளவில் (பழையநேரம்) தற்போது வசிக்கும் வெள்ளாந்தெருவில் (வலம்புரிப் பத்திரிகை காரியாலயத்தின் அருகில்) அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பையன்மணல் மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*9/3 வெள்ளாந் தெரு,*
*யாழ்ப்பாணம்.*
T.P. 0712533345
0776171380

(34142)(43-11-12)

தகவல்:
மகன்.

### கார்த்திகேசு முருகேசு சின்னத்துரை

(நெடுந்தீவு மேற்கு)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் 31, காட்டுக்கந்தோர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட கா.மு.சின்னத்துரை (ஓய்வு பெற்ற அதிபர்) 14.07.2004 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வள்ளியம்மையின் (ஓய்வுபெற்ற தாதி) அன்புக் கணவரும் ராஜராஜேஸ்வரி, புவனராஜேஸ்வரி (மேல்நீதிமன்றம்-வவுனியா), நகுலராஜேஸ்வரி (லண்டன்), கேதீஸ்வரராஜா (M.S.K. தொலைத் தொடர்பகம், திருகோணமலை), குருபரராஜா(பனை அபிவிருத்திச் சபை, கொழும்பு), பாலராஜேஸ்வரி (ஜேர்மனி), மங்களராஜேஸ்வரி (ஆசிரியை யா/விக்கினேஸ்வரா வித்தியாசாலை), சக்தீஸ்வரராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன் (கிராம அலுவலர் J/79) உமாசரண் மற்றும் விஜயகுமாரன் (லண்டன்), ரதிகலா, துஷ்யந்தினி (கொமர்ஷல் வங்கி), நித்தியராஜா (ஜேர்மனி), கருணாகரன் (M.P.C.S. ஊர்காவற்றுறை), சாந்தினி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*இல.31,காட்டுக்கந்தோர் ஒழுங்கை,*
*கச்சேரியடி, யாழ்ப்பாணம்.*
*0777-777981*

(34140)(43-11-12)

தகவல்:
குடும்பத்தினர்.


NEW SCIENCE COLLEGE
இணைந்த கணிதம் A/L-2006
Paper Class
Mon. -3.15 - 4.15 (p.m.) ப.நேரம்
ஆரம்பம்: 19.07.2004
By.P.Senthilnathan B.Sc.
(34136(40))

உடுவில் மகளிர் கல்லூரி
(FURTHER EDUCATION)
G.A.Q. புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
21.07.2004 (புதன் மாலை 3 மணிக்கு)
அனுமதிகளை அலுவலகத்தில் பெறலாம்.
மேலதிக விவரங்களுக்கு: இணைப்பாளர்
FURTHER EDUCATION
உடுவில் மகளிர் கல்லூரி.
உடுவில், சுன்னாகம்.
(சி-36172)
T.P: 222 3300 , 0773024252

உடன் தேவை
மின்சாரப் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு Bill Clerk, விற்பனையாளர்கள் உடன் தேவை. மின்சாரப் பொருள்கள் விற்பனையில் முன் அனுபவம் உள்ளவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு உடன் வரவும்.
மகேஸ் அன் சன்ஸ்
இல.03,நவீன சந்தை, சாவகச்சேரி.
(சி-36169) T.P. : 0712 370437

பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்
ஆரம்பம்
3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665, OFTRINGEN, SWISS.
(33927)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு 1 : 14.07.2004
பிரிவு 2 : 18.07.2004
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் இரண்டு பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதென்பதை மாணவர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
ஆர்வமுள்ள மாணவர்கள் அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.
இயக்குநர்,
IIS
100, Clock Tower Rd., Jaffna.
(C-36132)

புதிய பிரிவுகள் ஆரம்பம் 16-07-2004
Diploma in Hardware Engineering ஒரு மாதம்
உங்கள் கணினிகளை நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% செய்முறைப் பயிற்சிநெறி. எவரும் கற்கலாம். கணினி பற்றிய முன்னறிவு தேவையில்லை. ரஷ்ய தொழில்நுட்பம். தமிழிலேயே விரிவுரைகள்.
★ ஒரு பிரிவில் 10 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.
★ ஒவ்வொரு மாணவனுக்கு ஒரு புதிய கணினி வழங்கப்படும்.
★ பயிற்சி முடிவில் அக்கணினியை Assembling செய்து Software Instalation செய்யவேண்டும்.
1st Day Introduction of acomputer
2.Disassembling of the computer
2nd Day Casing and Power Supply
3rd Day Mother Board
4th Day RAM,ROM Speed, band width, system bus
5th Day Hard drive, Floppy drive Floppy disk CD-ROM
6th Day Processor
7th Day VGA card, Sound card, Network card, modem
8th Day Keyboard, mouse, speaker
9th Day Cables & Connectors
10th Day Assembling casing. Powerunit, Motherboard,Processor
11th Day I/O card Memory, Hard drive Floppy drive, CD drive
12th Day BIOS setting
13th Day Booting, DOS
14th Day Partition
15th Day Operating system instalation
16th Day Configuration Of VGA cards, Sound cards & Modems
17th Day About monitor & Printer
18th DAY Trouble shooting
19th Day Safety Maintenance
20th Day Software, Virus, Networking
Graduateship in Hardware Engineering ஒருவருடம்
இக்கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யும மாணவர்களுக்கு Institute of British Engineers ஆல் CERTIFICATE வழங்கப்படும். இவர்களில் உயர்கல்வியைத் தொடர விரும்புகிறவர்களுக்கு லண்டன் சென்று படிப்பதற்கான VISA வழங்கப்படும்.
Head Office: NORTH LANKA
பிரதான வீதி, சங்கானை.
(33822)(29-11-12)
Branch: கண்டி வீதி, நுணாவில், சாவகச்சேரி.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.

# பாதுகாப்பு அமைச்சரின் யாழ்.வருகை அரசின் போர் முனைப்பையே காட்டுகிறது

## பொது அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை15

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் யாழ். விஜயம் அரசின் போர் முனைப்பையே காட்டுகிறது.

யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஓர் அறிக்கையில் இவ்வாறு குற்றஞ் சாட்டியிருக்கிறது.

அந்த அறிக்கை வருமாறு:-

ஸ்ரீலங்கா பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவின், ஸ்ரீலங்கா இராணுவப் பலத்தை வலுவூட்டும் யாழ்மாவட்ட விஜயத்தை மீண்டுமொருமுறை போரைத் தமிழ் மக்களின் மீது திணிப்பதற்கான முன்னேற்பாடாகவே யாழ. மக்கள் கருதவேண்டிய நிலைப்பாடு உருவாகியுள்ளது.

போர் நிறுத்த உடன்படிக்கையை நிரந்தர சமாதானத்திற்கான முதல்படியாகவே தமிழ் மக்கள் கருதினர். ஆனால், அதனை நடைமுறைப்படுத்துவதில் முன்னைய ஸ்ரீலங்கா அரசும், தற்போதைய அரசும் காட்டிய அசமந்தப்போக்கும் அண்மைக்கால ஸ்ரீலங்கா படைகளுக்கு வலுவூட்ட மேற்கொள்ளுவதும், ஸ்ரீலங்கா பேரினவாதத்தின் வஞ்சனை குறித்த ஐயப்பாடுகளைத் தோற்றுவித்திருந்தது. இயல்பு, வாழ்க்கையையும், நிரந்தர சமாதானத்தின் பால் பெருவிருப்புக்கொண்டு அதுகுறித்த நகர்வுகளை எதிர்பார்த்திருந்த தமிழ்மக்களுக்கு அதி தீவிர யுத்தப் பிரியரான ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் விஜயமும் அவர் இராணுவ முன் காவலரண்களைப் பார்வையிட்டமையும் இராணுவ அதிகாரிகளுடன் படைப்பலத்தை வலுவூட்ட மேற்கொள்ளும் ஆலோசனைகளும், நிரந்தர சமாதானத்தின் மீது தற்போதைய அரசுக்கு பற்றுண்டா என்ற கேள்வியை உண்டாக்கியுள்ளது. ஸ்ரீலங்கா அரசின் போர்முனைப்பு தமிழ் மக்களது மனங்களில் வெறுப்பினைத் தோற்றுவித்துள்ளது. இவ்வகையிலான இராணுவ நோக்குக் கொண்ட நகர்வுகள், சமாதானத்திற்கான முன்னெடுப்புக்களைப் புறக்கணிப்பதாகவே அமைகின்றன. சமாதானத்திற்கான நம்பிக்கையூட்டலை ஓரங்கட்டி, சிங்களப் பேரினவாதத்திற்குத் தீனிபோடுவதன் மூலம் தமது அரச அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள ஸ்ரீலங்கா அரசு முயலுவதானது மீண்டும் போரைத் தொடங்குவதற்கான பேரினவாத முழக்கமென்பதைச் சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளும் என நாம் நம்புகின்றோம்.

மீண்டும் போரைத் தொடங்குவதற்கான முன் முயற்சிகளைத் தவிர்த்து, போரினால் ஏற்படும் பேரழிவுகளைத் தவிர்ப்பதற்காகவும் மக்களது வேணவாவாகிய நிரந்தர சமாதானத்தை எட்டுவதற்கு ஸ்ரீலங்கா அரசு துணிவுடனும், முனைப்புடனும் பேச்சுக் களத்தை இதயசுத்தியுடன் திறப்பதற்கான நடைமுறைகளை முன்னெடுகக வேண்டும் என யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக்கொள்கிறது -

- இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

### ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

காரைநகர்,ஜூலை15

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர் வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்குக் காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரச அதிபர் செல்வி பிரபா கந்தசாமி ஐயர் தலைமையில் நடைபெறவுள்ளது.(ஒ-73)

### தென்னை மரங்களில் 'மைற்' நோய்

வட்டுக்கோட்டை,ஜூலை15

தென்னை மரங்களில் தேங்காய்களைப் பாதிக்கும் 'மைற்' நோய் மீண்டும் வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் வேகமாகப் பரவிவருகின்றது.

தென்னை மரங்களில் காய்க்கும் இளம் குரும்பைகளில் மண்நிறத்தில் காணப்படும் மைற் நோயினால் குரும்பை, தேங்காயாக மாறாது பழுதடைந்துவிடுகிறது.

கடந்தகாலங்களில் மைற் நோயினைக் கட்டுப்படுதத கிராம அலுவலர்கள் மூலம் தென்னை அபிவிருத்திச் சபையினால் மருந்து வழங்கப்பட்டது. இதனால், இந்நோய் குறைவடைந்திருந்தது. தற்போது மீண்டும் இந்தநோய் வட்டுக்கோடடை, அராலி, சங்கரத்தை, சுழிபுரம், மூளாய், சங்கானை ஆகிய பகுதிகளில் வேகமாகப் பரவிவருகின்றது.

(ஒ-161)

### 'டயலொக்' கோபுரம் அமைப்பு

பருத்தித்துறை,ஜூலை15

தனியார் கையடக்கத் தொலைபேசி நிறுவனமான டயலொக் தனது சேவையை வடமராட்சிக்கு விஸ்தரிப்பதற்காக பருத்தித்துறையில் தொலைத தொடர்புக் கோபுரமொன்றை நிறுவி வருகின்றது.

தம்பசிட்டி - கல்லூரி வீதிச் சந்தியில் தனியார் காணியொன்றில் இக்கோபுரம் நிறுவும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. அடுத்தமாதமளவில் கோபுரம் அமைக்கும் பணி பூர்த்தியடைந்து தன்னியக்கத் தொலைபேசிகள் இயங்கவைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-118)

# மாணவருக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை15

புங்குடுதீவு தெய்வக்குழந்தைகள் இல்லத்தினால் புங்குடுதீவிலுள்ள சில பாடசாலைகள் மற்றும் முன்பள்ளி மாணவர்களுக்குப் பாடசாலைச் சீருடைகள், கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கப்படவுள்ளன.

புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம், ஸ்ரீகணேச மகாவித்தியாலயம், சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம், ஸ்ரீசித்திவிநாயகர் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளினதும் அறிவகம் முன்பள்ளி, மடத்துவெளி முன்பள்ளி, தலையப்பத்து முன்பள்ளி, பாரதி முன்பள்ளி, நசரேத் முன்பள்ளி, கலைவாணி முன்பள்ளி, தொண்டர் திருநாவுக்கரசு முன்பள்ளி, சிவலைப்பிட்டி முன்பள்ளி, இறுப்பிட்டி முன்பள்ளி, ஐங்கரன் முன்பள்ளி ஆகிய முன்பள்ளிகளினதும் மாணவர்களுக்கு இந்த அன்பளிப்புகள் வழங்கப்படவுள்ளன. (ஒ-201)

### பயங்கரவாதச் சட்ட வழக்குகளைத் துரிதப்படுத்த ஆலோசனை

கொழும்பு,ஜூலை15

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு அரசசட்டத்தரணிகளுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் ஆலோசனை கூறியுள்ளது.

இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகளில் பெரும்பாலானவற்றின் விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளபோதிலும் சுமார் 25 வழக்குகளுக்கான விசாரணைகள் தொடர்ந்தும் நிலுவையில் இருந்துவருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விசாரணைகளை மேலும் காலதாமதப் படுததாது, கூடியவிரைவில் முடிவுக்குக் கொண்டு வருமாறு சட்டமா அதிபர் திணைக்களம், அரச சட்டத்தரணிகளைக் கேட்டிருக்கிறது.

# பருத்தித்துறை – தம்பசெட்டி வீதி திருத்தப் பணி இடைநிறுத்தம்

பருத்தித்துறை,ஜூலை15

பருத்தித்துறை - தம்பசெட்டி வீதி திருத்தும்பணி இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளது. மிகமோசமாகப் பழுதடைந்த இவ்வீதியைத் திருத்துமாறு பல பொது அமைப்புக்கள் பருத்தித்துறை நகரசபையிடம் அடிக்கடி கோரிக்கை விடுத்திருந்தன.

இதனையடுத்து இவ்வீதியைத் திருத்த ஆரம்பித்த நகரசபை, வீதியின் ஆரம்பப் பகுதியில் சொற்பதூரம் வரை திருத்தஞ்செய்துவிட்டு மேற்கொண்டு திருத்தும்பணியை மேற்கொள்ளாது கைவிட்டது.

பருத்தித்துறை நகரில் உள்ள பிரதான மூன்று பாடசாலைகளுக்கும் கடற்கரை வீதியில் உள்ள கிராமங்களுக்கும் நகரப் பகுதியுடனான போக்குவரத்துப் பாதையாகவுள்ள இந்தவீதி சரியானமுறையில் திருத்தப்படாமையால் மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் வாகன சாரதிகள் இவ்வீதியால் பயணஞ்செய்வதில் பலசிரமங்களையும் அசௌகரியங்களையும் எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை -

மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக நீண்டகாலமாகச் சேதமடைந்த வீதியைத் திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வீதியைத் திருத்துவதற்கான கல், மண, தார் போன்ற பொருள்கள் வீதியோரமாக பறிக்கப்பட்டுள்ளன. இவ்வீதியைத் திருத்தும்பணி விரைவாக ஆரம்பிக்கப்படவுள்ளது. (ஒ-118)

### திருமலை துறைமுகத்தில் கப்பல் விபத்தில்

கொழும்பு,ஜூலை15

ஆஸ்திரேலியாவிலிருந்து திருகோணமலைத் துறைமுகத்திற்கு வந்த கப்பல் ஒன்று துறைமுகத்துக்குள் பாதாளமலைக் கடற்பகுதியில் விபத்திற்குள்ளாகியிருக்கிறது.

இதனால், கப்பலின் அடிப்பகுதி முற்றாகச் சேதமடைந்திருக்கிறது. 'ஒலிம்பிக்கல்ஸ்' என்னும் பெயரைக் கொண்ட இக்கப்பல், ஆஸ்திரேலியாவில் இருந்து கோதுமையை ஏற்றிக் கொண்டுவந்தது. கடந்த மூன்று தினங்களுககு முன் திருமலை துறைமுகத்தை வந்தடைந்த இக்கப்பல், நங்கூரமிட முயற்சித்தபோதே தரையில் தட்டி விபத்துக்குள்ளானது என அறிவிக்கப்படுகிறது.

தற்போது கப்பலை மீட்கும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க)

# 'ஒரு கிராமம் ஒரு பயன்' திட்டம்

கொக்குவில்,ஜூலை15

'ஒரு கிராமம் ஒரு பயன்' திட்டத்தின் கீழ அபிவிருத்தி செய்யப்படவென யாழ். மாவட்டத்திலிருந்து நான்கு கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவில் அல்லாரை, உடுவில் பிரதேச செயலர் பிரிவில் கந்தரோடை, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இருபாலை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இளவாலை ஆகிய கிராமங்களே தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இக்கிராமங்கள் உள்ளடங்கிய பிரதேச செயலர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்று கைத்தொழில் அமைச்சினால் இம்மாதம் 23ஆம், 24ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறைக்கு முன்னர் இத்திட்டம் தொடர்பான திட்டமுன்மொழிவினை அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஒ-76)



லண்டன், ருட்டிங் முத்துமாரியம்மன் கோயில் சிவயோகம் அறக்கட்டளையால் புற்று நோயாளருக்கான கொடுப்பனவு அண்மையில் யாழ். போதனா வைத்தியசாலையில் வைதது வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். கண் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் S.குகதாசன, வைத்தியசாலைக் கணக்காளர் கே.விஜயரகுநாதன், நிர்வாக முகாமைத்துவ உதவியாளர் அ.பி.குணசீலன் ஆகியோர் பணம்வழங்கும் பணியில் ஈடுபட்டிருப்பதையும் மற்றும் பணத்தைப் பெற்றுக்கொண்ட நோயாளர் சிலரையும் படத்தில் காணலாம். (10-15)

# கருணாவோடு எனக்குத் தொடர்பா? அடியோடு மறுக்கிறார் ஆனந்தசங்கரி

## நேரில் பார்த்ததுகூட இல்லை என அறிக்கை

கொழும்பு,ஜூலை15

புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவுடன் தனக்கு எதுவிதத் தொடர்பும் இல்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தான் கருணாவை தொலைக்காட்சியில் பார்ததும் அவரது குரலை வானொலியில் கேட்டும் மட்டுமே உள்ளார் என்று அறிக்கை ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார்.

டென்மார்க்கில் இருந்து அவர் அந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சில ஊடகங்களில் என்னையும் கருணாவையும் தொடர்புபடுத்திச் செய்திகள் வெளியாகியுள்ளன.

கருணா விவகாரம் ஆரம்பித்த உடனேயே இது விடுதலைப் புலிகளின் உள்விவகாரம் என்றும், இதனை அவர்களே பார்த்துக்கொள்வார்கள் என்றும் நான் கூறினேன். எவரும் எதுவித கருத்தும் கூறாது மௌனமாக இருந்த போது துணிந்து முதல்முதலாகக் கருத்துக் கூறியவன் நான்தான். இந்தச் செய்தியை எல்லா ஊடகங்களும் வெளியிட்டன.

கடந்த சில காலமாகச் சில சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளை மேற்கோள்காட்டி எனது பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் நோக்கோடு சில ஊடகங்கள் எனக்கு எதிராக விஷமப் பிரசாரஞ்செய்வது எனக்கு வேதனையைத் தருகிறது.

நான் கருணாவையும் அவரது பேச்சையும் தொலைக்காட்சியிலும், வானொலியிலும் மட்டுமே பார்த்தும், கேட்டும் உள்ளேன். எந்தவொரு நிலையிலும் தொலைபேசியிலோ அல்லது நேரடியாகவோ அவருடன் பேசியதோ அலலது அவரைச் சந்தித்ததோ கிடையாது. உண்மை இவ்வாறு இருக்கும்போது என்னைத் தொடர்புபடுத்தித் தவறான செய்திகளை வெளியிட வேண்டாமென ஊடகங்களைக் கேட்டுக்கொள்கின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## சாயி சிந்தனை

### மனமே எஜமான்



கடவுள் மனிதனை மர்மமான முறையில் படைத்திருக்கிறார். நம்மிடம் 6 நற்குணங்களும், அத்துடன் கூட ஆறுகெட்ட குணங்களும் சேர்ந்து உள்ளன. நம்பிக்கை, சாகசம், தைரியம், புத்தி, சக்தி, பராக்ரமம் இவை ஆறு நற்குணங்கள். இவற்றிற்கு விரோதமாக காமம், குரோதம், லோபம். மோஹம், மதம், மாற்சரியம் (ஆசை, வெறுப்பு, பேராசை, மயக்கம், அகந்தை, பொறாமை) என்ற தீய குணங்களும் உள்ளன. இவை ஆறும் படைப்பிலேயே ஏற்பட்டவை. இவை ஆறிற்கும் மனதே எஜமான். மனதைக் கட்டுப்படுத்த மனிதன் பல முயற்சிகள் செய்கிறான். அனைத்து முயற்சிகளும் வீணாகின்றன. காரணம் என்ன? மனதைக் கட்டுப்படுத்தச் சரியானவழி தெரியாததனால் மனதின் பின்னாலேயே அதைத் தொடர்ந்துசென்று, அதற்குக் கீழ்ப்படிகிறான். எவ்வாறு கற்பிக்க வேண்டும்? எங்கே கற்பிக்கவேண்டும்? எப்போது கற்பிக்கவேண்டும்? என்பதைப் பற்றி நன்கு புரிந்துகொள்ளவேண்டும். மனிதனிடம் உள்ள கெட்ட தன்மைகள் மூன்று. கோபம், வெறுப்பு,பொறாமை. இம்மூன்றும் மனிதனுக்கு நஞ்சானவை. மனிதமனம் மிகவும் களங்கமடைந்து, நஞ்சாக மாறிவிட்டது. மனிதமனம் நஞ்சாகி விட்டதால், நமது செயல்களும் நஞ்சாகி விடடன. மனத்தின் தூண்டுதலால் செய்யப்படும் அனைத்துக் கர்மங்களும் நஞ்சாக மாறுகின்றன. நமது கர்மேந்திரியங்களின் செயல்கள் அனைத்தும் நஞ்சாக மாறிவிடுகின்றன. கெட்ட நடத்தைகள் , கெட்ட சிந்தனைகள், தீயதிட்டங்கள், கெட்ட எண்ணங்கள் இவைகள் விலக வேண்டுமெனில், இதயத்தை அன்பினால் நிரப்பவேண்டும். மனது அன்புமயமாக மாறிய பின், செயல்களும் அன்புமயமாக மாறிவிடும்.

(ஆதாரம்: சனாதன சாரதி)

## பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 - 05 - 1936



மறைவு 15 - 07 - 1991

### அமரர் கணபதி செல்வராசா

*(ஓய்வுபெற்ற மின் இணைப்பாளர், காங்கேசன்துறை)*

நல்லவரே நம் நாயகமே!
கரம்கொடுத்து உனை நினைத்திருந்தோம்
க.. கூப்பி உனை வழிபட்டோம்
பரந்த மனம் படைத்தவரே
நிரந்தரமாய் எமைப் பிரிந்ததேன்?
ஓடிவிட்ட வரு'_ங்கள் பதின்மூன்று ஆகிவிட
க.ாலில் இட்ட பந்தாய்க் கலங்குகின்றோம் நாம் இங்கு
வாடிவிட்ட உன் சொந்தங்கள் இங்கு வழி ஏங்க
நாடி எமை வந்துதான் ஒரு முறை பாராயோ?

*நீங்காத நினைவுகளுடன்:*
அன்பு மனைவி,
பாசமிகு பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*பொ.ற்பது வீதி,*
*கொக்குவில் கிழக்கு.*

(34118) (24-13)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மரியன்னை பேராலய
முன்னாள் பங்குத் தந்தை
அருட்தந்தை

### அன்ரன் T.இராஜநாயகம்



அவர்களின் பிரிவால் நாம் ஆறாத் துயர்
அடைகின்றோம்.
"நித்திய சாந்தி அளித்தருளும் இறைவா"

பங்குத் தந்தையும்,
உதவிப் பங்குத் தந்தையர்களும், பங்குமக்களும்.

யாழ். மரியன்னை
பேரா.லயம்.

(34116) (24-13)

# பராமரிப்பு வேலைகளின் காரணமாக சனிக்கிழமைகளில் மின்சாரம் தடைப்படும்

## பிரதேச மின்பொறியியலாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை15

மின்சார சபையினால் குடாநாட்டின் குறிப்பிட்ட சில இடங்களில் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள் ளன. இதனால், நாளைமறுதினம் சனிக்கிழமை முதல் தொடர்ச்சியாக 6 சனிக்கிழமைகளில் குறிப்பிட்ட பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை யின் யாழ். பிரதேச பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

மின்சாரம் தடைப்படும் தினங்களும், பகுதிகளின் விவ ரமும் வருமாறு:-

நாளைமறுதினம் உரும்பிராய், கோண்டாவில், பொற்பதி வீதி, மருத்துவபீடப் பிரதேசம், யாழ். நகரப் பகுதி நீங்கலாக மாநகரசபைப் பகுதி ஆகியவற்றிலும் -

எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை - கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய பகுதிகளிலும் -

எதிர்வரும் 31ஆம் திகதி - இணுவில், தாவடி, சுது மலை, கொக்குவில், யாழ். நாச்சிமார்கோயிலடி, யாழ். நகரப்பகுதி, ஆனைக்கோட்டை நவாலி, மருதனார்மடம், மானிப்பாய், உடுவில் மற்றும் சங்குவேலி ஆகிய பகுதி களிலும் -

அடுத்தமாதம் 7ஆம் திகதி - புன்னாலைக்கட்டுவன், அச்செழு, அச்சுவேலி மற்றும் வடமராட்சி ஆகிய இடங் களிலும் -

அடுத்தமாதம் 14ஆம் திகதி - வட்டுக்கோட்டைப் பகுதி, பண்டத்தரிப்பு, மூளாய், இளவாலை, சங்கானை, சுன்னாகம், மல்லாகம், அளவெட்டி மற்றும் ஏழாலை ஆகிய பகுதிகளிலும் -

அடுத்தமாதம் 21ஆம் திகதி - குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயம் ஆகிய பகுதிகளிலும் -

காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை மின் தடை ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (10-5)

# வங்கியில் வைப்பிலிட்ட பணத்தில் ரூ.20 லட்சத்துக்கு மேல் அபேஸ்!

## சந்தேகத்தில் காசாளர்கள் மூவர் கைது

கொழும்பு,ஜூலை15

வாடிக்கையாளர் ஒருவரின் கணக்கிலிருந்து தாராள மாகப் பணம் எடுத்து தமது தேவைகளைப் பூர்த்திசெய்து வந்துள்ளார்கள் என்று சந்தேகிக்கப்படும் வங்கிக் காசா ளர்கள் மூவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு பிரிஸ்டல் வீதியிலுள்ள வங்கி யொன்றில் கணக்குவைத்திருந்த பெண் வாடிக் கையாளர் ஒருவரின் சேமிப்புக்கணக்கிலிருந்து இவர்கள் இருபது லட்சத்து 80 ஆயிரம் ரூபா வரையில் கையாடல் புரிந்திருப்பதாகப் பொலீ ஸார் தெரிவித்தனர். கொழும்பைச் சேர்ந்த மேற்படி பெண் வாடிக்கையாளர், 30 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவை வைப்பிலிட்டுவிட்டு வெளி நாடு சென்றிருந்தார் என்றும், அண்மையில் நாடு திரும்பிய அவர், குறிப்பிட்ட வங்கிக்குச்சென்று தனது கணக்கைச் சரிபார்த்தபோது வைப்பில் இருக்கவேண்டிய பணத்தில் 20 லட்சத்துக்கு மேல் குறைவாக இருப்பதைக் கண்டு அதிர்ச்சி யுற்ற அவர் பொலீஸ் ஊழல் ஒழிப்புப் புல னாய்வுப் பிரிவில் முறையிட்டார் என்றும் தெரிய வருகின்றது.

இதையடுத்து நடவடிக்கையில் இறங்கிய பொலீஸார் மேற்படி மூன்று காசாளர்களையும் கைதுசெய்து காவலில் வைத்து விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். பொலீஸ் விசாரணை முடிவுற்றதும் இவர்கள் நீதிமன்றில் ஆஜர்செய்யப்படவிருக்கின்றார்கள். (ப)

### வான் விற்பனைக்கு

டொல்பின் ஹயஸ் வான் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
222 6678
0777 550885

(34119) (24-13)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் கா. நல்லதம்பி

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

*தோற்றம்:* 01-11-1931 *மறைவு:* 16-06-2004

ஆசிரிய உலகின் ஆதவச் செல்வன் நல்லதம்பியின் நற்பணி பலபல. ஆரம்பக் கல்வியோடு ஆங்கிலக்கல்வியை மாணவர் மனம் கவர ஊட்டிய ஆசான், கடமையைக் கண்ணாகக்கொண்ட காவலன், கருத் தொருமித்துப் பழகும்பண்பாளன், விக்னேஸ்வராவின் வீறுநடைக்குத் துணைநின்ற உந்தன் தியாகப் பணியை நினைக்கிறோம்.

நிலைக்கும்; சாந்திபெறுக.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்,
விக்னேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி.

(C/36185)(42-13-24)

## நினைவஞ்சலி திருப்பலி அழைப்பு

மலர்வு 13 - 10 - 1948



உதிர்வு 26 - 04 - 2004

### திருமதி லிசியமலர் சுப்ரமணியம் (லிசி)

26.04.2004 அன்று பிரான்ஸில் காலமான இளவாலையைப் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி வித்துவான் அ.சந்தியாப் பிள்ளை - மேரி திரேசா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், சண்டிலிப்பாயைச் சேர்ந்த அருணகிரிநாதன் சுப்ரமணியம் அவர் களின் அன்பு மனைவியுமான லிசியமலர் அவர்களின் ஆன்ம சாந்திவேண்டி நிறைவேற்றப்படும் திருப்பலியில் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருப்பலி இடம்:
புனித அன்னம்மாள் ஆலயம்.
இளவாலை.

காலம்:
*17.07.2004 சனி காலை 8 மணி*

தொடர்பு:
அருள்திரு. மரியசெபஸ்ரியன் அ.ம.தி.
'தொடர்பகம்', 657/1, ஆஸ்பத்திரி றோட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்: (222) 2721

(சி-36183) (33-13-24)

## கேள்வி அறிவித்தல்

### பருத்தித்துறை நகராட்சி மன்றம்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விப் படிவங்கள் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் 8உம் அதற்கு மேறபட்ட தரங்களில் பதிவுசெய்த ஒப்பந்தகாரர்கள், கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள உரிய கேள்வி வைப்புப்பணம், கேள்விப் பத்திரப்பணம், பெ.சே. வரி செலுத்துவதன் பேரில் 2004ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் திகதி பிற்பகல் 3 மணிவரை வழங்கப்படும். பூர்த்திசெய்த கேள்விப்பத்திரங்கள் 2004ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் திகதி முற்பகல் 10மணிக்கு முன்பு பதிவு அஞ்சல் மூலமோ அல்லது கேள்விப் பெட்டியிலிடுவதன் மூலமோ ஒப்படைத்தல் வேண்டும். கேள்விக்கான கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 2004ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்விச் சபையால் பரிசீலனை செய்யப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவ ரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்.

காரணம் எவையும் காட்டப்படாது எக்கேள்வியையும் ஏற்க அல்லது நிராகரிக்க கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.

| வேலை விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | பெறுமதி சேர் வரி 15% | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் |
|---|---|---|---|
| 01. கடற்கரை வீதி | 250/- | 37/50 | 8,000/- |

மேலதிக விவரங்களைப் பருத்தித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி க.திருச்செல்வநாயகம்
செயலாளர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
2004-07-12.

(சி-36186) (26-13-24)

## மழைநீர் சேகரிப்புக் கண்காட்சி

மழைநீர் சேகரிப்புப் பற்றிய பல்துறைக் கருத்துக்களம்
(அழைக்கப்பட்டவர்களுக்கு மட்டும்)

இடம்: நாவலர் கலாசார மண்டபம் (நாவலர் வீதி, யாழ்ப்பாணம்)
காலம் **நாளை (2004.07.16) வெள்ளிக்கிழமை**
நேரம்: **முற்பகல் 9.30 மணி**
அமைப்பு: **இலங்கை மழைநீர் சேகரிப்பு அமையம்.**
**(யாழ்ப்பாணம் நீர் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் முகாமைத்துவத் திட்டத்துடன் - யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களும் இணைந்து)**

***அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.***

(34120)(34-13-24)

## மரண அறிவித்தல்

### Dr.கந்தசாமி பாலச்சந்திரன்

(RETIRED DEPUTY DIRECTOR, ANIMAL BREEDING, DAPH)

Dr.கந்தசாமி பாலச்சந்திரன் 12.07.2004 திங்கட்கிழமை கொழும் பில் காலமானார்.

அன்னார் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான V.கந்தசாமி தம்பதியரின் அன்பு மகனும் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லையா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செல்வநாயகியின் அன்புக் கணவரும் சுச்சரிதா, சுச்சந்திரா, ஜனார்த்தனன், சுரம்யா, முரளீதரன், கிரிதரன் ஆகியோரின் பாசமிகுந்த தந்தையும் வேந்தன், கிருஷ்ணா, கலா, ராதிகா ஆகியோரின் மாமனாரும் இராஜேஸ்வரி, கலாவதி, வத் சலா மற்றும் காலஞ்சென்றவர்களாகிய ஈஸ்வரச்சந்திரன், ஜெயச்சந் திரன், இராதாராணி, நிர்மலா ஆகியோரின் சகோதரரும் Dr.R.S.தன பாலசுந்தரம், காலஞ்சென்ற திருமதி இராமலிங்கம் மற்றும் திருமதி விஸ்வநாதன், Dr.C.பாலசுந்தரம், Dr.(திருமதி) ஸ்ரீபாலசுப்பிரமணியம், திருமதி இராசரத்தினம், Dr.(திருமதி) பத்மானந்தம், ஞானசேகரன், மாரிமுத்து, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் 44, ஆதேர்ஸ் பிளேஸ், தெகிவளை இல்லத்திலிருந்து இன்று (15.07.2004) வியாழக்கிழமை காலை பொரளையிலுள்ள ஜெயரத்தின நீத்தார் கொலுச்சாலைக்கு எடுத் துச் செல்லப்பட்டு, இறுதி மரியாதைக்காக வைக்கப்படும். பின்னர் இன்று மாலை 4.30 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.திருஞானசம்பந்தன்.
தொ.பே.இல.: 0112 731787

*44, ஆதேர்ஸ் பிளேஸ்,*
*தெகிவளை.*

(34115) (24-13)



யாழ்.நீதிமன்ற வளாகக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு யாழ்.மத்திய கல்லூரிக்குச் சமீபமாகவுள்ள பழைய நீதிமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்றது. அடிக்கல் நடுவதற்காக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையிலான குழுவினர் முதலில் யாழ். மேல் நீதிமன்றத்துக்கு வருகை தந்தார்கள். அங்கு பொலீஸாரின் அணிவகுப்பை பிரதம நீதியரசர் ஏற்றுக்கொள்கிறார்.




கட்டடத்திற்கான அடிக்கல் நடும் இடத்திற்கு நீதியரசர் அழைத்து வரப்படுகிறார்.யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன், மேல்.நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ் வரதராஜா ஆகியோரும் காணப்படுகின்றனர்.



பிரதம நீதியரசர் அடிக்கல் நடுகிறார்.



அடிக்கல்லின் பெயர்ப்பலகையை பிரதம நீதியரசர் திரைநீக்கம் செய்கிறார்



மதகுருமார்களை சந்தித்து ஆசிபெறுகிறார்.



யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்த நீதியரசரும் ஏனையோரும் நீதிமன்ற திரையரங்குச் சந்தியில் இருந்து ஊர்வலமாக மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படும் காட்சி.



வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் பிரதம நீதியரசர் உரையாற்றுகிறார்.



விசேட கூட்டத்தில் நீதி அமைச்சின் செயலாளர் எஸ்.கே.ஹம்லத் உரையாற்றுகிறார்.



விசேட கூட்டத்தில் யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா உரையாற்றுகிறார்.



சட்ட நீதி புனரமைப்பு இயக்குநர் சுமித்திரா குணவர்த்தனா உரையாற்றுகிறார்.

# ஹிங்குராங்கொட பிக்கு கொலை: சந்தேகத்தில் வேறொரு பிக்கு கைது!

ஹிங்குராங்கொட போதிருக்குராமய பௌத்த விகாரையின் பிரதமகுருவான வண.கடிகமுவே சுகத்தபால தேரரின் கொலைதொடர்பாக அங்கு முன்பு வசித்து வந்தவர் என்று கூறப்படும் வேறொரு பிக்கு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான இந்தப் பிக்கு பிரதம குருவுடன் நெடுங்காலமாகவே விகாரையின் உரிமை குறித்து குரோதம் கொண்டிருந்தார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக ஹிங்குராங்கொட பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

ஜூலை 8 ஆம் திகதி நடந்த சம்பவத்தையடுத்து சந்தேகத்துக்குரிய பிக்குவும் இன்னொரு மாணவ பிக்குவும் காணாமற்போயிருந்தனர் என்றும் பிரதம பிக்கு மரணமானதையடுத்து கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சந்தேகநபர் பொரலஸ்கமுவவில் வைத்து கைது செய்யப்பட்டதாகவும் பொலீஸார் கூறினர்.

இன்னொரு சந்தேகநபரான மாணவ பிக்கு தேடப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேற்படி விகாரையில் கருணாபிரிவைச் சேர்ந்த 14பேர் கைதானதையடுத்து மூன்று நாள்களின் பின்னர் பிரதம பிக்குவின் மீது கைக்குண்டு வீசப்பட்டிருந்ததும் சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்ததும் தெரிந்ததே.(ப)

# பெரும்புள்ளிகள் பலர்மீது லஞ்ச ஊழல் புகார்கள் பதிவு

லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் முன்னுள்ள பெரும்பான்மையான வழக்குகளில் முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொலீஸ் அதிகாரிகள் மற்றும் பெரும் வர்த்தகப் புள்ளிகள் போன்றோரே குற்றஞ்சாட்டப்பட்டவர்களாய் உள்ளனர் என்று கூறப்படுகின்றது.

சுமார் இரண்டாயிரத்துக்கும் மேலான வழக்குகள் புலனாய்வுக்காக ஆணைக்குழுவின் முன் தாக்கல் ஆகியுள்ளனவென்று தெரிய வந்துள்ளது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பணிப்பின் பேரில் கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து ஆணைக்குழுவின் புலனாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த வழக்குகளை புலனாய்வு செய்வதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பைக் கோரப்போவதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பியசேன ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தற்பொழுது ஆணைக்குழுவில் 94 ஆய்வாளர்கள் இருந்து வருகிறார்கள். மேலும் 20 அல்லது 15 ஆய்வாளர்கள் தேவைப்படுவதாகவும் ஆனால், 104 பேருக்கு மேல் புலனாய்வாளர்களாக ஆணைக்குழுவில் இருக்கமுடியாதென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ப)

## உளப்பூர்வமாக, நேர்மையான, உறுதியான திட்டங்களுடன்

# சமாதான முயற்சியை ஜனாதிபதி ஆரம்பித்தால் அதற்கு ஒத்துழைக்க ஐ.தே.கட்சி தயாராம்!

கொழும்பு,ஜூலை15

உளப்பூர்வமாக நேர்மையானதும் உறுதியானதுமான கொள்கைத் திட்டங்களுடன் ஜனாதிபதி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பாரேயானால் ஐக்கிய தேசிய முன்னணி அதற்கு முழு ஆதரவையும் வழங்கத் தயாராகவிருக்கின்றது. சமாதான முன்னெடுப்புகளுக்கு ஜே.வி.பி. இடையூறு விளைவித்தால் அதனை முறியடித்து சமாதானத்தை நிலைநாட்ட அனைத்து ஆதரவையும் வழங்குவோம் - என முன்னாள் அரசியல் விவகார அமைச்சரும் ஐ.தே.க.பேச்சாளருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கூறினார்.

நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவரின அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே பீரிஸ் இப்படிக் கூறினார்.

மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் வெளிவந்தவுடன் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவேன். இடைக்கால நிர்வாகம் தொடர்பாகப் பேசுவேன். யுத்த நிறுத்த உடன்படிக்கையைக் கடைப்பிடிப்போம் என ஜனாதிபதி அறிக்கை விட்டுள்ளார்.

ஆனால், அரசின் பங்காளிக்கட்சியான ஜே.வி.பி. இரவோடு, இரவாக 'நாட்டைப் பிரிக்கும் சமாதானப் பேச்சு வேண்டாம்: ஈழத்தை உருவாக்கும் இடைக்கால நிர்வாக சபையை அமைக்க விடமாட்டோம்' - எனப் போஸ்டர்களை ஒட்டியுள்ளது. அரசிற்குள்ளேயே வேறு ஓர் அரசு இயங்குகின்றது. இப்படியான நிலையில் ஜனாதிபதியால் எப்படிச் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்கமுடியும்? - என்றும் பேராசிரியர் கேள்வி எழுப்பினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் செய்தியாளர் ஒருவர் பேராசிரியரிடமே அக்கேள்வியை திருப்பிவிட்டார்.

"சமாதானப் பேச்சு உடன்ஆரம்பிக்கப்பட வேண்டும். இறுதிமுடிவு ஒன்று ஏற்படும்வரை வடக்கு - கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காகவே இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைக்கும் கட்டாயம் ஏற்பட்டுள்ளது. புலிகள் கேட்கும் எல்லாவற்றையும் கொடுக்கமுடியாவிட்டாலும் இடைக்காலக் கட்டமைப்புத் தொடர்பாகப் புலிகளுடன் பேசவேண்டும் என்கின்றது ஐ.தே.க.

"ஜே.வி.பியினரோ விட்டேனா பார் என முரண்டுபிடிக்கின்றனர். இப்படியான நிலையில் ஜனாதிபதி உங்களுடைய ஆதரவைக்கேட்டால் ஆதரவு வழங்குவீர்களா?' எனக் கேள்வி எழுப்பினர்.

"சமாதானம் ஏற்படவேண்டும் என்பதே ஐக்கியதேசிய முன்னணியின் கொள்கை.

"ஆனால், ஜனாதிபதி தன்னிச்சையாக - தான்தோன்றித்தனமாக - முடிவுஎடுக்கக் கூடாது. முன்னுக்குப் பின் முரணாகப் பேசாமல் ஒரேநோக்குடன் உறுதியாக இருக்கவேண்டும்.

"ஜனாதிபதி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினருடன் பேசும்போது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பாக முதலில் பேசத்தயார் என்றார். அடுத்த 24 மணிநேரத்திற்குள் நான் அப்படிக் கூறவில்லையே எதைப் பற்றிப் பேசினாலும் இறுதித்தீர்வு காணப்படும்வரை அவை நடைமுறைப்படுத்தப்படா என்று நாட்டு மக்களுக்கு உரையாற்றும்போது கூறுகின்றார். உறுதியான ஒருநிலைப்பாடு இல்லாத ஜனாதிபதியை நம்பமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

"எனவே ஜனாதிபதி சமாதானப் பேச்சுகள் தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவிக்கவேண்டும். நேர்மையான முறையில் பிரச்சினையைத் தீர்க்க ஜனாதிபதி முன்வருவாரேயானால் ஐக்கிய தேசியமுன்னணி அவருக்குப் பக்கபலமாக இருக்கும்" - என்றும் பேராசிரியர் பீரிஸ் கூறினார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் முன்னாள் அமைச்சர்களான எஸ்.பி.திஸநாயக்க எம்.பி., தயாரத்ன எம்.பி.,ஹேமகுமார நாணயக்கார எம்.பி., ரவீந்திர ரந்தெனிய எம்.பி.ஆகியோரும் உடன் இருந்தனர். (ஐ-க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## தவறிவிட்டது

திருநெல்வேலியைச் சேர்ந்த சின்னத்துரை அகிலன்பாபு என்பவருடைய வாகன சாரதி அனுமதிப் பத்திரமும் நாட்குறிப்பொன்றும் 10.07.2004 சனிக்கிழமையன்று திருநெல்வேலிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 72/28, பனிக்கர் வளவு, திருநெலவேலி என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P:077 6257854. (34098)

## கணனி விற்பனைக்கு

பாவனையில் உள்ள PENTEAM 4 COMPUTER விற்பனைக்குண்டு. (Scanner, Printer உட்பட). தொடர்புகளுக்கு: 0777 813933 (குகன்). (34087)

## வீணை விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள வீணை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: "ஆயர் பாடி", இல.33, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி (நேசிங் ஹோம் முன்பாக). (34114)

## வான் விற்பனைக்கு

சொந்தப் பாவனையிலுள்ள 59-XXXX
Toyota Dolpin வான் 12 A.C.
விற்பனைக்குண்டு. தொடர்பு:
*வளர்மதி உதிரிகள் வாணிபம்*
இல. 19, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.: 021-4590020 (34095)

## தேவை

யாழ். நகரின் பிரதான வீதிகளை அண்மித்த பகுதிகளில் 8 மாணவிகளுக்கு வாரத்தில் 2 நாள்கள் அழகுக்கலை வகுப்புகள் நடத்துவதற்கு விசாலமான அறை வாடகைக்குத் தேவை. தொடர்பு: T.P: 226 3365. (34084)

கல்பேட்ஸ் இறைச்சிக்கோழிகள் உடன் தேவை. கூடுதலான விலை தரப்படும். தொடர்பு: தாசன், 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (34113)

## மண் பாதைகள் புனரமைப்பு

வரணி,ஜூலை15

சாவகச்சேரி பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் சுமார் 21 மண்பாதைகளைப் புனரமைக்க அவை தெரிவுசெய்யப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட பகுதிக் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் அனுசரணையுடன் இப்பணிகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. உலக உணவுத் திட்டத்தின கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இவ்வேலைத் திட்டத்தில் பங்குபற்றும் பயனாளிகளுக்கு அரிசி, பருப்பு, சீனி போன்றவைகளே சம்பளத்துக்குப் பதிலாக வழங்கப்படும். கிராமிய ரீதியில் சகலரையும் இவ்வேலைத்திட்டத்தில் ஈடுபடுத்தி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இதன்நோக்கம் எனவும் தெரிவிக்கப்பட்டது. இதற்கான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது. (ஒ-170)

# மரண அறிவித்தல்கள்

## கனகசபை இரத்தினசிங்கம்



(திருநெல்வேலி)

திருநெல்வேலியைச் சேர்ந்த கனகசபை இரத்தினசிங்கம் நேற்று (14.07.2004) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - கனகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் செல்லம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - நாகம்மா (அளவெட்டி) தம்பதிகளின் மூத்த மருமகனும் பகீரதன் (கனடா), குமரேசன் (மேற்பார்வையாளர், யாழ்.பல்கலைக்கழகம்), தேவராசன், அசோகன் (மேற்பார்வையாளர், யாழ்.மாநகரசபை), சுகந்தன் (மலேசியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராசா (இளைப்பாறிய கிராம அலுவலர் J/110), காலஞ்சென்றவர்களான விஜயலட்சுமி, புஸ்பராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரகலா (கனடா), சுதாநந்தி, சோபனா ஆகியோரின் அன்பு மாமனாரும் சாருகா (கனடா), அபிராமி, குமுதினி, குலேந்திரன், கரிஷ் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-07-2004) வியாழக் கிழமை காலை 10.30 மணியளவில் (புதியநேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இ.செல்லம்மா *(மனைவி).*

6,மதவடி லேன்,
திருநெல்வேலி. (34111) (26-14-42)

## செல்லையா கந்தவேள் (சங்கர்)



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் உடுவில், லவ் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கந்தவேள் 13.07.2004 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அனனார் காலஞ்சென்றவர்களான செல்லையா - அன்னபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் வினுபாணந்தன், கலைவாணி, கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கிங்ஸ்லியின் அன்பு மாமனாரும் ஜெயலட்சுமி, தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கிருபாமூர்த்தி, காலஞ்சென்ற சத்தியமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2004) வியாழக் கிழமை பகல் 11.30 மணியளவில் (திருநாமு) "செல்வவாசா", உரும்பிராய் மேற்கு இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*உரும்பிராய் மேற்கு.* (34110)(24-14-42) குடும்பத்தினர்.

## பொன்னுத்துரை குலேந்திரன்

(AD)



அரச வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை குலேந்திரன் 13-07-2004 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் ஸ்ரீரங்கநாதன் (AD), காந்திமதி, யோகநாதன் (எரிபொருள் நிரப்பு நிலையம்), பாலேந்திரன் (U.K), கேதீஸ்வரன் (U.K) ஆகியோரின் அருமைச் சகோதரரும் கமலாதேவி, ஜெகநாதன் (யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர்), இராசலட்சுமி, கலைச்செல்வி (U.K), சிவசக்தி (U.K) ஆகியோரின் அன்பு மைத்துனரும் செந்தூரன், திவ்யா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஸ்ரீவாகீசன், ஸ்ரீபரன், ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், சுகேந்திரன், ஷனாதன், பிரியங்கா, பிருந்தன், ஹர்சா, யுபன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-07-2004) வியாழக் கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

*59/1, அரச வீதி,*
*நல்லூர்.* (C/36182)(32-42-14)

## குழுமச்சபை அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் சாரணர் பெற்றோர் குழுமச்சபை ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருமதி யோ.ஜெயராணி தலைவராகவும், செல்வி ப.சிவாஜினி செயலாளராகவும், திருமதி த.கலாநாயகி பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேற்படி கல்லூரியின் சாரணர் குழுவில உள்ள சாரணர்களுடைய பெற்றோரை ஒன்று திரட்டியதாக இச்சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. (ஒ-201)

## சமாதான விழிப்புக்குழு அங்குரார்ப்பணம்

பொலீஸாருக்கும் பொதுமக்களுக்குமான நல்லுறவைப் பலப்படுத்தும் நோக்கோடு சாவகச்சேரி பொலீஸாரினால் கைதடி மேற்குக் கிராம அலுவலர் பிரிவில் சமாதான விழிப்புக்குழு என்னும் அமைப்பொன்று கடந்த திங்கட்கிழமை மாலை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்திலே சாவகச்சேரி பொலீஸ நிலைய உதவிப் பொலீஸ் பொறுப்பதிகாரி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இக்குழுவின் தலைவராக கைதடி மேற்கு கிராம அலுவலர் சு.செல்வராசாவும் செயலாளராக நா.சிவச்செந்திநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர். (10-75)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

யாழ்மாவட்ட வை.எம்.சி.ஏயின் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (10-19)

# பாராட்டி வாழ்த்துகிறோம்



உடுவில் மகளிர் கல்லூரியின் 17வயதின் கீழ்ப்பிரிவு வலைப்பந்தாட்ட அணி வடக்கு - கிழக்கு மாகாண மட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று வெற்றிவாகை சூடியதைப் பாராட்டி வாழ்த்துகிறோம். இவ்வெற்றிக்கு வித்திட்ட *அதிபர் கலாநிதி செல்வி சி.வி.செல்லையா* அவர்களையும் *பொறுப்பாசிரியரான திருமதி சுனித்தா ஜெபரட்ணம்* அவர்களையும் *பயிற்றுவிப்பாளர்களான திரு A.அனந் தன், செல்வி P.பிரபா* ஆகியோரையும் பாராட்டுகிறோம்.

இவ்வெற்றியின் வீராங்கனைகளாகிய,

1. செல்வி S.ஜீத்தா
2. செல்வி S.அபிதா
3. செல்வி T.சிந்துபாமினி
4. செல்வி P.ஜோடனா
5. செல்வி S.ஜனனி
6. செல்வி T.கபிலாஜினி
7. செல்வி Y.இரதிபாலா
8. செல்வி Y.சுதர்சினி
9. செல்வி R.தீபா
10. செல்வி P.அகல்யா

ஆகியோரைப் பாராட்டித் தேசிய மட்டத்திலும் வெற்றிவாகை சூட வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் குழாம்,
உடுவில் மகளிர் கல்லூரி.

*உடுவில்,*
*சுன்னாகம்.* (C/36171)(42-14)

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
12 ☆ 06 ☆ 1930

உதிர்வு
12 ☆ 07 ☆ 2004



அருள்பணி

## அமரன் திலகரட்ணம் இராசநாயகம்

**L.ph. (Rome), S.T.L. (Rome), M.Ed. (Ottawa)**

இமயம் ஒன்று சரிந்ததுவோ? ~ இன்று
இடியொன்று எம் தலைமீது விழுந்ததுவோ?
மதம் கொண்ட மறவர் சிலர்
மதியாதெமை அடிமை கொண்டாட்கொண்டவேளை
சமூகமது தலைநிமிர்ந்து வாழவேண்டுமென மீனங்கொண்டு
சற்றேனும் சளைக்காமல் ஆலயமொன்றை
பிரமாண்டமாய் அமைத்து எம் மக்கள்
ஆன்மீகப் பலத்துடன் கல்விப் பலமும் பெற்றிட
அடித்தளமிட்டு ஆற்றிய சேவையை
பல்லாயிரம் நாக்கொண்டு பாடினாலும்
பகருதற்கெளிதாமோ? இறைபணியாளனே! ~ நீவிர்
எமைவிட்டுப் பிரிந்த செய்தி கேட்டு
ஏங்கித் தவிக்கின்றோம்! மேதினியில்
உம் ஆன்மா இறைவனில் அமைதிகாண
உள்ளத்தால் துதிக்கின்றோம் ஆண்டவனை!
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- புனித யூதா ததேயு ஆலய
பங்குத் தந்தையும், பங்குமக்களும்.

(34112) (24-14-42)